DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX COMMUNITY

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel: 647-344-6600

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA MORTGAGE SOLUTIONS INC.
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

உதயம் 1285 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 20, 2020

# ஒன்ராறியோவிலுள்ள வர்த்தக ஸ்தாபனங்களில் மாகாண அரசின் அதிகாரிகள் நேரடி பரிசோதனை..

## இன்று வெள்ளிக்கிழமை மாகாணத்தில் கடுமையான அறிவிப்புக்கள் வெளிவரலாம் என எதிர்பார்ப்பு



இன்று வெள்ளிக்கிழமை ஒன்ராறியோ அரசாங்கத்தால் விடுக்கப்படவுள்ள விசேட அறிப்பின் பிரகாரம் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு மக்கள் அதிகமாகக் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படும். இனிவரும் 28 நாட்களுக்கு ரொரன்ரோ மற்றும் பீல் பிராந்தியங்களில் கடுமையான கட்டுப்பாடுகள் அறிவிக்கப்படவுள்ளன.

கிறிஸ்த்துமஸ் பண்டிகையை முன்னிட்டு பெரிய வர்த்தக வளாகங்கள் (SHOPPING MALLS) மற்றும் வர்த்தக நிலையங்கள், ஆடைகள் விற்கும் பிரபல ஸ்தாபனங்கள் ஆகியவற்றிலும் மிகக் குறைந்த அளவி-லேயே வாடிக்கையாளர்கள் தகுந்த சுகாதாரப் பா துகாப்புடன் உள்ளே செல்ல அனுமதிக்கப்படலாம் எனவும் நம்பப்படுகின்றது.

மேலும் உடற்பயிற்சிக் கூடங்கள், சிகை அலங்கார நிலையங்கள். மற்றும் முக அலங்காரம் செய்யும் இடங்கள் மூடப்படலாம்.

அத்துடன் வீட்டுக்கு சென்று வீடுகளைச் சுத்தம் செய்வோர்க்கும் தடைவிதிக்கப்படலாம் என அறியப்படுகின்றது.

ஒன்ராறியோ மாகாணத்தில் குறிப்பாக ரொரன்ரொ பெரும்பாகத்திலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் கொரோனா நோய்த் தொற்றினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் காரணத்தால் மாகாண அரசு கடுமையான அறிவிப்புக்களை நாளை வெள்ளிக்கிழமை மாகாண பாராளுமனறத்தில் அறிவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று வியாழக்கிழமை மதியம் மாகாணப் பாராளுமன்றத்தில் விசேட அறிவிப்புக்களை வெளியிடுவதற்காக தேசிய மற்றும் பல்லின ஊடகங்களின் முன்பாக பேசிய மாகாண முதல்வர் டக்போர்ட் அவர்கள் சற்று விரக்தியடைந்த நிலையில் கருத்துக்களை பகிர்ந்து கொண்டதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

*(தொடர்ச்சி: பின்பக்கத்தில்)*

# பைடன் நிர்வாகத்தில் அமைச்சர் பொறுப்பை தான் ஏற்றுக் கொண்டால் மனைவி மிசெல் தம்மை விட்டுப் பிரிந்துவிடுவாராம்

### – நகைச்சுவையாகக் குறிப்பிட்ட ஒபாமா



அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி ஜோ பைடன் பதவியேற்கும்போது அவரது அமைச்சரவையில் தாம் இடம்பெறப் போவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியுள்ளார். இது தொடர்பாக தன்னிடம் கருத்துக்களைக் கேட்ட பத்திரிகையாளர்களுக்கு பதிலளிக்கையில், பைடன் அமைச்சர் பொறுப்பை ஏற்கும்படி கேட்டுக்கொண்டாலும் தாம் அதற்கு ஒப்புக்கொள்ளப் போவதில்லை என்றார் அவர். தாம் அவ்வாறு இணங்கினால் தமது மனைவி மிசெல் தம்மை விட்டுப் பிரிந்துவிடுவார் என்று ஒபாமா நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

மேலும், தம்மால் ஆன அனைத்து உதவிகளையும் பைடனுக்குச் செய்யத் தயாராய் இருப்பதாகக் கூறிய ஒபாமா, புதிய ஜனாதிபதிக்கு தமது அறிவுரை தேவையில்லை என்றும் குறிப்பிட்டார். இவ்வாறிருக்க, நூ-ல் வெளியீடு, அறக்கட்டளை நிறுவுதல், நெட்பிளிக்ஸ் நிறுவனத்துடன் தயாரிப்பு ஒப்பந்தம் உள்ளிட்டவை தொடர்பில் ஒபாமாவும் அவரது துணைவியாரும் சுறுசுறுப்பாகச் செயல்பட்டு வருகின்றனர் எனவும் அமெரிக்க செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8
416.568.4301, 905.471.4050

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

அறிவித்தல்களை உலகெங்கும் உடனுக்குடன் உங்கள் உறவுகளுக்கு கொண்டு செல்ல வேண்டுமா?
எமது கனடா உதயன் பத்திரிகையின் இணையத்தளமான www.uthyannews.ca இல் பிரசுரமாகும் அறிவித்தல்கள் மற்றும் அவசர விளம்பரங்கள் உதயன் பத்திரிகையிலும் அத்துடன் எமது சகோதர இணையத்தளங்களான www.nanban.ca மற்றும் www.voicefilankai.lk ஆகியவற்றில் பிரசுரம் செய்யப்படும்.
Voice of ilankai
தொலைபேசி இலக்கங்கள்: கனடா +1 416-587-0552 கொழும்பு: +94 777 555 026 யாழ்ப்பாணம்: +94 7666143 074 சென்னை: +91 784500 6977

# MORTGAGE SOLUTIONS

# $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS

# 416.298.2777

# $375 Mo.

www.mortgageSolutions.ca

## MONTHLY SAVING $2,478

## SAVE UPTO 75% REFINANCE



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

# MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள்
Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

GHURUS TOWING
Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire
We pay scrap up to $1000

NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

வேலைக்கு ஆட்கள் தேவை
Scarborough வில் அமைந்துள்ள பூக்கடை ஒன்றிற்கு வேலை ஆட்கள் தேவை.
மலர் மாலைகளை தயாரிக்கும் திறன் கொண்ட நபர் தேவை.
Varadhan:
(416) 288-1419

BASEMENT வாடகைக்கு உண்டு
Birchmount / Eglinton
சந்திப்பிற்கு அருகில்
2 bedroom basement with separate entrance
மற்றும் எல்லாவித வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Close to TTC, subway, & shopping.
குடும்பம் விரும்பத்தக்கது.
Call: (416) 821-2181

COMPUTER REPAIR
Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
VARUNAN:
(416) 894-6244

## உதயன் கதிரோட்டம்

# எம் தாய் மண்ணின் கல்வித் தளத்தின் மீது யார் ‘கண்கள்’ பட்டனவோ?

‘கல்வியே கருத்தனம்’ என்று மனதிற்கு வீரியம் தரும் இரண்டு சொற்களோடு உயர்ந்து நின்றது எமது வடக்கு மண். அங்கு பிறக்கின்ற ஒரு மாணவனின் தந்தை, விவசாயியாக இருந்தாலும்,அல்லது வர்த்தகம் செய்பவராக இருந்தாலும், அல்லது கற்றுத் தேர்ந்து அரச உத்தியோகங்களில் சிறப்புக்களோடு இருப்பவராக இருந்தாலும், அவர்கள் மூவருமே தங்கள் பிள்ளைகளுக்கு கல்விச் செல்வத்தை ஊட்டுவதிலேயே கவனத்துடன் செயற்பட்டார்கள். சொந்த நிலம் கொண்ட விவசாயியாக இருப்பினும் அல்லது கூலி விவசாயியாக இருப்பினும் சரி தங்கள் கஸ்டங்களை பிள்ளைகளுக்குக் காட்டாமல் அவர்களின் கல்விக்காக எதையும் செய்வோம் என்ற அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள் அந்த பெற்றோர் சமூகத்தினர்.

அவர்களின் தீவிர முயற்சியினாலும் அவர்களது பிள்ளைகளக்கு கிட்டிய தகுந்த ஆசிரியப் பெருந்தகைகளாலும், கல்வியில் உயர்ந்த எம் மண்ணின் மைந்தர்களும் மங்கைகளும் தற்போது உலகெங்கும் உள்ள பல நாடுகளில் உயர் பதவிகளில் அமர்ந்து அந்தந்த நாட்டு மக்களுக்கும் சேவையாற்றி வருகின்றார்கள்.

இவ்வாறான பல பெருமைகளைக் கொண்ட எம் தாய் மண்ணின் மாணவச் செல்வங்களுக்கு என்ன நடந்து விட்டது என்ற கேள்வியோடு தான் இவ்வாரக் கதிரோட்டத்தை உங்கள் முன்னால் படைக்கின்றோம்.

சில நாட்களுக்கு முன்னர் எமது மண்ணின் பாலகச் செல்வங்கள் தங்கள் ஐந்தாம் வகுப்பு புலமைப் பரீட்சையில் ஈட்டிய சாதனைகளை உலகெங்கும் கூவி நிற்கும் தமிழ் ஊடகங்கள் வாயிலாக வாசித்தும் கேட்டும் மகிழ்ந்தோம். எமது இணைய ஊடகங்களிலும் அவற்றை பதிவிட்டு எமது மார்பில் நாமே தட்டிக கொண்டோம். அதற்கு முன், சில மாதங்களுக்கு முன்னர் க.பொ. த பரீட்சையில் எங்கள் பிள்ளைச் செல்வங்கள் பெற்ற புள்ளிகளைப் பார்த்து பரவசமடைந்தோம்.

இந்த வெற்றிகளை எமது தாய் மண்ணில் வாழும் எம் மக்கள் மாத்திரம் கொண்டாடி மகிழவில்லை. உலகத் தமிழர்கள் அனைவருமே வெற்றிப் புன்னகை செய்தார்கள்.

ஆனால் நாட்களும் மாதங்களும் கடந்து செல்ல, அதே கல்வித் தளத்திலிருந்து எமது பார்வைக்கும் செவிகளுக்கும் வந்து சேர்ந்த செய்திகள் எம்மைச் சோர்வடையச் செய்துவிட்டன. எம்மைச் சுற்றி ஒரு அச்ச உணர்வு. நாம் வீழ்ந்து விடக் கூடாது என்று நம்பிக்கையான எண்ணங்கள் தோன்றுவதற்காக இந்த பக்கத்தை நாம் உங்களுக்காக சமர்ப்பிக்கின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மூன்றாம் வருட மாணவர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை 17ம் திகதி சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்ற நெஞ்சைப் பிழியும் கொடுஞ் செய்தி முதலாவதாக வந்தது

சிதம்பரநாதன் இளங்குன்றன் என்னும் பெயருடைய 23 வயதுடைய எதிர்கால மருத்துவத் துறைச் சிங்கம் ஒன்று வீழ்ந்து விட்டதே என்று நாமெல்லாம் கலங்கினோம். இந்த இழப்பை நாம் ஒரு செய்தியாகப் பார்க்கவில்லை. இன்னுமொன்றையும் நாங்கள் கவனித்தோம். அவர் எவ்வாறு மரணமானார் என்பதில் கூட எம் மக்களுக்கு அக்கறையில்லை. ஆனால் எதற்காக அவர் இறக்க வேண்டும் என்று கேட்டு கண் கலங்கினார்கள். அற்புதமான ஒரு “மூளை” எம்மிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டதே என்ற கவலை என்றும் ஆறாத ஒன்றாகிவிட்டது.

இது ஒரு பக்கம் சம்பவிக்க மேலும் வருத்தத்தை தரவல்ல செய்திகளும் வந்தவண்ணம் இருந்தன. யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த மாதம் 8 ஆம் திகதி மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்கு அமைக்கப்பட்ட தனிநபர் விசாரணை ஆயத்தின் சிபார்சுக்கமைய, சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை வழங்குவதற்கு பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபை பரிந்துரை செய்துள்ளது.

இதனடிப்படையில், நேரடியாகக் குற்றங்களில் ஈடுபட்ட, பல்கலைக்கழகத்தின் பெயருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்ட மூன்றாம் வருட மாணவர்களுக்கு அவர்கள் செய்த குற்றங்களின் தன்மைக்கேற்ப பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 946 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் அடிப்படையில் விசாரணை அதிகாரியினால் வகைப்படுத்தப்பட்ட தண்டனைகள் சிபார்சு செய்யப்பட்டிருந்தன. அவரது முன்மொழிவுகளைப் பேரவைக்குச் சிபார்சு செய்வதென இன்று புதன்கிழமை இடம்பெற்ற பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதான் மேற்படி முழுமையான செய்தியில் ஒரு பகுதி.

எமது தாய் மண்ணின் கல்வித் துறையின் உயர்ந்து நிற்கும் கோபுரமான யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திலிருந்து கிடைத்த செய்திகள் எம்மை கலக்கமடைய வைத்தன. அதேவேளை கைகலப்பில் ஈடுபட்ட மாணவர்களை பற்றி எண்ணியபோது கவலையாகவும் இருந்தது. ஆனால் பல்கலைக் கழக நிர்வாகம் தனது கடமையைச் செய்தது என்று நாம் ஏற்றுக்கொண்டு, பாதிக்கப்பட்ட மாணவர்களின் எதிர்காலத்தை வளமானதாக மாற்ற, தலைமைத்துவப் பண்புகள் கொண்ட நல்ல உள்ளங்கள் முன்வரவேண்டும்.

இவ்வாரப் பத்திரிகையில் எமது வாராந்த எழுத்தாளர் ‘நிலாந்தன்’ குறிப்பிட்டுள்ளதைப் போன்ற இளைய தலைவர்களை உருவாக்குவதற்கு அரசியல்வாதிகளை தள்ளி வைத்து விட்டு, ஏனைய தகைசார்ந்தவர்கள் தலைமை தாங்க வேண்டும். எமது மண்ணின் கல்வித் தளமும், கற்றவரின் வளமும் என்றும் தாழ்ந்துவிடாமலிருக்க நாம் தயாராக இருந்து காரியங்கள் ஆற்றவேண்டும்.

# இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்கிறார் நீதியரசர் விக்னேஸ்வரன்



இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக நீதியரசர் விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணிகள், பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகள், மனித உரிமை வல்லுனர்கள் போன்றவர்களை உள்ளிட்டக்கிய குழுவை நியமிக்கவுள்ளோம். அவர்கள் ஐக்கிய நாடுகள் அலுவலர்களைச் சந்திப்பார்கள். சர்வதேச நிறுவன அதிகாரிகளைச் சந்திப்பார்கள். சந்தித்து ஏன் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன் ஆஜர்ப்படுத்த வேண்டும் என்பது பற்றி அவர்களுக்கு எடுத்துரைப்பார்கள் என தெரிவித்துள்ளார் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரும் முன்னைய வடமாகாண முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் விரைவில் ஒரு முக்கியமான ஆராய்வுக் குழுவை நியமிக்க பூர்வாங்க ஏற்பாடுகளில் இறங்கியுள்ளோம். குறித்த குழுவில் எம்மோடு சேர்ந்தவர்களை விட சட்டத்தரணிகள், பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகள், மனித உரிமை வல்லுனர்கள் போன்ற பலர் இடம்பெறுவார்கள். அக் குழு அங்கத்தவர்கள் குறித்த ஐக்கியநாடுகள் கூட்டத்தில் கலந்துகொள்ள இருக்கும் நாடுகளின் பிரதிநிதிகளைத் தொடர்பு கொள்வார்கள். ஐக்கிய நாடுகள் அலுவலர்களைச் சந்திப்பார்கள். சர்வதேச நிறுவன அதிகாரிகளைச் சந்திப்பார்கள். சந்தித்து ஏன் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன் ஆஜர்ப்படுத்த வேண்டும் என்பது பற்றி அவர்களுக்கு எடுத்துரைப்பார்கள்.

அத்துடன் அவர்களுடன் சேர்ந்து ஒரு சர்வதேச விசாரணைப் பொறிமுறை பற்றி பேச வேண்டிய அவசியமும் எழுந்துள்ளது. அதாவது யுத்த குற்ற சான்றுகளைச் சேகரித்து பாதுகாப்பாக சேமித்து வைத்தல், எந்த வகையில் குற்றம் புரிந்த இலங்கையின் அரசியல் தலைவர்களையும், யுத்த கால படையணித் தலைவர்களையும் சர்வதேச நீதித்துறைப் பொறிமுறைகளுக்குள் கொண்டு செல்வது பற்றியும் ஆராய வேண்டியுள்ளது. போகப் போக விபரங்களை நான் தருவேன் என குறிப்பிட்டார்.

# COVID-19க்கான தீர்வு தெளிவானது

- முக மறைப்பொன்றை அணியுங்கள்
- உங்களின் வீட்டில் இல்லாதவர்களுடன் 2 மீ இடைவெளியைப் பேணுங்கள்
- உங்கள் வீட்டு அங்கத்தவர்களை மட்டும் உங்களின் நெருங்கிய தொடர்பில் வைத்திருங்கள்
- அடிக்கடி உங்கள் கைகளைக் கழுவுங்கள்



**பரவலைத் தடுத்தல் உங்களில் ஆரம்பிக்கிறது**
மேலும் அறிவதற்கு ontario.ca/coronavirus ஐப் பார்வையிடுங்கள்.

ஒன்ராறிரோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario



இந்திய செய்திகள்

# பூச்சிகளின் சத்தம் மூலம் 140 இனங்களின் வளர்ச்சி பற்றி இந்திய விஞ்ஞானிகள் ஆராய்ச்சி

பூச்சி இனங்களின் பன்முகத்தன்மையைக் கண்காணிக்க, பூச்சிகளின் சத்தம் விரைவில் பயன்படுத்தப்படுவுள்ளது. இதற்காக ஒலி சிக்னல் தொகுப்பை விஞ்ஞானிகள் ஏற்படுத்தி வருகின்றனர். பூச்சி இனங்களின் பன்முகத்தன்மையை அங்கீகரிக்க, உருவவியல் அடிப்படையிலான பாரம்பரிய வகைபிரித்தல் முறை துல்லியமாக இல்லை. இது பூச்சி இனங்களின் பன்முகத்தன்மையை தவறாக மதிப்பிடுவதற்கு வழிவகுக்கிறது. எனவே, இந்தச் சவாலை முறியடிக்க, பஞ்சாப் பல்கலைக்கழகத்தின் உயிரியல் துறை ஆராய்ச்சியாளர் டாக்டர் ரஞ்சனா ஜெய்ஸ்வரா என்பவர் பூச்சிகளின் சத்தங்களை வைத்து டிஜிட்டல் தொகுப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். இனங்கள் பன்முகத்தன்மை மதிப்பீடு மற்றும் கண்காணிப்பில், ஒலி சிக்னல் டிஜிட்டல் சேமிப்புகளை கருவியாகப் பயன்படுத்த முடியும். கைப்பேசி செயலி மூலம் இந்த ஒலி சிக்னல் சேமிப்பை பயன்படுத்தி பூச்சிகளின் பரிணாமத்தை தானியங்கி முறையில் கண்டறிய முடியும். மேலும், நாட்டில் உள்ள புதிய பூச்சி இனங்களையும் அடையாளம் காண முடியும். டாக்டர் ஜெய்ஸ்வராவின் இந்த நவீன ஆராய்ச்சி, பூச்சி இனங்களின் எல்லைகளை வரையறுக்கும் கட்டமைப்பில் உள்ள பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டுள்ளது. இவரது ஆய்வில், ஒலி சிக்னல்களுடன், டிஎன்ஏ வரிசை முறைகள் மற்றும் ஒலியியல் நடத்தை தரவுகளும் உள்ளடங்கியுள்ளன. இவர் தனது ஆய்வுக்கு பாச்சை இனப் பூச்சிகளை பயன்படுத்துகிறார். இவரது ஆய்வுக் கட்டுரை "விலங்கியல் அமைப்பு மற்றும் பரிணாம ஆராய்ச்சி" என்ற இதழில் வெளியாகியுள்ளது. அதில், பூச்சி இனங்களின் எல்லைகளை வரையறுப்பதில், பூச்சிகளின் குறிப்பிட்ட உயிர்வேதியியல் சிக்னல்கள் மிகவும் திறமையான, நம்பகமான கருவியாக உள்ளன என டாக்டர் ரஞ்சனா ஜெய்ஸ்வரா கூறியுள்ளார். இதன் மூலம் பூச்சி இனங்களையும், அதன் பன்முகத்தன்மையையும் துல்லியமாக மதிப்பிட முடிகிறது என அவர் தெரிவித்துள்ளார். இந்த ஆராய்ச்சி மூலம், இந்தியாவில் உள்ள சுமார் 140 வகையான பூச்சிகளின் பரிணாம உறவுகளை புரிந்து கொள்ள டாக்டர் ரஞ்சனா ஜெய்ஸ்வரா திட்டமிட்டுள்ளார். இந்த ஆய்வு உலக அளவில் அறிவியல் சமூகத்திற்கு ஒரு பரிணாம கட்டமைப்பை வழங்கும்.




# குருதி அழிவு சோகை, தசை நார் தேய்வு ஆகியவற்றுக்கு புதிய மரபணு சிகிச்சை



பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தின் உதவி பேராசிரியரான திரு சந்தீப் ஈஸ்வரப்பா, மத்திய அறிவியல், தொழில்நுட்பத் துறையின் ஸ்வர்ண ஜெயந்தி உதவித்தொகைக்கு (ஃபெல்லோஷிப்) தேர்ந்தெடுக்கப்பட்ட 21 நபர்களில் ஒருவராவார். தசை நார் தேய்வு, குருதி அழிவு சோகை, இரத்தம் உறையா நிலை போன்ற நோய்களுக்கு புதிய வகையான மரபணு சிகிச்சையை திரு சந்தீப் ஈஸ்வரப்பா முன்மொழிந்துள்ளார். இந்த நோய்களுக்குக் காரணமாக விளங்கும் மரபணு செயல்முறையை இந்தச் சிகிச்சையின் மூலம் கட்டுப்படுத்தலாம் என்று அவர் கூறுகிறார். திரு சந்தீப்பும், அவரது குழுவினரும் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். ஸ்வர்ண ஜெயந்தி உதவித்தொகையின் மூலம், இவர்கள் தங்களது ஆராய்ச்சியை விரிவுபடுத்த முடியும். அவர்களது பணி வெற்றியடையும் பட்சத்தில், தசை நார் தேய்வு, குருதி அழிவு சோகை, இரத்தம் உறையா நிலை போன்ற நோய்களுக்கு புதுமையான தீர்வாக அமையும்.



# ஜனாதிபதி பதவி என்பது ஒரு பொறுப்பேயன்றி வரப்பிரசாதம் அல்ல என்கிறார் கோட்டாபாய



"கடந்த ஒரு வருடமாக நான், ஜனாதிபதி பதவி என்பது ஒரு பொறுப்பேயன்றி வரப்பிரசாதம் அல்ல என்ற கொள்கையின் அடிப்படையிலேயே நான் செயல்பட்டேன். அதன்படி தேவையற்ற செலவுகள் விரயங்கள் மற்றும் பயனற்ற நடவடிக்கைகளை முற்றிலுமாக அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளேன்.

இந்த காலப்பிரிவில் நாங்கள் நீதித்துறைக்கோ அல்லது பொலிஸாருக்கோ எந்த வகையிலும் அழுத்தம் கொடுக்கவில்லை. நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் அனைத்தும் எந்தவொரு அரசியல் செல்வாக்குமின்றி தகுதியின் அடிப்படையிலேயே செய்யப்பட்டன. அரசியல் எதிரிகளை அடக்குவதற்காக சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யும் முறையை நாங்கள் முற்றிலும் நிராகரித்தோம். சட்டத்தின் ஆட்சியை நாம் எவ்வாறு உண்மையாக நிலைநிறுத்துகிறோம் என்பதை வார்த்தையால் அன்றி முன்மாதிரியாகக் காட்டினோம்".

இவ்வாறு தெரிவித்தார் இலங்கை ஜனாதிபதி கோத்தாபாய ரரிபக்ச.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2020-11-18 அன்று இரவு 8.30 மணிக்கு இலங்கையின் அனைத்து தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகளினூடாகவும் நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையாற்றினார்.

அதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தான் ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு வருடம் நிறைவானதை முன்னிட்டு அவர் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அப்போது அவர் மிகவும் உற்சாகமாக உரையாற்றினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவரது உரையின் ஒரு சிறுபகுதி கீழே காணப்படுகின்றது.

இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்பு இந்த நாட்டின் 69 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் என்னை உங்கள் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுத்தனர். அன்று எனக்கு பெரும்பான்மையான சிங்கள மக்கள் வாக்களித்தனர் என்பது உண்மை. பிரிவினைவாதம் தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தை ஆதரிக்கும் பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகள் மற்றும் சித்தாந்தங்களுக்கு முகங்கொடுத்து சிங்கள இனம் எமது மதம் தேசிய வளங்கள் மற்றும் பாரம்பரிய மரபுரிமைகள் அழிவுறும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றது என்ற நியாயமான அச்சம் இருந்ததால் அவர்கள் அணிதிரண்டனர்.

மக்கள் என்னிடம் முன்வைத்த முக்கிய வேண்டுகோள் நாட்டை காப்பாற்றுங்கள் என்பதாகும். இந்த குறுகிய காலத்தில் மக்கள் கோரியபடி நாட்டைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். மக்கள் இது பற்றி இனியும் அச்சப்படவோ சந்தேகப்படவோ தேவையில்லை.

எனது ஆட்சிக் காலத்தில் இனம் மதம் என்ற பேதமின்றி அனைத்து குடிமக்களுக்கும் நீதியை உறுதி செய்யும் அவர்களின் உரிமையை பாதுகாக்கும் ஒரு ஆட்சியை நிறுவுவேன் என்றும் இந்த நாட்டின் உச்ச அரசியலமைப்பின் படி நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பேன் என்றும் பௌத்த சாசனத்தை பாதுகாத்து போசிப்பேன் என்றும் அன்று ருவன்வெலிசாய புண்ணிய பூமியில் வழங்கிய உறுதிமொழியின் பிரகாரம் நான் எப்போதும் செயற்பட்டு வந்துள்ளேன்.

ஒவ்வொரு மாதமும் நான் மூன்று நிகாயக்களினதும் முன்னணி பௌத்த பிக்குகள் உள்ளடங்கிய ஆலோசனை சபையை சந்தித்து ஆட்சி குறித்த அவர்களின் ஆலோசனையைப் பெறும் நடைமுறையொன்றையும் நான் பின்பற்றி வருகின்றேன்.

நான் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பு மத தீவிரவாதிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக இந்த நாட்டில் பல உயிர்கள் பலியாகியிருந்தன. பாதாள உலக செயற்பாடுகள் தீவிரம் பெற்று நாடு முழுவதும் கொலைகளின் அலை ஆரம்பமாகியிருந்தது. இலங்கை சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரர்களின் மையமாக மாறியிருந்தது.

புலனாய்வுத்துறை மற்றும் பாதுகாப்புப் படைகள் பலவீனமடைந்திருந்த காரணத்தினால் நாடு பாதுகாப்பற்ற நிலையில் இருந்தது. தொல்பொருள் பெறுமதிவாய்ந்த வரலாற்று தளங்கள் கூட தீவிரவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன.

நான் ஆட்சிக்கு வந்ததும் நாட்டின் பாதுகாப்புப் படைப் பிரிவுகளுக்கு பொருத்தமான அதிகாரிகளை நியமித்து அவர்களது பொறுப்புகளை குறைவின்றி நிறைவேற்ற அவர்களுக்கு அதிகாரம் அளித்தேன். சீர்குலைந்திருந்த புலனாய்வுத்துறை சேவைகளை மறுசீரமைத்து அவற்றுக்கு புத்துயிரளிக்க நடவடிக்கை எடுத்தேன்.

அந்த வகையில் எந்தவிதமான தீவிரவாதமும் மீண்டும் தலை தூக்குவதற்கான சாத்தியத்தை நாங்கள் கட்டுப்படுத்தியுள்ளோம். போதைப்பொருளைக் கட்டுப்படுத்த மிகவும் முறையான மற்றும் செயற்திறமான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களைப் போன்று சிறைச்சாலைகளுக்குள்ளிருந்து போதைப்பொருள் கடத்தல் அல்லது பாதாள உலக நடவடிக்கைகளை மேற்கொள்ள இனியும் இடமில்லை. இந்த நாட்டில் மக்கள் இனியும் பாதாள உலக கும்பல்கள் மிரட்டி பணம் பறிக்கும் கும்பல்கள் மற்றும் மோசடி செய்பவர்களுக்கு பயந்து வாழ வேண்டியதில்லை. எதிர்காலத்தில் இந்த திட்டத்தை மேலும் பலப்படுத்த நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.






இலங்கை செய்திகள்



# யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சை முடிவுகளை விரைவாக வெளியிடுமாறு பணிப்பு!

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் வெளிவாரிக் கற்கைகளுக்கான பரீட்சை முடிவுகளை விரைந்து வெளியிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பணித்துள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நடந்த வணிகமாணி (பழைய பாடத்திட்ட) பரீட்சை முடிவுகள் தாமதமாவது குறித்து பரீட்சார்த்திகளினால் துணைவேந்தரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து இடம்பெற்ற பல்கலைக்கழக மூதவைக் கூட்டத்தில் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் பணிப்பாளரிடம் துணைவேந்தர் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் பற்றி பணிப்பாளர் மற்றும் கற்கை நெறி இணைப்பாளர் ஆகியோர் விளக்கமளித்தனர்.

உள்வாரியாக நடாத்தப்படும் பரீட்சைகளின் முடிவுகளை இரண்டு மாத காலத்தினுள் கையளிப்பதற்கான பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. அதே போலவே வெளிவாரிப் பரீட்சை முடிவுகளையும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துணைவேந்தர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மூன்றாம் வருட மாணவன் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை 17ம் திகதி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - வடமராட்சி மாதா கோவில்வீதி, துன்னாலை வடக்கு கரவெட்டியைச் சேர்ந்த சிதம்பரநாதன் இளங்குன்றன் (வயது-23) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த மாணவன் கோண்டாவில் கிழக்கு, வன்னியர்சிங்கம் வீதியில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து கல்வி கற்றுவந்திருக்கின்றார்.

அந்த வீட்டிலிருந்தே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனை இடம்பெற்றது. அதன் விபரங்கள் எமக்குக் கிடைக்கப்பெறவில்லை.

# கொரோனா தடுப்பூசியை இலங்கையின் பிரமுகர்கள் சிலர் பெறுகின்றனர் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது

இலங்கையிலுள்ள சில முக்கிய பிரமுகர்கள் சீனாவிடம் இருந்து கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். நளின் பண்டார மேலும் கூறியுள்ளதாவது, “தற்போது நாடளாவிய ரீதியில் கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். கொரோனா தொற்றுக்குள்ளாகிய பலர் உயிரிழந்துள்ள போதிலும், பிரேத பரிசோதனைகளின் பின்னரே அவர்கள் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்படுகிறது.

இது போன்ற அச்சுறுத்தலான நிலைமைகள் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். முழு நாடும் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள போதிலும் அரசாங்கத்திற்கு இது வசந்த காலமாக மாறியுள்ளது. வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் இலங்கையர்களை, நாட்டுக்கு அழைத்த வருவது குறித்து அரசாங்கம் அக்கறை செலுத்தாமல் இருக்கின்றது.

அவர்கள் நாட்டிற்கு வருவதற்காக பயணசீட்டை பெறுவதற்கு பெருந்தொகையான பணத்தை செலவிடவேண்டி ஏற்பட்டுள்ளது. நாட்டுக்கு வந்தவுடன், அவர்கள் தனிமைப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில், தனிமைப்படுத்தல் நிலையங்களாக ஹோட்டல்கள் பயன்படுத்தப்படும் போது, ஹோட்டல் உரிமையாளர்கள் ஆளும் தரப்பினருடைய ஆதரவாளர்களாக இருப்பதால் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் இலாபம் ஏற்படுத்தி கொடுக்கும் செயற்பாடாக அந்த முயற்சி அமைந்திருக்கின்றது.

சுகாதார அமைச்சர் மக்களை காப்பாற்றுவதற்காக கடலில் குதிப்பதாகவும், மந்திர நீர் நிரப்பப்பட்ட நீரை ஆற்றில் கலந்தும் நாட்டு மக்களுக்கு மூட நம்பிக்கையை ஏற்படுத்துகின்றார். ஆனால், பிரபுக்களின் குடும்பத்தை சேர்ந்தவர்கள், வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக சீனாவில் தயாரிக்கப்பட்டுள்ள, தடுப்பூசிகளை 70 தொடக்கம் 140 டொலர்கள் செலவில் பெற்றுக்கொண்டு பயன்படுத்தி கொள்வதாக தெரியவந்துள்ளது.

பிரபுக்களின் குடும்பத்தினர் எந்த தடுப்பூசிகளை பயன்படுத்தினாலும் எமக்கு சிக்கல் இல்லை. மாறாக நாட்டு மக்களுக்கும் அந்த வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படவேண்டும். ஆளும் தரப்பினருக்கு மக்கள் மீது உள்ள அக்கறையை விட தங்கள் மீதே அக்கறை அதிகமாக உள்ளது” என குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மோதல் சம்பவம் தொடர்பில் பரிந்துரைக்கப்பட்ட தண்டனைகள்




யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த மாதம் 8 ஆம் திகதி மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்கு அமைக்கப்பட்ட தனிநபர் விசாரணை ஆயத்தின் சிபார்சுக்கமைய, சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை வழங்குவதற்கு பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபை பரிந்துரை செய்துள்ளது.

இதனடிப்படையில், நேரடியாகக் குற்றங்களில் ஈடுபட்ட, பல்கலைக்கழகத்தின் பெயருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்ட மூன்றாம் வருட மாணவர்களுக்கு அவர்கள் செய்த குற்றங்களின் தன்மைக்கேற்ப பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 946 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் அடிப்படையில் விசாரணை அதிகாரியினால் வகைப்படுத்தப்பட்ட தண்டனைகள் சிபார்சு செய்யப்பட்டிருந்தன. அவரது முன்மொழிவுகளைப் பேரவைக்குச் சிபார்சு செய்வதென இன்று புதன்கிழமை இடம்பெற்ற பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் வருட மாணவர்கள் 3 பேருக்கு ஒரு வருட காலத்துக்குப் பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதற்கான தடையும், 4 பேருக்கு ஆறு மாத காலத்துக்கு பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதற்கான தடையும் விதிக்கப்படுவதோடு, தண்டனைக்குரிய 7 பேருக்கும் வழங்கப்படும் அத்தனை நிதியுதவிகளும் நிறுத்தப்படல் வேண்டும், கல்வி கற்கும் காலத்தினுள் விடுதிகளில் தங்குவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட வேண்டும், மாணவர் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்களில் பதவிகள் எவையும் வழங்கப்படகூடாது போன்ற தண்டனைகள் விசாரணை அதிகாரியினால் சிபார்சு செய்யப்பட்டிருந்தன. எனினும் இவற்றில் மாணவர்களுக்கான நிதியுதவிகளை நிறுத்துவதை தவிர ஏனைய சிபார்சுகளைப் பேரவைக்குப் பரிந்துரைப்பதற்கு பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபை முடிவு செய்துள்ளது.

இந்த 7 பேர் தவிர, கடந்த மாதம் 10 ஆம் திகதி முதல் உள்நுழைவதற்குத் தடைவிதிக்கப்பட்ட ஏனைய 14 பேருக்கும் அவர்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் உள் நுழைவுத் தடை விலக்கப்படவேண்டும் என்பதுடன், துணைவேந்தரினால் சம்பவம் தொடர்பில் எச்சரிக்கை வழங்கப்பட வேண்டும் என்றும், கல்வி கற்கும் காலத்தினுள் விடுதிகளில் தங்குவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட வேண்டும், மாணவர் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்களில் பதவிகள் எவையும் வழங்கப்படகூடாது போன்ற தண்டனைகளும் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ள பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. பேரவையின் இறுதித் தீர்மானத்தின் அடிப்படையில் மாணவர்களுக்கான தண்டனைகள் துணைவேந்தரினால் அறிவிக்கப்படும். கடந்த மாதம் 8 ஆம் திகதி இரண்டாம் வருட மாணவர்களுக்கும், மூன்றாம் வருட மாணாவர்களுக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் பெரும் மோதலாக உருவெடுத்திருந்தது. அதனைத் தொடர்ந்து சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என கலைப்பீடச் சபையினால் அடையாளப்படுத்தப்பட்ட 21 மூன்றாம் வருட மாணவர்களுக்கு மறு அறிவித்தல் வரை பல்கலைக்கழகத்தினுள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், பேராசிரியர் எம். நடராஜசுந்தரத்தை விசாரணை அதிகாரியாகக் கொண்ட தனிநபர் ஆயம் ஒன்று பேரவையினால் நியமிக்கப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. சம்பவத்துடன் தொடர்புபட்ட இரண்டாம் வருட, மூன்றாம் வருட மாணவர்கள் மற்றும் சம்பவத்தை நேரில் கண்ட அதிகாரிகள், அலுவலர்கள் அனைவரும் விசாரணை செய்யப்பட்டு கடந்த 11 ஆம் திகதி 130 பக்கங்களைக் கொண்ட முழுமையான அறிக்கை துணைவேந்தரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647) 619-3619

**மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள் 22. 11.2020**
**இணைய வழி நினைவேந்தல் .**

மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள் வணக்க நிகழ்வு, எதிர் வரும்.
22.11.2020 ஞாயிற்றுக் கிழமை ரொரன்ரோ.:.அமெரிக்க நேரம் காலை 10.30 மணிக்கு இணைய வழியின் ஊடாக ஆரம்பமாகி நடை பெறும் என்பதனை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.
மாவீரர்களின் பெற்றோர்கள், குடும்பத்தினர்,தேசப் பற்றாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் தங்களது இல்லங்களில் இருந்த படியே மாவீரர்களுக்கான நினைவேந்தலைச் செய்யுமாறு கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கின்றது.

ஓ! மாவீரரே!
அன்றொரு காலம் ------
இன்றொரு பொழுது ---
இனி வரும் நேரம் -------
நினைவுகள் நீளும்.
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

இணைய வழி நினைவேந்தலில் இணைந்து கொள்ள வேண்டிய விபரம் இங்கு இணைக்கப் பட்டுள்ளது. IP இணைய வழித் தொலைக் காட்சியின் ஒளியலை வரிசையின் ஊடாகவும் (Channel) அனைவரும் நினைவேந்தலைப் பார்க்க முடியும்.

Topic: மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு -2020
Time: Nov 22, 2020 10:30 AM America/Toronto

Join Zoom Meeting: https://us05web.zoom.us/j/85771629765?pwd=cW9jbGM5amx2b2JGY0creXVjNVNOZz09
Meeting ID: 857 7162 9765 Passcode: pgC82W

# இலங்கை அரசால் இந்திய மீனவர்களின் படகுகளை அழிக்க முடியுமா?

சிவா பரமேஸ்வரன் - மூத்த செய்தியாளர்



இதுவொரு ஓயாத பிரச்சனை. இரு நாடுகளுக்கு இடையேயான உரவில் இது ஒரு உரசலாகவே இருக்கிறது. ஆனால் இதற்கு நிரந்தரமான தீர்வு என்ன என்பது யாருக்கும் தெரியவில்லை.

இந்திய - இலங்கைக் கடற்பரப்பைப் பிரிக்கும் கடற்பகுதி மிகவும் சிறியது மற்றும் குறுகியது. அதுதான் அடிப்படையில் இரு நாட்டு மீனவர்களிடையேயான பிரச்சனைக்குக் காரணம்.

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையேயான தூரம் 18 மைல்கள். அதை நாட்டில் மைல் அல்லது கடல் மைல்கள் என்று கணக்கிட்டால் 20.7 மைல்கள் அல்லது 31 கிலோமீட்டர். (ஒரு கடல் மைல் என்பது நிலப்பகுதியில் அளக்கப்படும் அளவை விட 1.15 மடங்கு அதிகம்) போருக்கு முன்னரான காலகட்டத்தில் இருநாட்டு மீனவர்களிடையே பெரும் பிரச்சனை இருந்ததில்லை. இந்திய - இலங்கை கடற்பரப்பில் இருநாட்டு மீனவர்களும் மீன்பிடித்தனர். அந்தக் காலகட்டத்தில் இலங்கையின் வடகடல் பகுதியில் கடற்படையின் ரோந்து மிகவும் குறைவு. எனவே இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் நுழைந்து அவர்கள் கடற்படையின் கண்களின் தென்பட்டால், எச்சரிக்கப்பட்டு திருப்பியனுப்பப்படுவதே வழக்கமாக இருந்தது.

கடத்தல் கடல்

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் வடக்குப் பகுதியில் மீனவர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே இருந்தது. இந்திய இலங்கைக் கடற்பரப்பு மீன்பிடிக்கு அப்பாற்பட்டு கடத்தலுக்கான ஒரு பாதையாக இருந்துள்ளது என்பதே யதார்த்தம். போர்க் காலத்திலும் ஆயுதங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கடத்துவதற்கு இந்தக் குறுகிய கடற்பகுதி வசதியான ஒன்றாக இருந்தது.



போர்க் காலத்தில் இலங்கை மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத சூழல் இருந்ததை இந்திய மீனவர்கள் குறிப்பாகத் தமிழக மீனவர்கள் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர் என்று இலங்கை வடபகுதி மீனவர்கள் சங்கத்தினர் கூறுகின்றனர்.

இதில் தலையாயப் பிரச்சனை இருநாட்டுக்கும் இடையேயான கடல் எல்லையை வகுப்பதில் உள்ளது. சர்வதேச கடற்சார் சட்டங்களுக்கு அமைய இரு நாடுகளுக்கு இடையே குறைந்தது 36 நாட்டிகல் மைல் (41.4 மைல்) இருந்தால் மட்டுமே கடல் எல்லைகளை வகுக்க முடியும். ஆனால் இந்திய இலங்கை இடையே இருப்பதோ 18 நாட்டிகல் மைல் மட்டுமே. எனவே இப்பிரச்சனைக்கு சர்வதேச கடற்சார் சட்டங்கள் வாயிலாகத் தீர்வு காண்பது கடினம் என்கிறர் லண்டனைத் தலைமையகமாகக் கொண்டுள்ள சர்வதேச கடற்சார் அமைப்பின் முன்னாள் தலைவர் முகுந்தன்.

இந்தப் பிரச்சனையில் வேறொரு அரசியல் பரிமாணமும் உள்ளது. இந்திய இலங்கை உறவு புதிய ஆட்சியில் "நீறு பூத்த நெருப்பாக" இருக்கும் நிலையில் இந்திய மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட அல்லது அவர்களால் கைவிடப்பட்ட படகுகள் மூலம் இலங்கையின் வடபுலத்து மீனவர்களின் பிரச்சனையுடன் தொடர்புபடுத்தி அதைச் சிலர் மேலோங்கச் செய்து அதில் அரசியல் எனும் கேள்வியும் எழுந்துள்ளது.

இதனால் இருநாட்டு அரசுகளும் கவலை கொண்டுள்ளன என்பது யதார்த்தம். சர்வதேச கடல் எல்லை மிக மிக குறைந்த தூரம் இருப்பது இருநாட்டு மீனவர்களும் பாரம்பரியமாக அங்கு மீன்பிடித்துக் கொண்டிருந்ததும் தீர்வைச் சிக்கலாக்குகிறது. இதில் எத்தரப்பு விட்டுக் கொடுப்பது என்பதிலும் இழுபறி நிலவுகிறது.

"இறையாண்மைப் பிரச்சனை"

ஒரே பிரச்சனையில் ஒரே நாட்டில் இரு நீதிமன்றங்களின் தீர்ப்பு வித்தியாசப்படும் போது பிரச்சனை மேலும் சிக்கலாகிறது. இந்தக் கடற்பரப்பில் மீன்வளம் குன்றியுள்ளதால் இலங்கை பரப்பில் நுழைவதை இந்திய மீனவர்கள் ஒப்புக் கொள்கின்றனர். ஆனால் இது இலங்கை மீனவர்கள் குறிப்பாக வட பகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பெருமளவில் பாதிக்கிறது என்பதும் மறுக்க முடியாத உண்மை.



"இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் நுழைந்து எமது பகுதியை ஆக்கிரமிப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது. அது எமது இறையாண்மை தொடர்பான விஷயம் மட்டுமின்றி எமது மீனவர்கள் வாழ்வாதாரம் பற்றிய பிரச்சனையுமாகும்" என்று இலங்கை இலங்கை வெளியுறவு அமைச்சக உயரதிகாரி ஒருவர் என்னிடம் தெரிவித்தார். அவரது வேண்டுகோளுக்கிணங்க அவர் பெயரும் பதவியும் இங்கு குறிப்பிடப்படவில்லை.

கடந்த பல ஆண்டுகளாக சில நூறு இந்திய மீன்பிடிப் படகுகள் தமது எல்லைக்குள் நுழைந்ததால் கடற்படை அவர்களைச் சிறைபிடிக்க வேண்டியதாயிற்று, எனினும் பிரச்சனை தொடருகிறது என்கிறார் அந்த அதிகாரி. இந்தியத் தரப்பு தமது மீனவர்களும் படகுகளும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்று கோருவதை எமது மீனவர்கள் குறிப்பாக வட பகுதி தமிழ் மீனவர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர் என்றும் அவர் மேலும் கூறுகிறார். இதில் மீனவர்களின் ஆதரவைப் பெறுவதில் தமிழ்த் தலைவர்களும் அரசியல் செய்கின்றனர்.

முடிவில்லாத தொடர்கதையாக இந்தப் பிரச்சனை பல தசாப்தங்களாகவுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே இது உரசலாகவே இருந்தாலும் தீர்வு காண இருதரப்பும் இதயசுத்தியுடன் ஈடுபடவில்லை.

படகுகளின் நிலை

எனினும் கடந்த ஆண்டு இலங்கையின் சட்டமா அதிபர் 2015 முதல் 2018 வரை தடையை மீறி இலங்கைக் கடற்பரப்பில் நுழைந்த படகுகளை விடுவிக்கலாம் என்று பரிந்துரைச் செய்தார். அதன் அடிப்படையில் நீதிமன்றங்கள் இந்தியத் தரப்பின் படகுகளை விடுவித்தன.



இதையடுத்து இந்திய அதிகாரிகளும் சில மீனவர்களும் இலங்கைச் சென்று பயன்படுத்தக் கூடிய வகையில் இருந்த படகுகளை திரும்பப் பெற்றுச் சென்றனர். அவ்வகையில் பயன்படுத்த முடியாத அல்லது எடுத்து செல்வதற்கு தகுதியற்ற படகுகளை இலங்கையிலேயே விட்டுச் சென்றனர் என்று இலங்கை அரசு கூறுகிறது.

இந்தியத் தரப்பு மீனவர்கள் கூறும் கதையோ வேறு மாதிரியாகவுள்ளது. தம்மிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகளில் நல்ல நிலையிலிருந்த பல படகுகளைக் காணவில்லை, பயன்படக் கூடிய வகையில் இருந்த மிகக் குறைந்த அளவிலான படகுகளும்-மாறாகப் பயன்பாட்டுக்கு உதவாத சிதிலமடைந்த ஏராளமான படகுகளே கையளிக்கபட முன்வைக்கப்பட்டன என்று தமிழக மீனவர்கள் கூறுகின்றனர். திருப்பியளிக்கப்படுவதற்கு முன்வைக்கப்படும் படகுகள் பெறுமதி உள்ளவையா அற்றவையா என்பதை யார் முடிவு செய்வது? படகின் உரிமையாளரா அல்லது நீதிமன்றமும் இலங்கை அரச அதிகாரிகளுமா?

இதுவரை வெளிப்படையாகச் சொல்லாத ஒரு விஷயத்தை இலங்கைக் கடற்படை இப்போது கூறியுள்ளது. இதையும் வழக்கம் போல அவர்கள் கூறுவதை நம்புவது கடினம். அதாவது இலங்கை எல்லைக்குள் வரும் படகுகளை மறித்த போது அந்தப் படகுகளை இந்தியத் தரப்பு கைவிட்டனர், அதைக் கடற்படை இழுத்து வந்து கிராஞ்சி மற்றும் காரைதீவு கடற்படை முகாம்களுக்கு அருகில் கட்டிவைத்தனர். காலவோட்டத்தில் அவற்றில் மழை நீர் தேங்கி நுளம்புகள் (கொசுக்கள்) உற்பத்தியாகும் இடமாக மாறியது மட்டுமன்றி பார்ப்பதற்கே அசிங்கமாக இருப்பதால் கைவிடப்பட்ட படகுகளை அப்புறப்படுத்த நீதிமன்றத்தை நாடுவது எனும் முடிவை இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 27ஆம் திகதி கடற்படை எடுக்க வேண்டியதாயிற்று என்று அதன் அதிகாரி ஒருவர் கூறினார்.

நீதிமன்றத்திடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கை மற்றும் கடற்தொழில் அமைச்சகத்தின் வேண்டுகோள் மற்றும் சட்டமா அதிபரின் பரிந்துரைகள் ஆகியவற்றை அடுத்து, கைப்பற்றப்பட்ட 94 படகுகளை ஏலம்விட ஊர்காவற்துறை நீதிமன்றம் அக்டோபர் மாதம் உத்தரவிட்டது. இந்த மாதம் நான்காம் திகதி மன்னார் நீதிமன்றம் கைப்பற்றப்பட்ட 27 படகுகளை அழித்துவிட உத்தரவிட்டது. யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் படகுகளை அழிக்க உத்தரவிடவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். இந்தத் தீர்ப்புகளை அடுத்துக் கைப்பற்ற படகுகளை என்ன செய்வது எனும் பிரச்சனை முடிவுக்கு வந்துவிட்டதாக இலங்கைக் கடற்படை கருதியது.

"சேதாரமின்றி கையளிக்கப்பட வேண்டும்"

ஆனால் இந்த நீதிமன்றங்களின் தீர்ப்பு இந்திய ஊடகங்களில் வெளியானதை அடுத்து, தமிழகத்திலும் இந்தியாவின் தேசிய மட்டத்திலும் பெரும் விவாதத்தைக் கிளப்பியது. உடனடியாக இந்திய மீனவர்கள் ஆவேசக் குரலெழுப்பி தமது படகுகள் சேதாரமின்றி மீட்டுத்தரப்பட வேண்டும் என்று வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர்.



தம்மிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகளை ஏலம் விடவோ, அழித்துவிடவோ கூடாது அவை தம்மிடம் மீண்டும் கையளிக்கப்பட வேண்டும் என்று தமிழக மீனவர்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

தமிழகத்திலிருந்து கொடுக்கப்படும் அழுத்தம் புதுடில்லியில் எப்படியான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை இலங்கை வெளியுறவு அமைச்சகம் அறிந்துள்ளது. நீதிமன்றத்தின் உத்தரவை அமல்படுத்தினால் அதன் எதிர்வினை பாரதூரமாக இருக்கும் என்பதும் இலங்கை அரசுக்குத் தெரியும். அதை அவர்கள் எப்படிக் கையாளப் போகிறார்கள்? இந்த விஷயத்தில் சீனாவால் இலங்கைக்கு உதவ முடியாது என்பதை இலங்கை உணர்ந்துள்ளது.

இந்தியாவுக்குச் சாதகமாக நடந்து கொண்டால், இலங்கை மீனவர்களின் எதிர்ப்பை அரசு சந்திக்க வேண்டிவரும். இது வட பகுதி மட்டுமல்ல தென்னிலங்கையிலும் எதிரொலிக்கும். அதுமட்டுமின்றி நீதிமன்ற உத்தரவை மீறியதான பிரச்சனையையும் அரசு எதிர்கொள்ள வேண்டும். மாறாக நீதிமன்ற உத்தரவின்படி முடிவெடுத்தால் இந்தியாவின் கோபத்துக்கு இலங்கை ஆளாக வேண்டியிருக்கும். அதேபோல் இந்தியாவிலும் மீனவர்கள் அரசுக்கு எதிராக கோபமாக உள்ளனர்.

இந்திய அரசின் பாராமுகம்?

தமிழக மீனவர்கள் விஷயத்தில் இந்தியாவின் மத்திய அரசு பாராமுகமாக நடந்துகொள்கிறது, கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றவில்லை என்று "உதயனிடம்" தெரிவித்தார் தமிழ்நாடு மீனவர்கள் சங்கத்தின் ஒரு தலைவரான ராமேஸ்வரத்தைச் சேர்ந்த போஸ்.



"மீனவர்களின் படகுகளை அழிக்க இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது மிகவும் வருந்தத்தக்க செயல், இது இருநாட்டு அரசும் உரிய முறையில் பேசி தீர்க்கப்பட வேண்டிய நீண்டகாலப் பிரச்சனை" என்றும் கூறுகிறார் போஸ்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் நுழையும்போது முன்னர் அங்குள்ள நீதிமன்றம் அவர்கள் மீது அபராதம் விதித்து படகுடன் திருப்பியனுப்புவதே முறையாக இருந்துள்ளது என்றும் அவர் கூறுகிறார்.

இந்தியாவின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் கடந்த 2014ஆம் ஆண்டு இராமேஸ்வரத்தில் "கடல் தாமரை" என்றொரு திட்டத்தை ஏற்படுத்த தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் வழி செய்யும் என்று கூறியதை நினைவு கூர்ந்த போஸ், அந்தத் திட்டத்தில் மீனவர்கள் பிரச்சனையை இருநாட்டு அரசுகளும் இணைந்து கையாளும், மீனவர்களும் படகுகளும் உடனடியாக மீட்கப்படும், மீனவர்களுக்கு மானிய விலையில் எரிபொருள் போன்ற அம்சங்கள் முன்வைக்கப்பட்டிருந்தாலும் அவற்றில் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்கிறார்.

இலங்கை அரச தரப்போ இந்திய மீனவர்களையும் படகுகளையும் கைப்பற்றுவது அரசின் நோக்கமல்ல, அதேவேளை வட பகுதி மீனவர்களின் நலன்கள் காக்கப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது என்று கூறுகிறது.

இலங்கை கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்த விஷயம் குறித்து ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேசியுள்ளதாகவும் விரைவில் இதற்கு தீர்வு காணப்படும் என்கிறார்.

# கிராமத்திலிருந்து வந்ததால் என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று ஸ்டாலின் நினைத்துவிட்டார்: முதல்வர் பழனிசாமி பேச்சு



ஸ்டாலினுக்கு தினந்தோறும் என்னைப் பற்றி நினைத்தால்தான் தூக்கமே வரும். தினந்தோறும் அறிக்கை விட்டு அறிக்கை நாயகனாக வேண்டுமானால் ஸ்டாலின் திகழலாமேயொழிய, நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய எந்தக் காலத்திலும் உங்களுடைய கட்சியும் வராது, உங்களுடைய ஆட்சியையும் மக்கள் கண்டது கிடையாது என முதல்வர் பழனிசாமி பேசினார். முதல்வர் எடப்பாடி பழனிசாமி சேலம் மாவட்டம், மேட்டூர், வனவாசியில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்தார். பின்னர் அவர் பேசியதாவது:“நீர் மேலாண்மைத் திட்டத்தின் மூலமாக தமிழக அரசு சிறப்பான முறையில் செயல்பட்டதன் விளைவாக 20192020இல் இந்திய அளவிலே தேசிய விருதைப் பெற்றிருக்கின்றோம். இந்தத் துறையில் மட்டுமல்ல, பல துறைகளில் தேசிய விருதுகளைப் பெற்று சாதனை படைத்த அரசு எங்களுடைய அரசு என்பதைப் பெருமிதத்துடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

நீர் மேலாண்மைத் திட்டத்தின் மூலமாக, ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் அனைத்தும் தூர்வாரப்பட்டன, கால்வாய்கள் நவீனமாக்கப்பட்டன.நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்தோம். அதன் மூலமாக, என்றைக்கும் இல்லாத அளவிற்கு இன்றைக்கு டெல்டா மாவட்டப் பகுதிகளில் அரசு கொள்முதல் நிலையத்தில் 32 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்து சரித்திரச் சாதனையைத் தமிழக அரசு படைத்திருக்கின்றது.கடந்த காலங்களில் 23 லட்சம் மெட்ரிக் டன் நெல்தான் அரசு கொள்முதல் நிலையத்தில் கொள்முதல் செய்தார்கள்.

23 லட்சம் மெட்ரிக் டன் எங்கே? 32 லட்சம் மெட்ரிக் டன் எங்கே? ஆகவே, அரசு எந்த அளவிற்கு சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.அதேபோல, இன்றைக்கு கரோனா வைரஸ் நோய்த்தொற்றுப் பரவல் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றது. எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் வேண்டுமென்றே திட்டமிட்டு, டெல்லியைப் பார், கேரளாவைப் பார் என்று குறை சொன்னார்கள். இப்பொழுது நீங்கள் டெல்லியையும், கேரளாவையும் பாருங்கள். ஆனால், இப்பொழுது பார்க்க மாட்டேன் என்கிறீர்கள். கரோனா வைரஸ் நோய்த் தொற்று தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கிறதென்றும், கேரளாவிலும், டெல்லியிலும் குறைந்திருக்கிறதென்றும் அன்றைய தினம் சொன்னார்கள்.இன்றைக்கு அந்த இடங்களில் அதிகமாகியிருக்கிறது.

தமிழக அரசு சரியான முறையில் நடவடிக்கைகள் எடுத்த காரணத்தினால், கரோனா நோய்த்தொற்றுப் பரவல் கட்டுப்படுத்தப்பட்டு, படிப்படியாக குறைந்து கொண்டிருக்கின்றது. மற்ற மாநிலங்களில் அதிகரித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், தமிழ்நாட்டில் குறைந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு படிப்படியாக வேளாண் பணிகள் 100 சதவீதம் நடைபெற்று வருகின்றன.தொழிற்சாலைகளும் 100 சதவீதப் பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. படிப்படியாக இயல்பு நிலை திரும்புவதற்கு அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதற்குப் பலன் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலினுக்கு தினந்தோறும் என்னைப் பற்றி நினைத்தால்தான் தூக்கமே வரும். முதலில், இந்த ஆட்சி ஒரு வாரம்கூட தாங்காது, ஒரு மாதம் தாங்காது, 6 மாதம் தாங்காது, ஒரு வருடம் தாங்காது என்று சொன்னார்.

இப்பொழுது, மூன்றாண்டுகள் நிறைவு பெற்று நான்காவது ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதிமுக அரசு சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் நிஞ்றி 8 சதவீதம் இருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. கரோனா வைரஸ் தொற்று இருக்கின்ற காலகட்டத்தில் கூட, புதிய, புதிய தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிற்கு வருகின்றன. கரோனா வைரஸ் நோய்த்தொற்று ஏற்பட்ட மார்ச் மாதம் முதல் இப்பொழுது வரை அதிகமான தொழிற்சாலைகள் தொடங்கிய ஒரே மாநிலம் தமிழ்நாடுதான்.வேளாண்மையில் முதலிடம், தொழிற்சாலைகள் தொடங்குவதில் முதலிடம், சுகாதாரத் துறையில் முதலிடம், கல்வியில் முதலிடம் என எல்லாவற்றிலும் முதலிடத்தில் தமிழ்நாடு வந்து கொண்டிருக்கிறது. ஆனால், ஸ்டாலினால் இதனைப் பொறுக்க முடியவில்லை. ஏதோ பழனிசாமி கிராமத்திலிருந்து வந்திருக்கிறார், இவரால் ஒன்று செய்ய முடியாது என்று நினைத்தார்.

அனைத்துத் துறைகளிலும் சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறோம்.தேசிய விருதுகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். வேண்டுமென்றே திட்டமிட்டு தினந்தோறும் பத்திரிகை மற்றும் ஊடகங்கள் வாயிலாக அறையில் இருந்துகொண்டே ஏதாவது ஒரு அறிக்கை விடுகிறார். ஒரு நாளாவது வெளியில் வந்திருக்கிறாரா? அறையில் இருக்கும்போதுகூட, கையில் உறை, கண்ணாடி அணிந்து கொண்டுதான் இருக்கிறார். அங்கு என்ன வைரஸா வரப் போகிறது? அவர் ஒருவர்தான் தனியாக இருக்கிறார். இங்கே கூட நாம் எல்லாம் இருக்கிறோம். ஆகவே, நாட்டு மக்களுக்கு உழைக்கக்கூடிய ஒரே இயக்கம் அதிமுக, ஒரே அரசு அதிமுக அரசு.தமிழ்நாடு முழுவதும் 4 மாவட்டங்களைத் தவிர அனைத்து மாவட்டங்களுக்கும் நேரடியாகச் சென்று, மாவட்டங்களில் என்னென்ன வளர்ச்சி திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எந்த அளவிற்கு நடைபெற்றிருக்கின்றது போன்ற விவரங்களைக் கேட்டறிந்தேன்.

கரோனா வைரஸ் நோய்த் தடுப்பு பணிகளில், மாவட்ட நிர்வாகம், மக்கள் நல்வாழ்வுத் துறை, வருவாய்த் துறை போன்ற துறைகள் எவ்வாறு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்ற விவரத்தை ஆய்வு செய்து, இன்னும் கூடுதல் கவனம் செலுத்தி கரோனா வைரஸ் நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தி, ஆலோசனைகள் வழங்கியதன் விளைவாக இன்றைக்கு தமிழ்நாட்டில் கரோனா வைரஸ் நோய்ப் பரவல் கட்டுப்படுத்தப்பட்டு, குறைந்திருக்கிறது. வேண்டுமென்றே தினந்தோறும் அறிக்கை விட்டு அறிக்கை நாயகனாக வேண்டுமானால் ஸ்டாலின் திகழலாமேயொழிய, நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய எந்தக் காலத்திலும் உங்களுடைய கட்சியும் வராது, உங்களுடைய ஆட்சியையும் மக்கள் கண்டது கிடையாது.

திமுக ஆட்சியில் நாட்டு மக்களுக்கு என்ன நன்மை செய்தார்கள்? ஆனால், நாங்கள் எவ்வளவு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம், நாட்டு மக்களுக்கு எவ்வளவு நன்மைகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன போன்றவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். வேண்டுமென்றே அரசின் மீது பழி சுமத்துவது, அமைச்சர்கள் மீது பொய்யான, அவதூறான செய்திகளை பத்திரிகையில் வெளியிடுவது, இதைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார். இதையெல்லாம் நிறுத்திவிட்டு, ஆக்கபூர்வமான கருத்துகளை மக்களுக்குச் சொல்லுங்கள். அதன் மூலமாக எதிர்க்கட்சி வரிசையிலாவது அமர்வதற்கு முயற்சி செய்யுங்கள்”. இவ்வாறு முதல்வர் பழனிசாமி பேசினார்.

# மருத்துவக் கலந்தாய்வில் பங்கேற்ற 4 மாணவர்களுக்குக் கரோனா தொற்று

நேற்று முதல் நாள் மருத்துவக் கலந்தாய்வில் பங்கேற்ற மாணவர்களுக்கு நடத்தப்பட்ட சோதனையில் 4 மாணவர்களுக்குக் கரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதனால் 4 மாணவர்களையும், அவர்களுடன் இருந்தவர்களையும் தனிமைப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கான மருத்துவக் கலந்தாய்வு நேற்று தொடங்கியது. நேரு உள் விளையாட்டரங்கில் தகுந்த பாதுகாப்பு இடைவெளியுடன் தினமும் மருத்துவக் கலந்தாய்வு நடைபெறுகிறது.

இதில் முதல் மூன்று நாட்கள் 7.5% உள் ஒதுக்கீடு மற்றும் சிறப்புப் பிரிவு மாணவர்களுக்கான கலந்தாய்வு என அறிவிக்கப்பட்டது. நேற்று முதல் நாள் என்பதால், 7.5% உள் ஒதுக்கீடு பெறும் அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் கலந்தாய்வு நடந்தது. இந்நிகழ்ச்சியில் முதல்வர் பழனிசாமி கலந்துகொண்டு, அதற்கான சேர்க்கை ஆணையை வழங்கினார்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் கலந்தாய்வு முடிவில் 313 மாணவர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் அரசுப் பள்ளி மாணவர்கள் தங்கள் பெற்றோர்களுடன்




கலந்துகொண்டனர்.மருத்துவக் கலந்தாய்வில் சான்றிதழ் சரிபார்ப்பு உள்ளிட்ட விஷயங்கள் உள்ளதால், ஆன்லைன் மூலம் கலந்தாய்வு இல்லை. நேரடிக் கலந்தாய்வு நடைபெறும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. ஆனால் மாணவர்கள், பெற்றோர்களுக்குக் கரோனா பரிசோதனை முடிந்தபின்னரே நேரடிக் கலந்தாய்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று கலந்தாய்வுக்கு வந்த மாணவர்களுக்குக் கரோனா பரிசோதனை நடத்தப்பட்டது.

இதில் 4 மாணவர்களுக்குக் கரோனா தொற்று கண்டறியப் பட்டது. ஆனால், அவர்களுக்கு அறிகுறியற்ற தொற்று இருப்பது தெரியவந்தது.உடனடியாக அந்த மாணவர்கள், அவர்களது பெற்றோருக்குத் தகவல் கொடுக்கப்பட்டு அவர்கள் நேரடிக் கலந்தாய்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை. அவர்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அவர்களுக்கான சான்றிதழ் உள்ளிட்டவை காணொலி மூலம் சரிபார்க்கப்பட்டு அவர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டதாக மருத்துவக்கல்வி இயக்குனரக அதிகாரிகள் தெரிவித்தனர்.21 ஆம் தேதி முதல் பொதுப் பிரிவினருக்கான கலந்தாய்வு நடக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரோனா கட்டுப்பாடுகளுடன் நடைபெறும் கலந்தாய்வுக்காக வெளிநாடு, வெளி மாவட்டங்களிலிருந்து இருந்து வரும் மாணவர்களுக்காக உணவு, வாகன வசதி, தங்கும் இடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.இந்தக் கலந்தாய்வில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் 24,712. ஏற்றுக்கொள்ளப்பட்டவை 23,707. இதில் மாணவர்கள் 8,765 பேர், மாணவிகள் 14,942 பேர் பங்கேற்க உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# செக்கு எண்ணெய் மூலம் வஉசி ஓவியம் வரைந்த மாணவி

வ.உ.சி.யின் நினைவு நாளை முன்னிட்டு திருநெல்வேலி சிவராம் கலைக்கூட மாணவியும், பாளையங்கோட்டை புனித இக்னேஷியஸ் கான்வென்ட் 6ம் வகுப்பு மாணவியுமான இரா. தீக்ஷனா, வ.உ.சி. உருவப்படத்தை செக்கில் ஆட்டி எடுக்கப்பட்ட எண்ணெய்யில் கருப்பு வெள்ளை ஓவியமாக 100 சதுர அடியில் வரைந்து ஆச்சரியப்படுத்தினார்.திருநெல்வேலி சந்திப்பு மதிதா இந்து மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இந்த ஓவியம் வரையும் நிகழ்வு நடைபெற்றது. ஓவியத்தை ஒருமணி நேரத்தில் மாணவி வரைந்து சாதனை படைத்துள்ளார். மாணவியை மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி பிரிவு மாநகர காவல் உதவி ஆணையர் எஸ்.சேகர், ம.தி.தா பள்ளி தலைமை ஆசிரியர் உலகநாதன், கல்விச் சங்க மேலாளர் சட்டநாதன், வ.உ.சி இலக்கிய மாமன்ற செயலாளர் கோ.கணபதி சுப்பிரமணியன், சிவராம் கலைக்கூட தலைமை பயிற்சியாளர் சிவராமகிருஷ்ணன்,



கலைக்கூட நிறுவனர் கணேசன் மற்றும் பலர் பாராட்டினர். மாணவியின் பெற்றோர் ராஜசேகர், ஜனனி உடனிருந்தனர்.

# துட்ட கைமுனு தாய் வழியிலும் தந்தை வழியிலும் நாக வம்சத்தவன் ஆவான்

கனடா - நக்கீரன்

துட்ட கைமுனு தாய் வழியிலும் தந்தை வழியிலும் நாக வம்சத்தவன் ஆவான். அவனது தாயார் விகாரமாதேவி கல்யாணி (கலனி) இராச்சியத்தை ஆண்ட நாக மன்னன் மகளாவாள்.

இப்போது விகாரமாதேவியை மணம் செய்த காக்கைவண்ண தீசனது முன்னோர்கள் பற்றிப் பார்ப்போம்.

விஜயன் (கிமு 543 - 505) 38 ஆண்டுகள் இலங்கையை ஆண்ட பின்னர் வாரிசு இல்லாது இறந்து போகிறான். அடுத்த ஓராண்டு காலமாக மன்னர் ஆட்சி இருக்கவில்லை. அரசனுக்குப் பதில் அவனது அமைச்சர்களே உபத்திசாகாமில் இருந்த கூட்டுப் பொறுப்பில் நாட்டை ஆண்டார்கள்.

இறப்பதற்கு முன்னர் சிங்கபுரத்தை ஆண்ட தனது தம்பி சுமித்தாவுக்கு ஓலை அனுப்பி இலங்கைக்கு வந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்குமாறு வேண்டினான். அவனும் பாண்டிநாட்டு அரசனது மகளை மணம் முடித்திருந்தான். அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களோடு கலந்து ஆலோசித்து விட்டு தனது இளைய மகன் பாண்டு வாசுதேவனை (கிமு 512 – கிபி 474) இலங்கைக்கு அனுப்புகிறான். அவனோடு 32 அமைச்சர்கள் ஆண்டிகள் போல் உடையணிந்து கொண்டு லங்காவுக்கு புறப்பட்டனர். அவர்கள் மகாகண்டாரா என்ற நதிக்கரையில் இருந்த இடத்துக்குச் சென்றடைந்தனர். அவர்களை உள்ளூர் மக்கள் அன்புடனும் மதியாதையுடனும் வரவேற்றனர்.

ஆண்டி வேடத்தில் இருந்த பாண்டு வாசுதேவனையும் அவனது அமைச்சர்களையும் இடைக்காலத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அமைச்சர்கள் இனம்காண்கிறார்கள். அதனைத் தொடர்ந்து அவனுக்கு முடிசூட்டு விழா நடத்த ஆயத்தம் செய்தார்கள். ஆனால் வாசுதேவன் இன்னும் திருமணம் செய்யதிருக்கவில்லை.

பாண்டு வாசுதேவன் (கிமு 504-474) கோசலநாட்டை ஆண்ட சக்க பாண்டு என்ற அரசனின் மகள் பத்தகச்சனாவை திருமணம் செய்த பின்னர் முடி சூட்டிக் கொண்டான். பாண்டு வாசுதேவன் - பத்தகச்சனாவு இருவருக்கும் பிறந்தவன் அபயன் (கிமு474 - 454) ஆவான். பாண்டு வாசு தேவனுக்குப் பின்னர் அவனது மகன் அபயன் (கிமு 474 - 464) ஆட்சிக்கு வருகிறான். அவனுக்குப் பின்னர் அவனது தம்பி தீசன் (கிமு 454 - 437) ஆட்சிக்கு வருகிறான். அவனைத் தொடர்ந்து பாண்டுகாபயன் (கிமு 437 - 367) ஆட்சிக்கு வருகிறான். இவன் அபயன், தீசனின் மருமகனும் பாண்டு வாசுதேவ-னின் பேரனும் ஆவான். இவன்தான் அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த முதல் அரசனாவான்.

பாண்டுகாபயவின் மகன் – மூத்தசிவனுக்கு (கிமு 367 - 307) தேவநம்பிய தீசன் (கிமு 307 - 267) உத்தியன், மகாசிவன், மகாநாகன் உட்பட பத்து மகன்களும் அனுகுலாத்தி மற்றும் சாமனவன்னா என்ற இரண்டு மகள்களும் இருந்தார்கள்.

இலங்கையில் பவுத்த மதத்துக்கு மாறி புத்தசாசனத்தை நிறுவிய அரசன் தேவநம்பிய தீசன் என்பது தெரிந்ததே. அன்றைய ஆட்சி மரபுப்படி தேவநம்பிய தீசன் ஆட்சியைத் தொடர்ந்து அவனது இளைய சகோதரர்களே பட்டத்துக்கு வரவேண்டும். அந்த வரி-சையில் உத்தியன், மகாசிவன் ஆகியோரை தொடர்ந்து மகாநாகன் இருந்தான்.

தேவநம்பிய தீசனின் மனைவி தன்னுடைய மகனை ஆட்சி பீடத்தில் அமர்த்த விரும்பி மகாநாகனை கொல்வதற்குச் சதித் திட்டங்கள் தீட்டினாள். மகாநாகனைக் கொல்ல பல சூழ்ச்சிகள் செய்தாள். ஒருமுறை ஒரு மாம்பழத்தில் நஞ்சைக் கலந்து அதனை மாம்பழக் கூடையில் வைத்து மகாநாகனுக்கு அனுப்பினாள். அதனை மகாநாகனோடு உடன் இருந்த அரசியின் மகன் தவறுதலாக உண்டு மரணமடைந்தான்.


மகாநாகன் தேவநம்பிய தீசனின் மகனைக் கொல்லச் சதிசெய்தான் என்ற அய்யத்துக்கு உள்ளானதால் அவன் தனது மனைவி யோடு உருகுணவுக்குத் தப்பியோடி அங்கு ஒரு அரசை (மாகம) அமைத்துக் கொண்டான். பிற்காலத்தில் நிகழந்த சோழர்கள், பாண்டியர்கள் உட்பட அனைத்து தென்னிந்திய படையெடுப்புகளின் போதும் அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆண்ட அரசர்களின் பாதுகாப்பு மிக்க ஒரு அரணாக இந்த உருகுணை இராசதானி விளங்கியது.

மகாநாகனுக்குப் பின் அவனது மகன் யாதல தீசன் ஆட்சிக்கு வந்தான். யாதல தீசனை அடுத்து அவனது மகன் கோத்தபாயாவும் அதன் பின்னர் அவனது மகன் காகவண்ண தீசன் (மகாவம்சம் இவனது பெயரை காவன் திச என மாற்றிவிட்டது) ஆட்சி பீடம் ஏறினார்கள்.

முன்னர் கூறியவாறு இவன் களனியை ஆண்ட நாக அரசன் களனிதீசனின் மகளான விகாரமாதேவியை இரண்டாவது திருமணம் செய்து கொண்டவன். இவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளே துட்ட கைமுனுவும் சாத்த தீசனும் ஆவர்.

மூத்தசிவனும் அவனது சந்ததியினரும் நாகவம்சத்தவர்களே. அவர்களது பெயரை வைத்து அதனைத் தெரிந்து கொள்ளலாம். தேவநம்கிய தீசனின் தம்பியின் பெயர் மகாநாகன். அவனது வழிவந்தவர்களே யாதல தீசன், கோத்தபாய (205 கிமு) காகவண்ண தீசன் (கிமு 205 கிமு 161) மற்றும் துட்ட கைமுனு (கிமு 161 - 137) ஆவர். இவர்கள் சிங்களவர்கள் என எந்த இடத்திலும் மகாவம்சம் குறிப்பிடவில்லை. மகாவம்சம் ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூலாகும்.

துட்ட கைமுனுவுக்குப் பின்னரும் நீண்ட காலமாக நாக வம்சத்தவரே இலங்கையை ஆண்டிருக்கிறார்கள். கிபி எட்டாம் நூற்றாண்டளவிலேயே நாக வம்சத்தினர் படிப்படியாக சிங்கள மொழி பேசி சிங்களவர்களாக உருப்பெற்றார்கள்.




அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு -

(1) கல்லாடநாகன் (கிமு 50 – 44)
(2) சோரநாகன் (கிமு 3 – 9)
(3) இளநாகன் (கிபி 96 – 103)
(4) மாகலக்க நாகன் (கிபி196 – 203)
(5) குஜ்ஜநாகன் (கிபி 246 – 248)
(6) குட்டநாகன் (கிபி 248 – 249)
(7) ஸ்ரீநாகன் ஐ (கிபி 249 – 269)
(8) அபயநாகன் (291 – 300)
(9) ஸ்ரீநாகன் ஐஐ (கிபி 300 – 302)
(10) மகாநாகன் (கிபி 556 – 568)

எனப் பல நாகவம்ச அரசர்கள் இலங்கையை எட்டாம் ஆம் நூற்றாண்டு வரை அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுள்ளார்கள்.

தீசன் என்ற சொல்லும் நாக வம்சத்தவர் பேசிய மொழிக்குரிய சொல்லே ஆகும். எடுத்துக் காட்டாக ஸ்ரீ-நாகன் ஐஐ தந்தை பெயர் வீர தீசன். (The Early History of Ceylon by G.C.Mendis -pages 83-85). தீசன் என்ற சொல் நாக வம்ச அரசர்கள் சூட்டிக் கொண்ட வம்சம் அல்லது பட்டப் பெயர் ஆகும். அனுராதபுரத்தை ஆண்ட பல மன்னர்கள் நாகன், தீசன் என்ற பின்னொட்டுகளைத் தொடர்ந்து பயன்படுத்தி வந்திருக்கிறார்கள்.

தீசன் என்ற பெயரை வைத்துக் கொண்ட கடைசி மன்னன் தாத்தோப்ப தீசன் (கிபி 659-667) ஆவான். நாகன் என்ற பெயரை வைத்துக் கொண்ட கடைசி அரசன் மகா-நாகன் (கிபி 575-கிபி 608) ஆவான்.

எல்லாளனுக்கும் துட்ட கைமுனுவுக்கும் நடந்த யுத்தத்தில் எல்லாளன் படை-டயில் இந்து நாகர்களும் துட்ட கைமுனுவின் சேனையில் பவுத்த தமிழர்களும் இருந்திருக்கிறார்கள்! மித்தாவின் சகோதரியின் மகன் நந்தமித்தன் ஒரு தமிழ் பவுத்தன். கைமுனுவின் படையில் போராடிய தளபதிகளில் ஒருவன். எல்லாளன் படையில் திகபாயசேனாதி, தீகஜந்து, காமினி மற்றும் நந்திதா போன்ற இந்து நாகர்கள் தள-பதிகளாக இருந்தார்கள். இதில் தீகபாயசேனாதி துட்ட கைமுனுவின் ஒன்றுவிட்ட உடன்பிறப்பாகும். பண்டைய காலத்தில் மொழிவாரியான அல்லது சமயவாரியான குறியீடு இருந்திருக்கிறது. ஆனால் இனவாரியான குறியீடு இருக்கவில்லை.

இன்றைய சிங்களவர்கள் இலங்கையை ஆண்ட பவுத்த நாகர்களது சந்ததியினர் ஆவர். ஆனால் அவர்களது முன்னோர்கள் சிங்களவர்கள் அல்லர்.



# தமிழர்களுக்கு தலைமை தாங்க 'தகுதி' வாய்ந்தவர்களுக்கு, தாயகத்தில் தட்டுப்பாடா? பொதுவெளியிலிருந்து சிலரை தேர்ந்தெடுக்க இயலாதா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து விசாகன் எழுதுகின்றார்**






பாராளுமன்றப் பதவிகள் என்பவை உலகின் அனைத்து நாடுகளிலும் பளிச்சென்று தெரிகின்ற ஒரு அடையாளமாகவே திகழ்கின்றன. அந்தப் பதவிகள் ஆளும் கட்சி சார்ந்தவையாக இருந்தால் கொஞ்சம் அதிகமாகவே பண பலமும் அதிகார பலமும் இணைந்ததாக அந்த பதவியில் உள்ளவருக்கு வலுச்சேர்க்கும். எதிர்க்கட்சி சார்ந்தவராக உள்ள ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு கிடைக்கும் அடிப்படைச் சலுகைகள் மற்றும் ஊதியம், மேலதிகப் படிகள் அனைத்தும் கிட்டும் வாய்ப்புக்கள் சட்டரீதியாகவே கிடைக்கின்றன. அரசியல் வாழ்க்கையை தேர்ந்தெடுப்பவர்கள், ஆளும் கட்சியாகவும் எதிர்க்கட்சியாகவும் மாறிக்கொண்டிருப்பதும் ஒரு விநோதமே தவிர, இதனால் அவர்களுக்கு பாதிப்புக்கள் மிகவும் குறைவு.

இலங்கை அரசியலில், இவ்வாறான பாராளுமன்றப் பதவிகளில் அமர்ந்திருப்பவர்கள் எத்தனையோ ஆண்டுகளாய் அலங்கரிப்பவர்கள், ஒரு சிலர்தான் தங்கள் பதவிகளால் மக்களைக் கவர்ந்தவர்களாக இருந்திருக்கின்றார்கள். எனினும் தமிழ்நாட்டில் அண்ணாத்துரையையும் காமராஜரையும் கக்கனையும் போன்றவர் அரசியல் தலைவர்கள் எவரும் இலங்கைத் தமிழர் அரசியலில் இருந்ததாக எவருமே மனந்திறந்து கூற மாட்டார்கள். ஒரு பேச்சுக்கு சொல்வதானால் பலருக்கும் ஓரளவு தெரிந்த வகையில் காலஞ்சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், உடுவில் தர்மலிங்கம், பருத்தித்துறை துரைரத்தினம். உடுப்பிட்டி சிவசிதம்பரம் ஆகிய நால்வரைக் குறிப்பிடலாம். அவர்களின் அரசியல் வாழ்க்கை என்பது தங்கள் கடமைகளிலிருந்து விலகிச் செல்லாத ஒன்றாக இருந்தது என்பதே உண்மை.

ஒரு காலத்தில் இலங்கைத் தமிழர் அரசியலில் பாராளுமன்ற உறுப்பினர்களாக போட்டியிடுகின்றவர்களோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களோ அதிகளவில் "அப்புக்காத்து" என்று அன்பாக அழைக்கப்பெற்ற சட்டத்தரணிகளாகவே காணப்பட்டார்கள். இவ்வாறு சட்டத்தரணிகள் தமிழர் அரசியலில் முன்வரிசையில் காணப்பட்டதற்கு பல காரணங்கள் இருந்தன.

முதலாவது காரணம் சட்டத்தரணிகளில் பலர் செல்வந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். புகழ்பெற்ற கல்லூரிகளில் கல்வி கற்று பல்கலைக் கழகங்களுக்குச் சென்று ஆங்கில அறிவோடு சட்டத்தரணிகளாக வெளியேறியவர்கள், தொடர்ந்து அவர்கள் நீதி மன்றங்களில் தங்கள் தொழில்களை ஆரம்பிக்கின்றபோது, அவர்களின் வாழ்க்கையில் எவ்விதமாக பொருளாதாரச் சிரமங்களும் இருக்கவில்லை. அவர்களில் பலர் செல்வந்தர்களாக இருந்ததால் செல்வந்தர்களுடைய பிள்ளைகளையே திருமணம் செய்து கொண்டார்கள். இதனால் அவர்களது பண பலம் மற்றும் குடும்ப பலம் என்பன மேலும் அதிகரிக்கத் தொடங்கின.

இவ்வாறாகத் தான் சுமார் 60 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த இந்த தமிழ் அரசியல்வாதிகளின் பிரசன்னம் என்பது இன்று ரவிராஜ், சுமந்திரன் போன்ற அரசியவாதிகள் வரையும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

ஆரம்பத்தில் இப்போது இருக்கின்ற தொழில் நுட்ப வசதிகள், வானொலி தொடலைக்காட்சி, இணையத் தளங்கள், முகநூல் போன்றவை இருக்கவில்லை. எனவே வெளியுலகத்தையும், அப்போது பல திறமைகளைக் கொண்டிருந்தும், குடும்பங்களின் பொருளாதார தொய்வு காரணமாக வெளிச்சத்திற்கு வர முடியாத பல இளைஞர்கள் மறைக்கப்பட்டார்கள். ஆனால், சட்டத்தரணிகளான பலர் அரசியலுக்கு வருவதற்கு பல காரணங்கள் அவர்களுக்கு சாதகமாகவே எப்போதும் இருந்து வருகின்றன.

முதலாவது, அவர்கள் படித்தவர்கள், பிழை விடமாட்டார்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு. இரண்டாவது, அவர்கள் நன்கு ஆங்கிலம் பேசக் கூடியவர்கள் என்ற தகைமை மூன்றாவது அவர்களுக்கு சட்டம் தெரியும் எனவே மக்களுக்காக பேசுவார்கள் என்ற விசுவாசம் நான்காவது, வழக்கறிஞர்களாக தங்கள் "கட்சிக்காரர்களை காப்பாற்றுவார்கள்" என்பது போல அவர்கள் சார்ந்திருந்த அரசியல் கட்சிக்காகவும் உழைப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு மக்களுக்கு. ஐந்தாவது காரணம், நீதி மன்றங்களில் அவர்கள் தினமும் தோன்றுவதால் அவர்களின் முகங்கள் பொது மக்களுக்கு நன்கு அறியப்பட்டவையாக இருந்தன இவ்வாறு, மேலே சொல்லப்பட்டட ஐந்து காரணங்களாலும், மேலும் பல காரணங்களாலும் சட்டத்தரணிகள் எமது அரசியல் தலைவர்களாக வளர்ச்சியடைந்து எங்கள் "தலைவர்கள்" என்று போற்றப்பட்டார்கள்.

இவ்வாறு நாட்கள் மாதங்களாக, மாதங்கள் வருடங்களாக, வருடங்கள் தசாப்த்தங்களாக நீண்டு சென்றும், தமிழ் மக்கள் எதிர் கொண்ட பல பிரச்சனைகள் தீர்க்கப்படாதவைகளாக தொடர்ந்து மக்களுக்கு துன்பங்களையே தந்து கொண்டிருந்தன. ஆனால் மறுபக்கத்தில் அரசியல்வாதிகள் என்ற ஒரே குழுமம், மற்றும் நடுத்தர வகுப்பிலும் பார்க்க சற்று மேலான பணம் படைத்தவர்கள் என்ற வகையில் தமிழ் சிங்கள் அரசியல்வாதிகள் நண்பர்கள் ஆகிவிட்டார்கள். இவ்வாறான நட்பும் உறவும் இணைந்து அவர்கள் இனம் சார்ந்து சிந்திக்காமல் தங்கள் குழுமம் மற்றும் நட்பு வட்டாரம் என்ற வட்டத்திற்குள் தங்கள் அரசியல் காய்களை நகர்த்திச் சென்றார்கள்.

இதற்கு மேலும் நல்ல உதாரணங்கள் உள்ளன. தென்னிலங்கையில் யு.என்.பி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றுக்கு எதிரா பேசியும் விமர்சனமும் செய்து வந்த இடது சாரி அரசியல் வாதிகளுக்கு எமது மக்கள் தேர்ந்தெடுத்த அனுப்பி தமிழ் அரசியல்வாதிகள் ஒரு போதும் தங்கள் ஆதரைவை வழங்கிவில்லை.

தாங்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் என்பதை உணர்ந்து அவர்களுக்காகவும் அவர்களது அடிப்படைப் பிரச்சனைகளை தீர்த்து வைக்க வேண்டும் என்பதற்கு பதிலாக, அந்த இன வாத அரசாங்கங்களை காப்பாற்றும் வகையில் தங்கள் வாக்குகளைப் பாராளுமன்றத்தில் பயன்படுத்தினார்கள். இவ்வாறான அரசியல் செயற்பாடுகள் பல ஆண்டுகளாக இடம்பெற்று வருகின்றன. குறிப்பாகச் சொல்வதானால், இவ்வாறான ஒரு விடயம் தான் கடந்த மைத்திரி - ரணில் அரசாங்கத்தின் போது அரங்கேறியது. இந்த சந்தர்ப்பத்தை எமது தமிழ் மக்களுக்குரிய சில விடயங்களைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக, ரணில் விக்கிரமசிங்காவை காப்பாற்றும் வகையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்தினார்கள். இதற்கு சட்டத்தரணியான பாரளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மூல காரணமாக இருந்தார். அதற்கு மேலாக இந்த செயற்பாட்டிற்கு இன்னொரு காரணம், சுமந்திரன் அவர்கள் யு.என்.பி யின் ஆரம்ப கால உறுப்பினராக இருந்து, ரணில் விக்கிரமசிங்காவால் சம்பந்தர் ஐயாவின் வரவேற்போடு தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் கொண்டுவரப்பட்டவர்.

இவ்வாறாக கடந்து சென்ற ஈழத் தமிழர்களின் அரசியல் பாதை என்பது திசை மாறிச் செல்லுகின்றது என்பதை அவதானித்த, தமிழ் இளைஞர்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள். பாராளுமன்றத்திற்கு நாம் அனுப்பி வைக்கின்ற எமது தலைவர்கள், எமக்காக ஒன்றும் செய்யாமல் தங்கள் நலன்களையும் தங்கள் குடும்ப நலன்களையும் மட்டுமே கவனிக்கின்றார்கள் என்பதைக் கண்ட எமது இளைஞர்கள் பாராளுமன்றம் தவிர்ப்பு என்பதை ஒரு நோக்கமாகக் கொண்டு அதற்கு மேலாக இளைஞர்களை ஒன்று திரட்டி போராட வேண்டும் என்ற முடிவினை எடுத்தார்கள்.

அவ்வாறாக எடுக்கப்பட்ட அந்த முடிவுகள் ஆரம்பத்தில் பல அடக்கு முறைகள் உயிரிழப்புக்கள், தலைமறைவு, காட்டு வாழ்க்கை சிறைத் தண்டனைகள் என்ற கஸ்டங்களைக் கொடுத்தாலும் விடாப்பிடியாக நின்று பல உள் முரண்பாடுகளுக்கு மத்தியில் தமிழர்களின் விடுதலைக்காகப் போராடுவது என்ற தீர்க்கமான முடிவுடன் ஒன்றுக்கு மேற்பட்ட விடுதலை இயக்கங்கள் தோன்றி தங்களை வளர்த்துக் கொண்டன. இவ்வாறான விடுதலை இயக்கங்களின் தோற்றம் என்பது பாராளுமன்ற அரசியல் பதவிகள் மூலம் தங்கள் விருப்பத்தின்படி அரசியல் செய்து கொண்டிருந்தவர்கள் ஒரு பேரிடியாக அமைந்தது. அதன் விளைவு அவர்கள் விடுதலை இயக்கங்களின் இருப்பை விரும்பாமல் இருந்தமையாகும்.

நான், இந்த கட்டுரையின் ஆரம்பத்திலிருந்து குறிப்பிட்டுள்ள பல விடயங்கள் படிப்பவர்களுக்கு ஏற்கெனவே தெரிந்தவையாக இருப்பினும், இனிச் சொல்லப்போகின்ற விடயங்களை புரிந்து கொள்வதற்கு, இந்த விபரங்கள் அவசியம் என்பதையும் தயவு செய்து கவனிக்கவும்.

இந்த கட்டுரை தொடர்ந்து விரிவாக செல்ல வேண்டுமானால் நிச்சயம் பல மணி நேரங்களையும் பக்கங்களையும் பறித்துவிடும் என்பதால் நான் இந்தக் கட்டுரை மூலம் சொல்ல வேண்டியவற்றைச் பகிந்து கொள்கின்றேன் தொடர்ந்து. இந்தக் கட்டுரையின் கதாநாயகர்கள் மண்ணின் மைந்தன் மாவை சேனாதிராஜா, வரதராஜப் பெருமாள், வண்ணை ஆனந்தன் மற்றும் கவிஞர் காசி ஆனந்தன் போன்றவர்களே. மாவை சேனாதிராஜா தற்போது வசதிகள் பல கொண்ட ஒரு அறியப்பட்ட அரசியல்வாதி. ஆனால் அவருடைய ஆரம்பமே நான் முன்னர் சில பந்திகளில் குறிப்பிட்ட அரசியல் தலைவர்களின் வழித்தடங்களிலே தான் பதிந்தது என்று கூறலாம். தமிழ்த் தலைவர்கள் தங்கள் அரசியல் பயணத்திற்கு பலம் சேர்ப்பதற்காக தமிழர் கூட்டணி என்னும் அரசியல் இயக்கத்தில் இளைஞர் அணியை உருவாக்கினார்கள். அதன் முக்கிய உறுப்பினர்களாக வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா, வரதராஜப் பெருமாள் உட்பட பலர் நியமிக்கப்பட்டார்கள் அல்லது தாங்களாகவே இணைந்து கொண்டார்கள்.

***(தொடர்ச்சி அடுத்த வாரம்...***



# ‘காடு வளர்ப்பு’ எனும் பெயரில் சட்டவிரோதமாக வெட்டப்படும் தேக்கு மரங்கள்

சிவா பரமேஸ்வரன் - மூத்த செய்தியாளர்



இயற்கை அழகு நிறைந்த முல்லைத்தீவு மாவட்டத்தில், “மீண்டும் காடு வளர்ப்பு” எனும் பெயரில் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தேக்குமரக் காடுகள் திட்டமிட்டு அழிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இலங்கையில் மிக அதிகமாக வனப் பகுதியைக் கொண்ட முல்லைத் தீவில், அரச ஆதரவில் நடைபெறும் காடழிப்பு சுற்றுச்சூழல் மற்றும் அதை அண்டிய பகுதியிலுள்ள மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதித்துள்ளதாக அம்மாவட்ட மக்கள் கூறுகின்றனர். இந்தக் காடுகள் இலங்கையின் வடபகுதியில் சுற்றுச்சூழல் சமநிலையைப் பாதித்து மழை பொழியும் அளவைக் குறைக்கிறது என்று ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பகுதியில் விவசாயமும் மீன்பிடியும் முக்கிய வாழ்வாதாரங்களாக உள்ளன. இவை இரண்டுக்கும் இயல்பான மழைப் பொழிவும் அதற்கு ஆதாரமான காடுகளும் மிகவும் முக்கியம்.

உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்த பிறகு இலங்கை அரசு முல்லைத்தீவு மாவட்டத்தில் “திட்டமிட்ட வகையில்” இயற்கை வளங்களை அழித்தும் சூறையாடியும் வருகின்றன என்று அங்குள்ள மக்கள் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டுகின்றனர். அரச ஆதரவுடன் நடைபெறும் இந்த நடவடிக்கை போரினால் பாதித்த மக்களின் வாழ்வாதாரத்தை வெகுவாக பாதித்து அவர்களின் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

அழிவின் விளிம்பில் வனப் பகுதிகள்

மண் அகழ்வு, கிரானைட் கற்கள் தோண்டி எடுப்பு, சரளைக் கற்களை அரித்தெடுப்பது போன்ற சட்டவிரோத நடவடிக்கையில் இப்போது மீளுருவாக்கம் எனும் போர்வையில் காடழிப்பும் சேர்ந்துள்ளது என்கிறார்கள் முறிப்புப் பகுதியிலுள்ள மக்கள்.

இலங்கை அரசு முல்லைத்தீவு மாவட்டத்தில் வனப் பகுதியின் அளவு அதிகரித்து வருகிறது என்று கூறினாலும், அங்குள்ள மரங்கள் தொடர்ச்சியாக சீரான வகையில் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு காடழிப்பு நடைபெறுகிறது என்பதே களநிலமையாகவுள்ளது.

முதிர்ந்த மரங்களை வெட்டிய பிறகு அங்கு புதிய மரங்கள் நடப்படுகின்றன என்று அரசு கூறினாலும், அங்கு சென்று வந்தவர்கள் புதிய மரக்கன்றுகள் அங்கு நடப்படுவதில்லை என்று கூறுகிறார்கள்.

வன்னிப் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போது, தமிழீழ வனப்பாதுகாப்புத் திணைக்களத்தால் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கும் வாழ்வாதாரத்துக்கு ஏதுவாக காடுகள் வளர்க்கப்படுகின்றன என்று அவர்கள் கூறியிருந்தனர். அது சரியா இல்லையா எனும் விவாதத்துக்குள் இப்போது நான் செல்லவில்லை.

அந்தக் காட்டுப் பகுதி அரச ஆதரவுடன் அழிக்கப்படுவது இயற்கை சமன்பாடு மற்றும் சுற்றுச்சூழலுக்கு பெரும் கேடு ஏற்படுத்துகிறது என்பது தான் இதில் பிரச்சனை.

முல்லைத்தீவு மாவட்டத்திலேயே மரத்துக்கான தேவை அதிகமாக இருக்கும் நிலையில், இந்தப் பகுதியிலிருந்து வெட்டப்படும் தேக்கு மரங்கள் அரச மரக்கூட்டுத்தாபனத்தால் கையகப்படுத்தப்பட்டு நாட்டின் இதர இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

இந்தப் பிரச்சனை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனால் கடந்த ஆண்டே நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்டது. எனினும் இது குறித்து எவ்வித நடவடிக்கை இதுவரை எடுக்கப்படவில்லை. மாவட்ட வளர்ச்சிக் குழுவும் கூட இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. ஆனால் அதுவும் புறந்தள்ளப்பட்டது.

காடுகளின் கட்டுப்பாட்டை உள்ளூர் அதிகாரிகளிடம் கையளிக்கும் அரசின் முடிவு எச்சரிக்கை மணிகளை ஒலிக்கச் செய்துள்ளன. கொழும்புக்குத் தெரியாமல் உள்ளூர் அதிகாரிகள் சட்டவிரோதச் செயல்பாடுகளில் ஈடுபடுவதாக உள்ளூர் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

காலாவதியான உரிமம்

முறிப்பு பகுதியிலுள்ள வனத்தின் நுழைவுவாயிலில் வைக்கப்பட்டுள்ள அரச பதாதை ஒன்று அங்கு மரம் வெட்டும் உரிமத்துக்கான திகதி முடிவடைந்துவிட்டதைத் தெளிவாகக் காட்டுகிறது. எனினும் அங்கு தொடர்ந்து சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்படுகின்றன.

தற்போது மாவட்ட வளர்ச்சிக் குழுவால் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படாத நிலையிலும் கூட வனத்துறை “காடுகள் மீளுருவாக்கம்” திட்டம் என்று கூறி தொடர்ச்சியாக தேக்கு மரங்களை வெட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதை உள்ளூர்வாசிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.



முறிப்பு பகுதியில் 40-50 ஹெக்டயர் பரப்பளவில் வளர்ந்திருந்த தேக்கு மரங்கள் வெட்டப்பட்டுள்ளது அங்கு புதுப்பிக்க முடியாதபடி சுற்றுச்சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தியுள்ளது. இளம் மரங்கள் கூட கண்மூடித்தனமாக வெட்டப்படுவதை அங்கிருந்து கிடைக்கும் படங்கள் காட்டுகின்றன.

அங்கு மீண்டும் புதிய தேக்கங்கன்றுகள் நடுவதற்காகவே காடுகள் அழிக்கப்படுகின்றன என்று அரச தரப்பில் கூறப்படுவதை துறைசார் வல்லுநர்கள் ஏற்கவில்லை. முறிப்பு பகுதி அப்படியாக புதிய மரக்கன்றுகள் ஏதும் நடப்படவில்லை என்பத அங்கு சென்றுவந்தவர்கள் அடித்துக் கூறுகின்றனர். கடந்த நான்கு ஆண்டுகளில் அங்கு வெட்டப்பட்ட தேக்கு மரங்களுக்கு ஈடாகப் புதிதாக ஒரு தேக்கங்கன்று கூட நடப்படவில்லை என்பதே யதார்த்தமாக உள்ளது.

சட்டவிரோதமாக வகையில் தொடர்ச்சியாக மரங்கள் வெட்டப்படுவது வட மாகாணம் மட்டுமின்றி இலங்கையின் தட்பவெப்ப நிலை, சுற்றுச்சூழல் சமன்பாடு, மழைப் பொழிவு, வாழ்வாதாரப் பிரச்சனை என்று பல வகையில் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் உள்ளூர் அடியாட்களால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதும் செய்திகளாக வெளிவந்தன.

மோசமான சுற்றுச்சூழல் பாதிப்பு

மண் அரிப்பு, பல்லுயிர்த்தன்மை இழப்பு, மழைப் பொழிவில் வீழ்ச்சி, வனஜீவசாரிகளுக்கான வாழ்விட இழப்பு, உள்ளூர் மக்களின் வாழ்வாதார பாதிப்புக்கள் போன்றவை சட்டவிரோத காடழிப்பின் பரிமாணங்களாகும்.

வனத்தை மீண்டும் உருவாக்குகிறோம் எனும் போர்வையில் காடுகள் அழிக்கப்படுவது முற்றாக ஏற்றுக் கொள்ள முடியாதது என்று அறிவியல் வல்லுநர்கள் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டுகின்றனர். அந்தப் பகுதியில் மண் அகழ்வும், சரளைக் கற்களை எடுப்பதும் பாரிய அளவில் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.



வனங்களைப் பாதுகாக்க வேண்டிய அரச மரக்கூட்டுத்தாபனமே சட்டவிரோதமாக காடுகள் அழிக்கப்படுவதற்கு துணை போகின்றன என்று மக்கள் ஆதங்கப்படுவது அரசின் செவிகளை எட்டவில்லையா என்று கேட்கத் தோன்றுகிறது.

அண்மைக்கால தரவுகளின்படி முல்லைத்தீவு பகுதியில் மழைப் பொழிவு குறைந்துள்ளதைக் காண முடிகிறது. இதனால் அங்கு விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயம் மற்றும் மீன்பிடி பாதிக்கப்பட்டுள்ளதது ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரங்களைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

உள்ளூர் மக்கள் மரம் வெட்டுவதற்கு என்று முறிப்பு பகுதியில் குறிக்கப்பட்டுள்ள வனப்பகுதியில் நுழைவதற்கு முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று அந்த நுழைவுவாயிலுள்ள பதாதை மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

“மரம் வெட்டப்படுவது முற்றாக நிறுத்தப்பட வேண்டும்”

பல பரிமாணங்களைக் கொண்ட இந்தப் பிரச்சனைக்கான ஒரே தீர்வு சட்டவிரோத காடழிப்படை தடுப்பது மட்டுமே என்று பல்தரப்பினர் வலியுறுத்துகின்றனர். அதுமட்டுமின்றி “சட்டரீதியாக மரம் வெட்டுவதற்கான அனுமதியும்” நிறுத்தப்பட வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாக உள்ளது. உள்ளூர்வாசிகளோ தமது விவசாயத்துக்கான போதிய நீராதாரங்கள் தேவை என்கிறார்கள். காடழிப்பு நிறுத்தப்பட்டால் மட்டுமே அது சாத்தியம் என்று முல்லைத்தீவு விவசாயிகள் வாதிடுகின்றனர்.

நீடித்திருக்கக் கூடிய தொடர்ச்சியான காடு வளர்ப்புடன் சட்டவிரோத மரம் வெட்டுதல் தடை செய்யப்பட்டால் மட்டுமே சீரழிந்த சுற்றுச்சூழல் சமன்பாட்டை பகுதியளவில் மீட்டெடுக்கப்படும். இந்த நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படாவிட்டால் முல்லைத்தீவு மாவட்டம் போர் நிறைவடைந்த காலத்தில் எந்நிலையில் இருந்ததோ அந்த நிலைக்குச் சென்றுவிடும் அபாயம் உள்ளது.

முறிப்பு பகுதியில் காடழிப்பு குறித்து இலங்கை அரசைத் தொடர்பு கொண்டு அவர்களின் கருத்துக்களைப் பெற எடுக்கப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.







**நீங்கள் கனடாவுக்கு வந்த நாள் முதல் 5 ஆண்டுகள் வரை புதிய குடிவரவாளர்களுக்கான எமது சலுகைகளில் இருந்து பயன் பெறலாம்**

முதல் 3 ஆண்டுகளுக்கு உங்கள் வங்கிக் கணக்குக்கு நிரந்தர வங்கி கட்டணம் இல்லை

புதிய வாடிக்கையார்களுக்கான எங்களின் சலுகையின் மூலம் **$650** வரை சேமியுங்கள்*

தெரிவு செய்யப்பட்ட வங்கிகளில் உள்ள எங்கள் மொழி ஆலோசர்கள் உரையாடுவார்கள் அல்லது புதிய வாடிக்கையாளர்களுக்கான எங்கள் சலுகைகளை இணையத்தில் தேடுங்கள்

உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க நாங்கள் இருக்கின்றோம்

**nbc.ca**/tamil

*Our banking offer for newcomers is available to immigrants who have been living in Canada for less than 5 years. Savings of $650 over three years based on: no flat monthly fee for our banking package for three years ($14.95/month), first order of cheques free ($56.98/order) and small safety deposit box rent-free for the first year ($55.00/year).To enjoy the full savings, you must sign up for specific additional products and services, keep them and carry out all required transactions for a minimum of 36 months. Some conditions apply.

Family Health Team

# Carefirst Family Health Team

## Accepting New Patients



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# SKN FINANCIAL

SKN

www.sknfinancial.com




**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனைஎ்ன வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..

குறைந்த வட்டி!..[2% முதல்]

நிறைந்த பெறுமதி!...

www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800


தாகங்கள் தீராமலே தம்
இன்னுயிர் ஈந்து
மண்ணுறங்கும் மாவீரத்தின்
நினைவுகள் சுமந்து!
radiothamil.com
FM 105.9 HD4
radio
தமிழ் HD
416.800.3636
நேரடி ஒலிபரப்புடன் இணைந்திருங்கள்

# ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்புடன் முரண்பட்ட தேர்தல் அதிகாரி ஒருவரை டிரம்ப் பதவி நீக்கியுள்ளார்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்பின் தேர்தல் மோசடிக் குற்றச்சாட்டுடன் முரண்பட்ட அந்நாட்டு உயர்மட்ட தேர்தல் அதிகாரி ஒருவரை டிரம்ப் பதவி நீக்கியுள்ளார்.

வாக்குப் பதிவின் நேர்மை பற்றிய “மிகவும் தவறான” கருத்து காரணமாக இணையப் பாதுகாப்பு மற்றும் உட்கட்டமைப்பு பாதுகாப்பு முகவர் நிறுவனத்தின் தலைவர் கிறிஸ் க்ரெபக் பதவி நீக்கப்பட்டார் என்று டிரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்கத் தேர்தலில் தனது தோல்வியை ஏற்க மறுக்கும் டிரம்ப், பாரிய அளவில் தேர்தல் மோசடி இடம்பெற்றதாக ஆதாரம் இன்றி குற்றம்சாட்டி வருகிறார். எனினும் இந்தத் தேர்தல் அமெரிக்க வரலாற்றில் மிகப் பாதுகாப்பானதாக இருந்தது என்று தேர்தல் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இந்நிலையில் தனது தோல்விக்குப் பின் டிரம்பினால் பதவி நீக்கப்படும் இரண்டாவது அதிகாரியாக க்ரெபக் உள்ளார். முன்னதாக பாதுகாப்புச் செயலாளர் மார்க் எஸ்பர் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.


உங்கள் கருத்தைக் கூறுங்கள்
ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் நகராட்சி மேம்பாட்டுக் கழகம் ஒன்றை உருவாக்குவது குறித்து ஆலோசித்து வருகிறது
குடியிருப்புவாசிகள் தங்கள் கருத்துக்களை **bramptonmdc.ca** என்ற வலைத்தளத்தின் மூலம் நவம்பர் **25** வரை வழங்க அழைக்கப்படுகிறார்கள்.
bramptonmdc.ca
BRAMPTON



இந்நிலையில் டிரம்ப் விடைபெறும் முன்னர் சி.ஐ.ஏ உளவுப் பிரிவு பணிப்பாளர் ஜினா ஹாஸ்பல் மற்றும் எப்.பி.ஐ பணிப்பாளர் கிறிஸ்டோபர் வ்ரேய் ஆகியோரும் பணி நீக்கம் செய்யப்பட வாய்ப்பு இருப்பதாக ஊகங்கள் வெளியாகியுள்ளன.

ஏனையவர்கள் போன்று டிரம்ப் கடந்த செவ்வாய்க்கிழமை ட்விட்டரில் வெளியிட்ட பதிவின் மூலமே க்ரெபக்கிற்கு தாம் நீக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. எனினும் அதற்கு தாம் வருந்துவதில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

STEELES PODIATRY CLINIC
கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்
ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது
WE ACCEPT
• Extended Health Care
• Private - Work Insurance
• MVA - WSIB
• ODSP - Social Service
LIST OF SERVICES
• General & Diabetic Care
• Foot Pain Treatment
• Sports Medicine
• Surgical Procedures
• Custom-Made Orthotics
• Orthopaedic Shoes
• Compression Stockings
• Ankle - Knee - Back Braces
ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).
5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)

- மொன்றியல் வீணைமைந்தன் எழுதுகின்றார்

# #22 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

கதாநாயகிகளின் தொடர்ச்சி...



பின்னாளில் அந்த அம்மாவையே ஓரம்கட்ட செய்யும் அளவிற்கு (திரையில்) முத்திரை பதித்தவர் நமது நடிகர் திலகம். அந்த மதிப்பிற்குரிய நட்சத்திரம் பத்மஸ்ரீ டாக்டர் பானுமதி ஆவார். சிவாஜி ஐயா பற்றி அவர் கூறும்போது... "சிவாஜிகணேசனும்", "எம்ஜிஆரும்", பெரிய கலைஞர்கள். எம்ஜிஆரோட "அழகான பொண்ணுதான்" பாட்டு "அலிபாபாவும் 40 திருடர்களும்", படத்திற்குப் பண்ணிக்கிட்டுருக்கும்போது தான் சிவாஜி செட்டுக்கு வந்தார். அப்போ என் நடிப்பைப் பார்த்து, "ஐயோ அந்த பொண்ணோட ஒரு ரோலாவது பண்ணனும்னு சொல்லிக்கிட்டுருந்தார். இதைக்கேட்ட காமிராமேன் என்னிடம் வந்து உங்க கூட சிவாஜி சார் ஆக்ட் பண்ண ஏங்குறார்னார்!. அப்படித் தான் முதன்முதலில் அறிமுகம் ஆச்சு. நடிகர் திலகத்தின் அந்த ஆசை 1955இல் நிறைவேறியது. "நடிப்புக்கு இலக்கணம்" வகுக்கும் நடிகை எனப் பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்ட பிரபல நடிகை பி பானுமதி அவர்களுடன் பேராசிரியர் அமரர். கல்கி எழுதிய "கள்வனின் காதலி" நாவல் படமாக்கப்பட்டபோது முதன் முதல் ஜோடி சேர்ந்தார்கள். சிவாஜி படத்தில் திருடன் வேடம். சூழ்நிலை காரணமாக திருடனாக சில காலம் மாற வேண்டியிருந்தது. "தெற்கத்திக் கள்ளனடா... தென்பாண்டி வீரனடா..." எனும் பாடலுடன் ஆரம்பிக்கும் நாடகக் காட்சியும், சிவாஜியின் நாடகபாணி ஆட்டமும் இப்படத்தில் விசேஷமாகும். கவிஞர் எஸ் டி சுந்தரம் அவர்களின் கவித்துவமான உரையாடல் காட்சி ஒன்றை நினைவுபடுத்த விளைகிறேன். முத்தையன் (சிவாஜி) காதலி கல்யாணி (பானுமதி) யுடன் பேசும் காட்சி இது!.

முத்தையன்: "...வானத்திலே மிதக்கும் வண்ண கிளிகள் போல் எல்லையற்ற கடலில் எழிலோடு நீந்திச் செல்லும் இந்த வையகமும் வானகமும் நாம் சொன்னபடி ஆடும்.! சூரிய சந்திர தாரகைகள் யாவும் நமது திருமண மண்டப தீபங்களாக பிரகாசிக்கும். மாலை பெண் மந்தமாருதம் தட்டிலே, மலர் கொண்டு வந்து மங்கல கீதம் பாடுவாள்! நாம் எண்ணியபடியே எல்லாம் நடக்கிறது கல்யாணி..! எல்லாம் நடக்கிறது! நாம் விதியை வென்று விட்டோம் கல்யாணி..! விதியை வென்று விட்டோம்!, ஆனால் கல்யாணி எனக்கு ஒரே ஒரு வருத்தம் தான்!

கல்யாணி: அதென்ன புது வருத்தம்? சொல்லுங்கள் அத்தான் சொல்லுங்கள்..!

முத்தையன்: நம்மை பெற்று வளர்த்து சீராட்டி பாராட்டி ஆளாக்கிய இன்பத் தமிழ் நாட்டை விட்டு எங்கே போகப்போகிறோம் என்ற கவலையாக இருக்கிறது!

கல்யாணி: கவலைப்படாதீர்கள் அத்தான். நாம் போகுமிடத்தையெல்லாம் நமது தமிழ்நாடாக்கிவிடுவோம். (இருவரும் சிரித்து மகிழ்கிறார்கள்).

"நாம் போகுமிடத்தையெல்லாம் நமது தமிழ்நாடாக்கிவிடுவோம்" என்று "கள்வனின் காதலி"யின் கதாநாயகி வாயிலாக சொல்லப்பட்டதை இன்று புலம்பெயர்ந்த தமிழர்கள் தாம் வாழும் நாடுகளில் நிரூபித்து வருவதையும் நான் பாராட்டி மகிழ்கிறேன்.

நமது சிவாஜி ஐயா அவர்கள் பன்முகம் கொண்ட பானுமதி அம்மாவுடன், மேலும் "அம்பிகாவதி" எனும் காதல் காவியம், அறிஞர் அண்ணாவின் "ரங்கூன் ராதா" (வசனம் மு.க) ஏபி நாகராஜன் எழுதிய "மக்களைப் பெற்ற மகராசி" (இப்படத்தில் சிவாஜி அவர்கள் கொங்கு நாட்டு வட்டார வழக்குத் தமிழ் பேசி அசத்தியிருப்பார்) "சாரங்கதாரா" "மணமகன் தேவை" "அறிவாளி" "ராணி லலிதாங்கி" "தெனாலிராமன்" ஆகிய படங்களில் இருவரும் இணைந்து தூள் கிளப்பி இருப்பார்கள்.

சில படங்களில் பானுமதி அம்மாவிற்கு நடிப்பு சொல்லிக் கொடுத்து தன்னை முன்னிலைப்படுத்திய சிவாஜி அவர்களுக்கு "ரங்கூன் ராதா" சவாலாக அமைந்தது. இருவருக்குமிடையே நடிப்பில் போட்டியே ஏற்பட்டது. "ராஜபக்தி"யில் சிவாஜிக்கு எதிரியாக வருவார் பத்மினி. பானுமதி, பண்டரிபாய், ஆகியோரைத் தொடர்ந்து மேலும் பல நாயகிகள் பேசப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவ்வழியில் திருமதி சவுகார்ஜானகி, திருமதி சரோஜா தேவி, திருமதி தேவிகா, திருமதி கே ஆர் விஜயா, திருமதி வாணிரீ, திருமதி சுஜாதா, செல்வி ஜெயலலிதா ஆகியோர் முக்கிய நட்சத்திர நடிகைகளாயிருக்கிறார்கள்.

வாழ்க்கையில் சில சமயங்களில்அபூர்வமாகவும், அதிசயமாகவும் சில பல நல்ல வாய்ப்புகள் ஒவ்வொருவர் வாழ்விலும் கிடைப்பதுண்டு. சொந்த வாழ்க்கையில் நமது நடிகர் திலகத்திற்கு வாய்க்கப்பெற்ற மனைவி அவரது தாயாரின் இன்னொரு வடிவம் என்றுதான் சொல்வேன். கையெடுத்துக் கும்பிட கூடிய மிகவும் அற்புதமான இல்லத் தலைவி அவர் ஆகும். நிறைந்த மங்கல குங்குமம் என்றும் அவர் நெற்றியில் பிரகாசித்துக் கொண்டே இருக்கும். "மாமா.. மாமா.." என்று சிவாஜி அவர்களை (அப்படித்தான் கமலா அம்மா கணவரை அழைப்பார்கள்) ஒரு குழந்தையைப் பராமரிப்பது போன்று அவருடைய காரியங்களைக் கவனித்து வெற்றிகரமான கூட்டுக் குடும்ப தலைவியாக விளங்கினார். பெற்ற தாய், கட்டிய மனைவி, சகோதரி, மகள் என்று பெண்களிடம் மிகவும் வாஞ்சையுடன் விளங்கியவர் சிவாஜி அவர்கள். அத்தகைய அன்பு, பாசம், அரவணைப்பு முழுவதையும் திரைக்கதையில் தன்னுடன் இணையும் கதாநாயகிகள், சகோதரிகளிடத்து மிகவும் துல்லியமாக வெளிப்படுத்துவார். அதனால் தான் குடும்பப்பாங்கான பாத்திரப் படைப்புகளை அவர் ஏற்று நடிக்கும்போது ரசிகர்களை நெஞ்சுருக வைக்கிறார். விம்மி அழ வைக்கிறார். அவருடன் அபூர்வமான ஜோடிகள் நாயகிகளாக இணைந்தார்கள்.

அந்த வரிசையில் "பாகப்பிரிவினை" கண்ணையனோடு (சிவாஜி) முதன் முதலில் இணைந்தவர் தான் "பொன்னி" எனும் ஏழைப்பெண் பாத்திரமேற்று. "அடடா..! நமது நடிகர் திலகத்திற்கு இணையாக "புதிய பறவை" ஒன்று ஜோடி சேர்ந்துள்ளதே" எனப் பேசவைத்தவர் தான் திருமதி சரோஜாதேவி அவர்கள். "பொன்னி"யெனும் பாத்திரத்திற்காகவே கவியரசு கண்ணதாசன் அவர்கள் "தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ....." என்று அர்த்தம் நிறைந்த மிக அழகான முதலிரவு பாடலை எழுதியிருந்தார்.

"ஒரு ஆணுக்கு மனைவி என்பவள் இப்படித்தான் அமைய வேண்டும் அல்லது ஒரு பெண்ணுக்கு கணவன் இவரைப்போன்றல்லவோ அமைய வேண்டும்" என்று உதாரணம் சொல்லி பேசக்கூடிய அளவு சிவாஜி சரோஜாதேவி ஜோடி, பாலும் - பழமுமாக இல்லற வாழ்வின் மேன்மையை திரையில் கொண்டு வந்தார்கள் வாழ்ந்து காட்டினார்கள்.

சுமார் 13 படங்களில் சிவாஜிக்கு இணையாக குடும்பப்பாங்கான கதைகளில் நாயகியானவர் திருமதி சரோஜா தேவி அவர்கள். அவற்றுள் "இரும்புத்திரை" "விடிவெள்ளி" "புதிய பறவை" "இருவர் உள்ளம்" "தேனும் பாலும்" "ஆலயமணி" "வளர்பிறை" "குலமகள் ராதை" "பார்த்தால் பசி தீரும்" போன்ற நல்ல கதைகள் மறக்கமுடியாத பாத்திரப் படைப்புகளை கொண்டு வெளிவந்தன.

சில படங்களில் சிவாஜி அவர்களுடன் இரண்டு அல்லது மூன்று நாயகி என அந்தஸ்துள்ள நடிகைகள் இணைவார்கள். உதாரணமாக "தேனும் பாலும்" படத்தில் பத்மினி, சரோஜாதேவி, "பாலும் பழமும்" "புதிய பறவை"யில் சவுகார் ஜானகி, சரோஜாதேவியும், "சாந்தி"யில் தேவிகா, விஜயகுமாரியடன், "நீல வானம்" ராஜஸ்ரீ, தேவிகாவுடன் "பால்குடம்" பத்மினி, கே ஆர் விஜயா, "பாவை விளக்கு" சவுகார் ஜானகி, எம்என் ராஜம், பண்டரிபாய், கமலா லட்சுமணன் என நால்வருடன், "பார்த்தால் பசி தீரும்" படத்தில் சௌகார் ஜானகி, சாவித்திரி துணைப் பாத்திரம் ஏற்க சரோஜாதேவி நாயகியாகவும் "இரு மலர்கள்" மீண்டும் பத்மினி, கே ஆர் விஜயா, "குலமகள் ராதை"யில் தேவிகா, சரோஜாதேவியுடன் "அமரதீபம்" சாவித்திரி, பத்மினியுடன் "உயர்ந்த மனிதன்" வாணிஸ்ரீ, சவுகார்ஜானகியுடன் "ஜெமினி"யின் "இரும்புத்திரை" வைஜயந்திமாலா, சரோஜாதேவி என இரண்டுக்கும் மேற்பட்ட கதாநாயகிகளுடன் இணைந்து நடித்தவர் நடிகர் திலகமே ஆகும்.

இப்படியான படங்களில் கதை களங்களில் காதல் ஓரிடம், கல்யாணம் ஓர் இடமாக அமையும். திருமதி எம்என் ராஜம் சில படங்களில் துணை பாத்திரமேற்று நடித்திருந்தாலும் "பாசமலர்", "பதிபக்தி" "ரங்கோன் ராதா" ஆகிய படங்களில் மனைவியாக வருவார்.

எம்ஜிஆர், சிவாஜி இருவரும் இணைந்து நடித்த ஒரே படமான "கூண்டுக்கிளி"யில் முதலில் நாயகி பிஎஸ் சரோஜாவை விரும்பியும், பின் குசலகுமாரி அவரை காதலிப்பது போலவும் சிவாஜியின் பாத்திரம் அமைந்திருக்கும். "தூக்குத்தூக்கி"யில் திருமதி லலிதா சிவாஜியின் மனைவியாக நடித்திருப்பார். லலிதாவின் சகோதரிகளான பத்மினி, ராகினி இருவரும் இப்படத்தில் துணைப் பாத்திரம் ஏற்றிருப்பார்கள். "காவேரி"யிலும் லலிதாவே சிவாஜியுடன் ஜோடி சேர்ந்தார். "சிவந்த மண்" தங்கை" ஆகிய படங்களில் நாயகியாக நடித்த "காஞ்சனா"வும் குறிப்பிடத்தக்கவர். இவ்விதம் ஓரிரு படங்களில் சேர்ந்து நடித்திருந்தாலும் அந்தந்த நட்சத்திரங்கள் பாராட்டுக்குரியவர்களாகும். சிவாஜியுடன் இணைந்து நடித்ததை பெரும் பேறாக கருதியவர்களாகும்.

அதேபோல், பின்னாளில் அறிமுகமான தலைமுறை நடிகைகளில் பலர் ஜோடி சேர்ந்து நடிக்காவிட்டாலும் சிவாஜி அவர்கள் படங்களில் நடிப்பதற்குச் சந்தர்ப்பம் வாய்த்ததே என இன்றும் பெருமையுடன் பேசிக் கொள்கிறார்கள்.

பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பரப்புவது போல், சிவாஜியின் நாயகியாக நடித்து புகழ்பெற்ற கதாநாயகிகள் சிலரை பற்றி அடுத்த இதழில் காட்சிப்படுத்துவோம்.



# ஈழத்துத் திருக்கோவில்கள் 921



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## புதிய கதிர்வேலாயுதசுவாமி கோயில் பம்பலப்பிட்டி, கொழும்பு

'' நாளென் செயும் வினைதானெனென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங் குமரேசரிரு
தாளுஞ் சிலம்பும் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.''

இலங்கையின் தலைநகராக விளங்கும் கொழும்பு மாநகரின் மத்தியில், தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாக, பம்பலப்பிட்டி என்னும் இடம் காணப்படுகின்றது. இப்பகுதியில் பல இந்து ஆலயங்கள் வரலாற்றுச்சிறப்புடன் கலைநயம் கொண்டவையாக அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான ஆலயங்களுள் பம்பலப்பிட்டி புதிய கதிர்வேலாயுதசுவாமி கோயிலும் அடங்கும். இக்கோயில், காலத்திற்குக் காலம் இன்னல்களை அனுபவிக்கும் தமிழ் மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் இடமாகவும், இந்து பாரம்பரியத்தின் தொன்மையை மக்களுக்கு உணர்த்தும் இடமாகவும் விளங்குகின்றது. கொழும்பு நகரிலே வாழ்வோரையும், வாழ்வுதேடி வருவோரையும் காத்து வாழ்வளிக்கும் இவ்வாலயங்களின் வரலாறு, பரந்து வாழும் தமிழ் மக்களின் வாழ்வியல் அடையாளமாகக் காணப்படுகின்றது.

இலங்கையும், இந்தியாவும் இருவேறு நாடுகளாக இருந்தபோதிலும் சமய, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களில் பொதுப் பாரம்பரியத்தைக் கொண்டவையாக விளங்குகின்றன. ஆதிகாலந்தொட்டு வியாபாரநோக்கோடு தமிழகத்திலிருந்து மக்கள் ஈழத்திற்கு வருவதும், ஈழத்திலுள்ள மக்கள் இந்தியா செல்வதும் இன்றும் தொடர்கின்றது. இந்தவகையிலே திரைகடலோடியுந் திரவியந் தேடு என்ற நோக்கோடு, தமிழகத்திலிருந்து ஈதல், காத்தல், வகுத்தல் என்ற பண்பாடுடைய நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர், ஈழத்திற்கு வியாபார நோக்கோடு வருகை தந்தனர். இம்மக்கள் இறையுணர்வும், பக்திப்பெருக்கும் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். தாம் சென்ற இடமெல்லாம் ஆலயங்களையும், மடங்களையும், கல்விக்கூடங்களையும் நிறுவிப் போற்றி வளர்த்தமை இதற்குச் சான்றாகக் காணப்படுகின்றது.

வர்த்தக நோக்கொடு இலங்கைக்கு வந்து குடியேறிய நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர், தாம் பிறந்து வாழ்ந்த இடத்திலே வணங்கிய தெய்வங்களுக்கு, தாம் குடியேறிய புதிய இடங்களிலும் ஆலயங்களை அமைத்து வழிபாடு செய்து வரலாயினர். 1839 ஆம் அண்டு கொழும்பிலுள்ள செட்டியார் தெருவில், புதிய கதிரேசன் கொயிலை அமைத்தனர். அக்காலந் தொட்டு இன்றுவரை இம்மக்களின் அயராத முயற்சியாலும், தெய்வீக நாட்டத்தினாலும் கொழும்பு மாநாகரின் பிரபலமான அருள்மிக்க ஆலயமாக கொழும்பு செட்டியார்தெரு புதிய கதிரேசன் கோயில் காணப்படுகின்றது.

பல தசாப்தங்களுக்கு முன்புவரை, ஈழத்திலே மோட்டார் வாகனங்களின் பாவனை காணப்படவில்லை. இக்காரணத்தினால் நீண்டதூரம் பிரயாணம் செய்வோர், மாட்டுவண்டிகளையே பயன்படுத்தி வந்துள்ளனர். போக்குவரத்து வசதிகள் வளாச்சியடையாத அக்காலத்தில், கதிர்காமக்கந்தனைத் தரிசிப்பதற்காக இந்துக்களும், ஏனையோரும் கால்நடையாகக் கதிர்காமம் செல்வது வழக்கம். கதிர்காமத்தின் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி, ஆடிமாதம் பௌர்ணமி தினத்திலே தீர்த்தோற்சவம் சிறப்பாக நடைபெறும்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர், விழா ஆரம்பிப்பதற்கு ஒரு மாதம் முன்னதாகவே காவடி எடுத்து, பாதயாத்திரையாகக் கதிர்காமம் செல்வது வழக்கம். இவ்வாறு செல்லும் வேளைகளில் பல்வேறு இடர்களைச் சந்தித்தே கதிர்காத்தை அடையவேண்டிய நிலை காணப்பட்டது. கதிர்காமக்கந்தன்மேல் கொண்ட பக்தி வைராக்கியத்தினால், இடர்களையெல்லாம் துடைத்தெறிந்து வேழமுகன் தம்பியே சரணம், கதிர்காமக்கந்தா சரணம் என்ற பக்தி வைராக்கியத்தோடு பயணத்தைத் தொடர்வார்கள்.

நாளடைவில் இவ்வாறான பாதயாத்திரையில், பல்வேறு இன மக்களும் கலந்துகொண்டார்கள். இவ்வாறானநிலையிலே அக்காலத்தில் கொழும்பில் கொடிய வைசூரிநோய் பரவியிருந்தது. அப்பொழுதிருந்த அரசஅதிபர், கொழும்பில் வாழ்ந்த மக்களை இந்நோய் தாக்காதிருக்கவும், கொழும்பிலிருந்து இத்தொற்றுநோய் வேறிடங்களுக்குப் பரவாதிருக்கவும், கொழும்பிலுள்ள மக்கள் வேறிடங்களுக்குச் செல்வதற்குத் தடை விதித்தார். இந்நோய் பரவிய காலப்பகுதி, கதிர்காம யாத்திரீகர்கள் கதிர்காமம் செல்லும் காலமான காரணத்தால், யாத்திரிகர்கள் தமது யாத்திரையைத் தொடரமுடியாத நிலை காணப்பட்டது.

ஆயினும், யாத்திரையைத் தொடர்ந்த நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினரையும், ஏனைய குழுவினரையும் பம்பலப்பிட்டி ஊடாகச் செல்லும்பொழுது தடுத்து நிறுத்தினர். அவ்வாறு தடுத்து நிறுத்தப்பட்ட இடத்திலே மூன்று இந்துக்கோயில்கள் எழ இந்நிகழ்ச்சி காரணமாக அமைந்தது. யாத்திரை தடைப்பட்டதைப் பொறுக்கமுடியாத பக்தர்கள், தமது காவடிகளுடன் தற்காலத்தில் கோயில்களாகக் காணப்படும் காணிகளில், காவடிகளை இறக்கிவிட்டு, முருகப்பெருமான்மீது பழியைப்போட்டுவிட்டு தமது வீடுதிரும்ப எண்ணங் கொண்டனர்.

இவர்கள் வேதனையைப் போக்க எண்ணங்கொண்ட கந்தவேள், அன்பர் ஒருவர் கனவிலே தோன்றி, கதிர்காமம் செல்ல முடியாவிட்டாலும் வருந்தாது, இனி வருங்காலங்களில் கொழும்பிலேயே இவ்விழாவை நடத்தி, அங்கு வாழும் மக்களுக்கு இவ்விழாவின் மகிமையை எடுத்துணர்த்துமாறு கூறி மறைந்தார்.

*வளரும்...*



# ஜெமினி – 100

**- சிவா பரமேஸ்வரன் - மூத்த செய்தியாளர்**



அவர் நடந்த தடங்களில் நானும் நடந்துள்ளேன். அது பெரிய விஷயம் இல்லையென்றாலும் மன-தளவில் சிறிய மகிழ்ச்சியை அளிக்கிறது. அவர் உலகமெங்கும் தமிழ் சினிமா ரசிகர்களால் அறியப்படும் மனிதர். தனக்கென்று தனி பாணி-யை வகுத்துக் கொண்டு அதில் வெற்றிகரமாப் பயணித்தவர். நான் அப்போது மாணவர்.

எங்கள் இருவருக்குமான அந்த தொடர்புப் பாலம் சென்னை கிறிஸ்தவக் கல்லூரி. அவர் அங்கு இரசாயனத்துறையில் குறுகி-ய காலம் விரிவுரையாளராக இருந்தார், நான் பௌதிகத்துறையில் மாணவராக இருந்தேன். இவ்விரு துறைகளும் ஒரே கட்டடத்தில் மேலும் கீழுமாக இருந்தன.

சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் அவர் குறுகிய காலமே விரி-வுரையாளராக இருந்தாலும் அந்தப் பசுமைச் சூழலின் தாக்கம் தனது படங்களில் இருந்துள்ளது என்று அவர் கூறக் கேட்டுள்ளேன். திரைப்படங்களிலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் அவர் "காதல் மன்னனாகவே" திகழ்ந்தார். அவர் ஆசைப்பட்டதைவிட அவர் மீது ஆசைப்பட்டவர்களே அதிகம் என்று திரைப்படத்துறையினர் பேசுவர்.

நான் சென்னை வானொலி நிலையத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பு அதிகா-ரியாக பணியாற்றிய போது அவரை பலமுறை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர் அப்போது திரைப்படங்களிலிருந்து ஓய்வு பெற்று சென்னையின் மத்தியப் பகுதியில் மரங்கள் சூழ்ந்த வீடொன்றில் குடும்பத்தாருடன் வாழ்ந்து வந்தார்.

### ஆரவாரமில்லாத ஆளுமை

தமிழ்த் திரையுலகில் 1950 தொடங்கில் கால் நூற்றாண்டுகளுக்கு கோலோச்சிய மும்மூர்த்திகளில் ராமசாமி "ஜெமினி" கணேசனும் ஒருவர். அச்சமயத்தில் சிவாஜி கணேசன் மற்றும் எம்ஜிஆர் எனும் இருபெரும் ஆளுமைகள் சினிமாவி-ல் இருந்தபோது அவர்களுக்கு இணையாக ஆரவாரமில்லாமல் தனக்கென்று ஒரு பாணியை வகுத்துக் கொண்டு, யதார்த்தமான நடிப்புடன் நாம் அன்றாடம் வாழ்க்கையில் சந்திக்கும் கதாபாத்திரமாக திரையில் பரிமளித்தவர் ஜெமினி கணேசன்.



உணர்ச்சிகளின் உச்சத்தை சிவாஜி கணே-சனும் வீரதீர சூர சண்டைக் காட்சிகளை எம்ஜிஆரும் திரையில் காட்டி ரசிகர்களைக் கவர, ஜெமனியோ தனது மென்மையான காதல் ரசம் உருகும் நடிப்பால் ரசிகர்களை ஈர்த்தார்.

அந்தக் காலகட்டத்தில் படித்து பட்டம் பெற்று திரைத்துறையில் நுழைந்த மிகச் சிலரில் ஜெமினியும் ஒருவர். பல இடங்களில் வேலைக்கான வாய்ப்பு வர இறுதியில் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் விரிவுரையாளராகச் சேர்ந்து பின்னர் அச்சமயத்தில் தமிழ்த் திரையுலகில் பிரபலமாக இருந்த குழலூதும் இரட்டைச் சிறார்களைச் சின்னமாகக் கொண்டிருந்த ஜெமினி பிக்சர்ச்ஸில் தயாரிப்பு நிர்வாகியாகச் சேர்ந்தார். கணேசனுடன் "ஜெமினி" நிரந்தரமாக ஒட்டிக் கொண்டு ஜெமினி என்றால் இவரையே குறிக்கும் என்றானது.

### நகைச்சுவை உணர்வு

பழகுவதற்கு மிகவும் இனிமையானவர் "ஜெமினி கணேசன்". நான் அவரை பணி நிமித்தமாகச் சந்திக்கும் சூழலில் இன்முகத்துடன் வரவேற்றுப் பேசியது அவர் மீதான மரியாதையை அதிகரித்தது. உரையாட வேண்டும் அல்லது பேட்டிக்காக நேரம் வேண்டுமென்றால் முடிந்தால் உடனடியாகவும், முடியாவிட்டால் மென்மையாக இயலாமையையும் தெரிவிக்கும் பண்பு அவரி-டம் இருந்தது.

பொதுவாக அவரை நான் சந்திக்கச் சென்றால் எப்படியும் உடன் ஓரிருவர் வருவார்கள். அனைவரையும் அன்புடன் வரவேற்று "காபி சாப்பிடலாமா" என்று கேட்டுவிட்டு பிறகே ஆறுதலாகப் பேசுவார்.



பேட்டி என்றாலும் சரி அல்லது தனிப்பட்ட உரையாடல் என்றாலும் அவரிடம் அசாத்தியமான நகைச்சுவை உணர்வு வெளிப்படும். சில சமயம் வாய்விட்டுச் சிரிப்பார். தனிப்பட்ட முறையில் யாரையும் அவர் எதிர்மறையாகச் சுட்டிக்காட்டிப் பேசியதை நான் கண்டதில்லை.

திரைத்துறையில் அவருடைய வெற்றிக்கு அவரது பொறுமை ஒரு முக்கியக் காரணம். இந்தியா விடுதலையடைந்த ஆண்டு-1947-மிஸ் மாலினி எனும் திரைப்படம் மூலம் அவர் அறிமுகமானாலும் அவர் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு-1953-தாயுள்ளம் படத்தில் வில்லனாக நடித்த பி-றகே திரையுலகால் உற்று நோக்கப்பட்டார். அடுத்த ஆண்டு வெளியான "மனம் போல் மாங்கல்யம்" அவரை நட்சத்திர அந்தஸ்த்துக்கு உயர்த்தியது. பின்னர் வெற்றி அவரைத் தொடர்ந்தது. அவருக்குள் இயற்கையாக அமைந்திருந்த நகைச்சுவை உணர்வு திரையில் அவருக்கு பெரும் பக்கபலமாக இருந்தது.

### காலங்களில் அவர் வசந்தம்

பாவ மன்னிப்புத் திரைப்படத்தில் வரும் பாடலான "காலங்களில் அவள் வசந்தம்" என்று திரையில் ஜெமினி பாடுவதாகக் கவியரசர் கண்ணதாசன் எழுதியிருந்தார். கதாநாயகியை நோக்கி அவர் பாடுவதாக அமைந்த அந்தப் பாடலில் "அவள்" என்பதற்குப் பதிலாக "அவன்" என்று கவியரசர் எழுதியிருக்கலாமோ என்று பல சமயம் நான் எண்ணுவதுண்டு.

அந்தளவுக்கு திரையுலகில் ஒரு வசந்தமாகவே விளங்கியவர் "ஜெமினி" கணேசன். அவர் காதல் ரசம் சொட்ட எந்த அளவுக்கு வசீகரமாக நடிக்க முடியுமோ அந்தளவுக்கு அவர் சோகக் காட்சிகளிலும் தனது முகபாவம் மற்றும் உடலசைவுகள் மூலம் சிறப்பாக வெளிப்படுத்தினார். இதற்குப் பல படங்களை உதாரணமாகச் சொல்லலாம்.




அவரது பெரும்பாலான படங்கள் கருப்பு வெள்ளைக் காலத்தில் இருந்தது அவரது நடிப்புக்குச் சான்று கூறுவது போலிருக்கும். கருப்பு வெள்ளையில் இருக்கும் அழுத்தம் வண்ணப் படங்களில் வராது. வண்ணம் மெருகேற்றலாம் ஆனால் நடிப்பின் ஆழம் கருப்பு வெள்ளைப் படங்களிலேயே அதிகம் தெரியும் என திரை விமர்சகர்கள் கூறுவார்கள்.

அவருக்கு திரையில் பாடல்களுக்கு ஏற்ப நடனமாட வராது என்பதில் ஓரளவு உண்மை இருந்தது. எனினும் அந்தப் பாடல்களின் படப்பிடிப்பு, வரிகள் மற்றும் இசை அதை மறைத்துவிடும். அவரது பாடல்கள் இன்றளவும் நிலைத்து நிற்பதற்கு மிகப்பெரும் பக்கபலமாக திரையில் அவரது குரலாக இருந்தவர்கள் பி.பீ.எஸ் மற்றும் ஏ.எம்.ராஜா.

### ஜெமினியின் குரல்

பி பி ஸ்ரீநிவாஸ் ஏ எம் ராஜா இருவரும் இல்லை என்றால் ஜெமினி இல்லை என்பதை அவரே வெளிப்படையாகக் கூறியுள்ளார். அவரது மென்மையான நடிப்புக்கு இவர்களது குரல் மிகவும் ஒத்திசைவாக அமைந்தது. அவர்கள் இருவரும் ஜெமினிக்காக பாடிய பாடல்களைப் பட்டியலிட்டால் அது பக்கம் பக்கமாகச் செல்லும். ஏ. எம்.ராஜாவை நான் சந்தித்ததில்லை ஆனால் சென்னை வானொலி நிலையித்தில் இருந்த சில மூத்த நபர்கள் அவர் ஜெமினி கணேசனின் நற்பண்புகள் குறித்து மிகவும் சிலாகித்துப் பேசி-யதாகக் கூறுவதை நான் கேட்டுள்ளேன்.

ஆனால் திரையிசையில் தனக்கென ஓர் இடத்தைப் பெற்றுள்ள பி.பீ.ஸ்ரீநிவாஸை பல முறை சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிட்டியது. அவர் அடிக்கடி சென்னை வானொலி நிலையத்துக்கு வரும் போது அனைவருடனும் மிகவும் நேசத்துடன் பழகுவார். தலையில் குல்லா, சட்டையில் இரு பைகள், அந்தப் பைகள் நிறைய பல வண்ணத்தில் பேனாக்கள். கையில் ஒரு சிறிய பை, எழுதும் அட்டை, அதில் செருகப்பட்ட வெள்ளைக் காகிதங்கள் இவை அவரின் அடையாளம். இவையில்லாமல் பி.பீ.எஸ்ஸைக் காண முடியாது.

பெரும்பாலும் மாலை நேரங்களில் சென்னையிலுள்ள அமெரிக்கத் துணைத் தூதரகத்திற்கு எதிரேயிருந்த "நியூ உட்லாண்ட்ஸ் டிரைவ் இன் ஹோட்டலில்" அவரை மாலையில் காணலாம். அவரது பச்சை நிற ஃபியட் கார் அவர் அங்கிருக்கிறார் என்பதற்கு அடையாளம்.

அப்படி பல நாட்கள் அவரை நான் அங்கு சந்தித்துள்ளேன். பார்த்தவுடன், "வாப்பா....சிவா....ராமா....கிருஷ்ணா...." என அவர் கூப்பிடுவது இன்றும் என் காதுகளில் ஒலிக்கிறது. அப்படித்தான் ஒரு நாள் அவரை சந்தித்த போது "ஜெமினி" குறித்து பேச்சு வந்தது. அப்போது பல விஷயங்களைக் கூறினார். இவர் அவருக்காக பின்னணி பாடிய ஒவ்வொரு பாடலையும் எப்படி வரிவரியாக க-ணேசன் ரசிப்பார் என்றும் இசையின்றி இருவரும் அந்தப் பாடலை பாடி மகிழ்வார்கள் என்றும் கூறினார் பி.பீ.எஸ்.



"ஜெமினியின்" தனிப்பட்ட வாழ்க்கை குறித்து பெரிதும் கவலையும் அக்கறையும் இவர் கொண்டிருந்தார். ஒரு மாபெரும் கலைஞனுக்கு அதுவொரு பின்னடைவாகவே இருந்தது என்றும் வருந்தினார். அதில் உண்மையும் இருந்தது.

ஒரு நடிகர் என்பதற்கு அப்பாற்பட்டு விளையாட்டுகளில் அதி-கம் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர் ஜெமினி. சென்னை சேப்பாக்கம் விளையாட்டரங்கில் கிரிக்கெட் போட்டிகள் நடக்கும் நேரங்களில் அங்கு தவ-றாமல் அவரைக் காணலாம். டென்னிஸ் போட்டிகளிலும் அவருக்கு ஆர்வம் இருந்தது.

இந்தியத் திரையுலகில் தனித்துவ ஆளுமையுடன் திகழ்ந்த "ஜெமினி" கணேசனின் நூற்றாண்டைத் தமிழகம் கவனத்தில் எடுக்கவில்லை என்பது மி-கவும் வருத்தமான விஷயம். தமிழ் ஊடகங்கள் கூட அதைக் கவனிக்கத் தவ-றியதாகவே நான் கருதுகிறேன். சென்னையில் அவருக்கு ஒரு சிலை வைக்க இடமில்லையா அல்லது அதற்கு மனமில்லையா?

ஆனால் அவர் என்றும் ரசிகர்களின் மனதில் நீங்கா இடத்தைப் பிடித்திருக்கும் "காதல் மன்னன்".

**முக்கிய அறிவித்தல்**

**பிரம்டன் தமிழ் முதியோர் கழக அங்கத்தவர்களுக்கு**

COVID-19 தொற்று நோய் பரவல் காரணமாக மேற்படி கழகத்தினால் நடாத்தப்படும் அங்கத்தவர்களுக்கான பொதுக் கூட்டங்கள், வைத்திய கருத்தரங்குகள், ஆலோசனைகள், யோகாப் பயிற்சிகள், ஆங்கில வகுப்புகள், keyboard வகுப்புகள், Brain Beat Dance என்பன ZOOM மூலம் நடாத்த கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளது. அங்கத்தினர் அனைவரும் பங்குபற்றி பயனடையுமாறு வேண்டப்படுகின்றனர்.

ZOOM LINK I.D, PASSWORD என்பன அங்கத்தவர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. கிடைகாதவர்கள், தவறவிட்டவர்கள் நிர்வாகத்தினரைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

**விபரங்கள்:**

1) யோகாப் பயிற்சி: பிரதி திங்கள் / வியாழன் தோறும்
காலை 10:00 மணி முதல் 11:00 மணி வரை.
2) பொதுக் கூட்டம்: பிரதி திங்கள் இரவு 8:00 மணி முதல் 10:00 மணி வரை.
3) ஆங்கில வகுப்புகள்: திங்கள / வெள்ளி தோறும்
மாலை 4:00-5:00 மணிவரை நடைபெறும்.
4) KEY BOARD வகுப்புகள்: பிரதி செவ்வாய் தோறும்
காலை 10 மணி முதல் மாலை 1:30 வரை, நான்கு குழுக்களாக நடைபெறும்.
5. BRAIN BEAT DANCE: புதன்கிழமை மாலை 8:00-8:30 மணிவரை நடைபெறும்.
கார்த்திகை 23- மாவீரர் நினைவு தினம் மாலை 8:00-10:00 மணிவரை
பொதுக்கூட்டத்தில் அனுசரிக்கப்படும்,
6. கருத்தரங்குகள். பிரதி வியாழன் மாலை 8:00-10:00 வரை.
கார்த்திகை 26- DR. PAUL JOSEPH அவர்களால் Covid-19 ன் தற்போதைய நிலமை பற்றிய கருத்தரங்கு மாலை 8:00-10:00 வரை நடைபெறும்.

நன்றி!

தலைவர்: திரு. டேவிட் ராஜரட்ணம்
(416) 458-3270

# 'எந்தவொரு இல்லத்தில் திருமுறைப் பாடல்களை, திருத்தமாக, குழந்தைகள் பாடுகின்றனவோ, அந்த இல்லம் நிச்சயமாக ஒரு ஈழத்தமிழரின் இல்லமாகத்தான் இருக்கும்.'

## இலண்டன் பெரியபுராணப் பேருரையில் தமிழ்நாடு டாக்டர் வே. சங்கரநாராயணன் புகழாரம்



பிரித்தானியாவில் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக சைவத்தமிழ் வளர்த்து வரும் அமைப்பு இலண்டன் சைவ முன்னேற்ற சங்கம். இந்த அமைப்பு சிவன் ஆலயம் ஒன்றையும் இலண்டனில் நிறுவி, நிர்வகித்து வருகிறது. பல்வேறு சமய, கலை, பணிகளை நிகழ்த்தி வரும் இந்த அமைப்பு, இலண்டன் சைவப்பெரியார் திரு. இராமநாதன் அவர்களின் சீரியமுயற்சியால், வாரந்தோறும் பெரியபுராண சொற்பொழிவுகளை கடந்த கால்நூற்றாண்டு காலமாக நடத்திவருகிறது. இந்த இக்கட்டான கொரோனா சூழ்நிலையிலும், இந்த சொற்பொழிவுகளை இணையவழிக் கருத்தரங்குகளாக இந்த அமைப்பு தொடர்ந்து நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. இந்த வெள்ளிக்கிழமை (13.11.2020) தமிழகத்தின் பிரபலமான ஆன்மீகப் பேச்சாளர், சேலம் கைலாஷ் மகளிர் கல்லூரியின் மேனாள் முதல்வர் டாக்டர் வே. சங்கரநாராயணன் அவர்கள் இந்த இணையவழிக் கருத்தரங்கில் கலந்துகொண்டு திருநாவுக்கரகநாயனார் புராணம் குறித்து அரியதொரு உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில், திருநாவுக்கரசர் குறித்த பல அரிய, நுட்பமான செய்திகளை தெரிவித்தார்.

அவர் தனது உரையில், நாயன்மார்களில் திருநாவுக்கரசர் மட்டும்தான் அதிகமான பெயர்களை உடையவர். அவருக்கு பூர்வஜென்ம பெயர் வாகீசர். தாய், தந்தையர் இட்ட பெயர் மருள் நீக்கியார். சமணர்கள் அவருக்கு இட்ட பெயர் தருமசேனர். ஞானசம்பந்தர் அவரை அழைத்த பெயர் அப்பர். சிவபெருமான் அவருக்கு அளித்த பெயர் திருநாவுக்கரசர். புலவர்கள் அழைத்த பெயர் தாண்டகவேந்தர். பொதுமக்கள் அழைத்த பெயர் ஆளுடையஅரசு. இது தவிர பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் 93 பெயர்களால் இவரைக் குறிப்பிடுகின்றார். திருநாவுக்கரசர் வரலாறு பெரியபுராணத்தில் 429 பாடல்களில் விரித்துரைக்கப்படுகிறது.




கி.பி. 545ம் ஆண்டு ஜெயவருடம், பங்குனி மாதம், ரோகினி நட்சத்திரத்தில், தமிழ்நாட்டின் திருமுனைப் பாடி நாட்டில், திருவாமூர் என்ற திருத்தலத்தில் அவதரித்தவர் திருநாவுக்கரசர். 81 ஆண்டுகள் வாழ்ந்து, கி.பி. 636ம் ஆண்டு சித்திரை மாதம் சதய நட்சத்திரத்தில் திருப்புகலூரில் முக்திப்பேறு அடைந்தார். அவருடைய தமக்கையர் திலகவதியார் தாயை இழந்து, தந்தையை இழந்து, மணம்பேசி முடிக்கப்பட்ட மணாளனையும் இழந்து, தனது கால்களைக் கட்டிக்கொண்டு கதறிய 9 வயது தம்பிக்காக உயிர்தாங்கி, தவவாழ்வு வாழ்ந்த தகைமையாளர்.

காரைக்காலம்மையார், மங்கையற்கரசியார், இசைஞானியார் ஆகிய மூன்று பேரை மட்டுமே பெண் அடியார்களாகப் பெரியபுராணம் குறிப்பிட்டிருந்தாலும், திலகவதியாரை போன்ற எண்ணற்றமாதரசிகள் தான் ஆண் அடியார்களின் புகழுக்கு அடித்தளமாக அமைந்திருக்கிறார்கள் என்பதை சேக்கிழார் பெருமான் குறிப்பிடத்தவறவில்லை. அப்படிப்பட்ட இல்லுறை பெண்களை "மனையறத்தின் வேர்கள்" என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகின்றார். கொண்டவனையும், குழந்தைகளையும் பேணிக்காக்கும் பெரும்பொறுப்பு வாய்ந்தவர்களாகப் பெரியபுராணம் பெண்களை சித்தரிக்கின்றது. குறிப்பாக குழந்தைகளை சைவத்தமிழ்மிக்க சந்ததியினராக மாற்றுவதற்கு பெண்களின் பங்களிப்பு அவசியம் தேவை. இன்றும் நான் உலகநாடுகளில் பயணம் செய்கின்றபொழுது, எந்தவொரு இல்லத்தில் திருமுறைப் பாடல்களை, திருத்தமாக, அட்சரம் பிசகாமல் குழந்தைகள் பாடுகின்றனவோ, அந்த இல்லம் நிச்சயமாக ஒரு ஈழத்தமிழரின் இல்லமாகத்தான் இருக்கும். அந்த இல்லங்களின் தாய்மார்கள் நன்றிக்குரியவர்கள்.



பெண்களை அவள், இவள் என்று ஏகவசனத்தில்தான் தமிழ் இலக்கியங்கள் முன்னர் குறிப்பிட்டுள்ளன. திருவள்ளுவரும், இளங்கோவடிகளும், கம்பனும்கூட அப்படித்தான் பாடினார்கள். ஆனால் இன்று பொதுவெளியிலும், சமூக வலைத்தளங்களிலும் பெண்களை, அவர்கள் வயது குறைந்தவர்களாக இருந்தால்கூட "அவர், இவர்" என மரியாதையோடு, மதிப்புப் பன்மைவிகுதி சேர்த்து அழைக்கும் மரபைத்தான் கடைபிடிக்கிறோம். இந்த மரபுமாற்றத்தை முதன்முதலாக இந்த மண்ணில் விதைத்தவர் சேக்கிழார் பெருமான்தான். சின்னக் குழந்தையாக இருந்தாலும், "திலகவதியார் வந்தார், மங்கையர்க்கரசியார் அவதரித்தார்" என பெண்களை மரியாதையோடு பெருமைப்படுத்தியது பெரியபுராணம். அதற்காக பெண்கள் உலகம் சேக்கிழார் பெருமானுக்கு பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது.

குறிக்கோள் வாழ்க்கை, தொண்டு வாழ்க்கை, துணிச்சலான வாழ்க்கை இவைகள் திருநாவுக்கரசர் வருங்காலக் குழந்தைகளுக்கு வகுத்துக் கொடுத்தபாடம். அது எந்த நூற்றாண்டுக்கும், எந்த நாட்டுக்கும், பொருந்தும்.

(தொடர்ச்சி 23ம் பக்கம்)




மலேசிய மடல்:

# நிக்சனை தெறிக்கவிட்ட இரும்புப் பெண் இந்திரா காந்தி
## 20-ஆம் நூற்றாண்டில் ஒரு நாட்டை உருவாக்கிய தலைவி

1971-ஆம் ஆண்டின் பிற்பகுதி.

பாகிஸ்தானை அடக்கி வைக்க ஒரேவழி போர்முனைதான் என்பதை தீர்மானித்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, பாகிஸ்தானின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்காவை நோட்டம் பார்க்க அந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் அங்கு பயணம் மேற்கொண்டார்.

மேற்கு பாகிஸ்தான், கிழக்கு பாகிஸ்தானில் (இன்றைய வங்காள தேசம்) புரிகின்ற துன்புறுத்தல், மனித உரிமை அத்துமீறல் பற்றியும் இதனால் அங்கிருந்து இலட்சக் கணக்கான அகதிகள் இந்தியாவிற்கு வந்தவண்ணமாக உள்ளனர் என்றெல்லாம் இந்திரா சொன்னதை காதில் வாங்காத அமெரிக்க அதிபர் ரிச்சர்ட் மில்ஹவுஸ் நிக்சன், வங்க அதிகள் சிக்கலை பன்னாட்டுப் பிரச்சினையாக ஏற்கவும் மறுத்தார்.



நிக்சனை ஆழம் பார்த்த சூட்டோடு, ஒரு பொது நிகழ்ச்சியில் "உலக சூழலில் இந்தியாவின் பங்களிப்பு" என்ற தலைப்பில் பேசிவிட்டு புது டில்லிக்குத் திரும்பினார் இந்திரா. இந்தியாவிற்கு எதிராக சீனா, பாகிஸ்தானுடன் 1969 முதல் அணி அமைத்து செயல்பட்டுவரும் நிக்சனை, ஏற்கெனவே அடையாளம் கண்டிருந்தார் இந்திரா.


அவர் கணித்தபடியே பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் போர் மேகங்கள் சூழ்ந்தன. 1971 டிசம்பர் 3-ஆம் நாள் பாகிஸ்தான் இராணுவம் திடீரென்று தாக்குதல் நடத்தியது. நிலைமையை அவதானித்திருந்த இந்திய ராணுவம் பின்வாங்கி சேதத்தைத் தவிர்த்தது. உடனே நாடாளுமன்றத்தைக் கூட்டிய இந்திரா, இந்தியாமீது போர் திணிக்கப்படுகிறது என்பதை எடுத்துரைத்து எதிர்க்கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்திவிட்டு, பாகிஸ்தானுக்கு எதிராக போர்ப் பிரகனத்தை அறிவித்தா.

அடுத்த நாளே பாகிஸ்தானுக்கு ஆதரவாக "எண்டர்பிரைசஸ்" என்னும் போர்க்கப்பலை இந்தியப் பெருங்கடல் பகுதிக்கு நிக்சன் அனுப்பினார். இதை சற்றும் எதிர்பார்க்காத இந்திரா, அயராமல் அரசதந்திர நடவடிக்கை முலம் மளமளவென்று செயலில் இறங்கினார்.

தன்னுடைய தனிச் செயலர் மூலம் மாஸ்கோவிற்கு இந்திரா காந்தி தகவல் அனுப்பியதும் சோவியத் ரஷ்யத் தலைமை, இந்திய - பாகிஸ்தான் விவகாரத்தில் மூன்றாம் தரப்பு தலையிடக்கூடாதென்று அமெரிக்காவிற்கு நேரடியாக எச்சரிக்கை செய்தது. இந்த அறிவிப்பு அமெரிக்காவின் காதுகளை எட்டும் முன்பே சோவியத் ரஷ்யாவின் 16 போர்க் கப்பல்கள் இந்தியப் பெருங்கடல் பகுதிக்கு விரைந்தன. அமெரிக்கா வாலாட்டினால தக்க பதிலடி கொடுக்கவும் இந்தியாவிற்கு ஆதரவாக பாகிஸ்தானை தாக்கவும் வந்த ரஷ்யக் கப்பல்கள் இலங்கை தலைமன்னாருக்கும் இந்தோனேசியாவின் ஜாகர்த்தாவிற்கும் இடையில் நிலைகொண்டிருந்தன.

ரஷ்யாவின் இந்த அதிரடியை எதிர்பார்க்காத நிக்சன், மலைத்து நின்றார். அமெரிக்காவின் விமானந்தாங்கி கப்பலைவிட ரஷ்யாவின் போர்க்கப்பல்கள் ஆற்றல் மிக்கவை. இந்த நேரத்தில் நாம் போரில் இறங்கினால் ரஷ்யாவிடம் தோற்க நேரிடும். அதனால், நிதானிப்பது நல்லது என்று நிக்சனின் பாதுகாப்பு ஆலோசகர் ஹென்றி கிஸ்சிங்கர் எச்சரித்தார்.

இரவு பகலாக இந்திய-பாகிஸ்தானிய இராணுவங்கள் களமாடிக் கொண்டிருந்த பரபரப்பிலும் நிக்சன் சளைக்காமல் அடுத்தக் காயை நகர்த்தினார். கிஸ்சிங்கரை இரகசியாக சீனாவிற்கு அனுப்பி வைத்தார். சீனாவின் பாதுகாப்புத் துறை உயர் அதிகாரிகளை சந்தித்த கிஸ்சிங்கர், "இந்த நேரத்தில் சீனாவின் துருப்புகளை லடாக்கிற்கு அனுப்பி, இந்தியாவின் கவனத்தை திசைதிருப்ப வேண்டும் அதற்கு ஈடாக, ரஷ்யாவின் இராணுவக் கட்டமைப்பை சீனா வேவு பார்க்க அமெரிக்கா உதவும்" என்ற நிக்சனின் ஒலையை வாசித்தார். சீனா இதை ஏற்க மறுத்தது. இந்த நேரத்தில் இந்தியாவிற்கு எதிராக களம் இறங்கினால், மாஸ்கோ சும்மா இருக்காது என்பதை அவதானித்து, கிஸ்சிங்கரை வெறுங்கையோடு அனுப்பியது. இது, நடந்தது 1971 டிசம்பர் 10-ஆம் நாள்.



இதையும் மோப்பம் பிடித்துவிட்ட ரஷ்யா, இந்தியாவிற்கான தனது தூதர் நிக்கோ லாய் பெட்ரோ மூலம் இந்திராவிற்கு ஒரு நல்ல செய்தியை அனுப்பியது. இந்திய - பாகிஸ்தான் போர் உச்சத்தில் இருக்கும் இந்த நேரத்தில் இந்தியாவின் லடாக் எல்லைப் பகுதிக்கு சீனா ஒருவேளை தன்னுடைய துருப்புகளை அனுப்பினால், அடுத்த வேளையே ரஷ்ய இராணுவம் சீனாவின் ஜின்ஜியாங் பகுதியை முற்றுகையிடும் என்ற தகவலை நிக்கோ லாய் மூலம் 13-12-1971ஆம் நாள் அறிந்த இந்திரா, மிகவும் உற்சாகம் அடைந்தார்.

மொத்தத்தில் தனக்கு எதிராக நிக்சன் மேற்கொண்ட அத்தனை முயற்சியையும் முறியடித்தார் இந்திரா. பாகிஸ்தானையும் சீனாவைவும் சேர்த்து கொண்டு இந்தியாவை மட்டம்தட்ட நினைத்த இனவாதி நிக்சனுக்கு எதிராக, சோவியத் ரஷ்யாவின் ஒற்றைத் துணையுடன் இந்திரா காந்தி வலுவான ஆப்புக் கட்டையை இறுக்கமாக அடித்தார்.

1971 டிசம்பர் 16-ஆம் நாள் போர் முனையில் இருந்து அழைப்பு வந்தது. இந்திராவுடன் மறுமுனையில் பேசியவர் ஏர் மார்ஷல் மானக் ஷா. "பாகிஸ்தானிய இராணுவம் சரணடைந்து விட்டது. தொண்ணூறாயிர துருப்பினரை சிறைப்பிடித்துள்ளோம்" என்ற தகவலைக் கேட்டவுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த இந்திரா காந்தி துள்ளலுடன் எழுந்தார். நாடாளுமன்றத்தை அவசரமாகக் கூட்டிய அவர், டாக்காவை தலைநகராகக் கொண்டு வங்கதேசம் என்ற நாடு உருவாக்கப்படும் என்று பிரகடனம் செய்தார்.

ஒரு நாடு இன்னொரு நாட்டின்மீது ஆதிக்கம் செலுத்தக் கூடாது எந்த நாடும் தேவையில்லாத இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடாது என்று ஐநா பாதுகாப்பு மன்றம் உலக நாடுகளைக் கேட்டுக் கொண்டிருந்த அந்த வேளையிலும் ஒரு நாட்டையே உருவாக்கி, தெற்காசிய வரைபடத்தையே மாற்றியமைத்த இந்திரா காந்தியின் புகழ் உலகெங்கும் பரவியது.

அப்படிப்பட்ட இந்திரா காந்திக்கு நவம்பர் 19-1917) பிறந்த நாள்.

*நக்கீரன் - Nakkeeran 013-244 36 24*
*(கோலாலம்பூர்)*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

ALL DEBT SOLUTIONS C R PLAN
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

தங்கநகை அடகுமாடம்

KANAGAAMBIKAI

PAWN BROKERS





25 வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

பவுண் வங்கி

தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

# இவ்வார ராசிபலன்

**20-11-2020 வெள்ளி தொடக்கம் 26-11-2020 வியாழன் வரையும்**




**மேஷம்:** வேண்டாத நட்புக்கள் விலகி ஓடக்கூடிய வாரம்புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: கைலாசநாதப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**ரிஷபம்:** கண்ணும் கருத்துமாக செயல்பட்டு பொன்னும், பொருளும் சேரக்கூடிய வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும். பைரவ வழிபாட்டால் பாவம் தீரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அங்காள பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மிதுனம்:** வெறுப்புக்கள் விலகி பொறுப்புக்கள் சேரக்கூடிய வாரம். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். நோய் அகலும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டமாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சிஹயம் கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கனகதுர்க்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** கலக்கமான சூழ்நிலைகள் விலகி இணக்கமான சூழ்நிலைகள் ஏற்படக்கூடிய வாரம். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை கூடும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். உற்சாகம் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். மங்கல செய்தியால் மனம் மகிழும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**சிம்மம்:** துயரங்களை துடைத்தெறிந்து உயரங்களை சந்திக்கக்கூடிய உன்னதமான வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும்.பேச்சில் கணிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அக்னிலிங்கப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V





**கன்னி:** நட்டமில்லாத நன்மைகளை சந்திக்கக் கூடிய வாரம். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன் பிறப்புகளால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். மேன்மையான நாள். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பட்டத்தரசியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**துலாம்:** பொறுமையை கடைப்பிடித்து பொறாமையை விரட்டியடிக்கக் கூடிய நாளாக உள்ள வாரம். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும்.உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். பணியில் உயர்வு கிட்டும். கஷ்டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும்.விவேகமான வாரம். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஹேரம்ப கணபதி, அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**விருச்சிகம்:** உன்னதமான கிருபைகளும் உண்மையான நன்மைகளும் நடக்கக்கூடிய வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும் நாள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வீரஅண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**தனுசு:** முத்தாய்ப்பான முன்னேற்றங்களை சந்திக்கக்கூடிய வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஜலகண்டேஸ்வரர், அதிர்ஷ்ட எண், 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**மகரம்:** விருப்பங்கள் நிறைவேறி திருப்பங்கள் நடக்கக்கூடிய வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: தேவி செல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** பணவரவும், பாராட்டும் கிடைக்கக்கூடிய வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரித்து குடும்பம் ஒன்று சேரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மாங்கல்யேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**மீனம்:** கண்ணியமான புண்ணியம் கிடைக்கக்கூடிய வாரம். மனம் மகிழும் நாள். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். திறமைகள் அதிகமாகும். இன்னல்கள் அகலும். கடன் தீரும். ஆக்கம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். வியாபாரத்தில் கவனம் தேவை. தன வரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். பழைய நட்பு பலன் தரும். உறவினரால் பாதகம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. உலோகத் தொழில் உயர்வு தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: அன்னமலையார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

## எந்தவொரு இல்லத்தில் திருமுறைப் பாடல்களை...

*(20ம் பக்கத் தொடர்ச்சி)*

முடியாட்சிகாலத்திலேலேயே, "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம். ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்" என ஆதிக்கசக்திகளுக்கு எதிராக உரக்கக்குரல் கொடுத்த உலகத்தின் முதல் போராளி அப்பரடிகள் என்பதை உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுங்கள். முடியாட்சி காலத்தில், உழவாரம் மட்டுமே ஏந்தி, தன்னந்தனியாக ஒரு 70 வயதுக்கிழவர், நீற்றறையில் இட்டபோதும், கல்லைக்கட்டிக் கடலிலே போட்டபோதும், பட்டத்துயானையின் பாதங்களில் இட்டபோதும், நஞ்சு கொடுத்துக்கொள்ள முனைந்தபோதும், நடுங்காமல் துணிச்சலோடு, இரும்பு மனிதராக இருந்திருக்கிறார் என்றால் அவரைத்தானே உலகத்தின் முதல் போராளி என்று போற்ற முடியும்?

திருநாவுக்கரசருக்கும், திருஞானசம்பத்தருக்கும் இடையில் மூன்று சந்திப்புகள் நிகழ்ந்தன. முதல் சந்திப்பு சீர்காழியில் நிகழ்ந்தபோது திருஞானசம்பந்தருக்கு வயது ஏழு. திருநாவுக்கரசருக்கு வயது எழுபது. இரண்டாம் சந்திப்பு திருப்பு கலூரில் முருகநாயனார் மடத்தில் நிகழ்ந்தது. அப்போது அவர்கள் இணைந்து திருவீழிமிலை சென்று, இறைவனிடம் படிக்காசுபெற்று மக்களின் வறுமையைத் தீர்த்தனர். திருமறைக்காடு சென்று கதவு திறக்கவும், அடைக்கவும் பாடினர். மூன்றாவது சந்திப்பு திருப்பூந்துருத்தியில் நிகழ்ந்தது. அப்பொழுது தான் திருஞானசம்பந்தரின் சிவிகையை திருநாவுக்கரசர் சுமந்தார். ஏழாம்நூற்றாண்டில் சமணத்துக்கு எதிராக வெடித்த பக்திப்புரட்சிக்கு வடக்கே திருநாவுக்கரசரும், தெற்கே திருஞானசம்பந்தரும் தலைமையேற்றனர் என்பது தமிழ்ச் சமயவரலாறு.

நாயன்மார்களில் இறைவழிபாட்டோடு, உழவாரப்பணியும் மேற்கொண்டு, நீண்ட தூரப்பயணங்களை மேற்கொண்டவர் திருநாவுக்கரசர் மட்டும்தான். தள்ளாத முதுமையிலும் காசி தாண்டி கயிலை செல்லும் வழியில் தான் இறைவன் கருணை கொண்டு கயிலைகாட்சியை திருவையாறிலேயே அவருக்கு காட்டி அருள் செய்வதாக உறுதியளித்தார். அவ்வாறே காட்டியும் அருளினார். அவர் பாடிய பாடல்களுக்குத்தான் தேவாரம் என்று பெயர். திருஞானசம்பந்தர் பாடல்களை திருக்கடைக்காப்பு என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடல்களை திருப்பாட்டு என்றும்தான் முதலில் அழைத்தனர். பின்னர்தான் தேவாரம் என்ற சொல்லின் பொருட் சிறப்புகருதி, மூவர் பாடல்களுக்கும் தேவாரம் என்று பிற்காலத்தில் பெயரிட்டனர். திருநாவுக்கரசர் வாழ்க்கையிலே கடுமையான தவங்கள் இல்லை. தொண்டு செய்வதையே தன்னுடைய தவமாக அவர் மாற்றிக்கொண்டார். சிவநாமத்தைவிட திருநாவுக்கரசநாயனாரின் நாமத்தையே தினந்தோறும் எழுதியும், கூறியும் அப்பூதியடிகள் என்ற நாயனார் முக்திப்பேறு அடைந்தார் என்றால், எம் பெருமானுக்கு ஈடான சிறப்பு வாய்ந்தவராக திருநாவுக்கரகநாயனார் திகழுகின்றார்." என்று தனது ஒருமணிநேர உரையில் டாக்டர் வே. சங்கரநாராயணன், பல பெரியபுராணப் பாடல்களோடும், திருமுறைப் பாடல்களோடும் விளக்கினார்.

நிறைவில் கனடா உதயன் வார இதழ் ஆசிரியர் லோகேந்திரலிங்கம், இலங்கை இந்து குருமார் அமைப்பின் தலைவர் சிவஸ்ரீவைத்தீஸ்வர குருக்கள், இலங்கை விடை கொடிச்செல்வர் தனபாலா ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினர். சைவப்பெரியார்கள் திரு. இராமநாதன், திரு. ஆனந்ததியாகர், சைவமுன்னேற்ற சங்கத்தின் தலைவர் திரு. ரவீந்திரமோகன், செயலர் திருமதி. சரோஜினி சந்திரகோபால், பொருளாளர் திருமதி. ராணிசுரேந்திரன், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் திரு. ரவீந்திரதாஸ், சமயச்செயலாளர் திரு. சிவதம்பு, திரு. இந்துசேகரன் ஆகியோர் இந்தத் தொடர் நிகழ்வுக்கான ஏற்பாடுகளை தொடர்ந்து செய்துவருகின்றனர். அவர்களின் சைவத் தமிழ்தொண்டு பாராட்டுக்குரியது.

# 'காதல் மன்னன்' ஜெமினி கணேசனுக்கு 100 வயது



தமிழ்த்திரையுலகில் நடிகர்திலகம் சிவாஜிகணேசனும், புரட்சிநடிகர் எம்ஜிஆரும் கோலோச்சிய காலத்தில் அரசியலில் தோன்றும் 3-வது அணி போல், கதாநாயகனாக வலம் வந்தவர், ஜெமினிகணேசன். தஞ்சை மாவட்டத்தை பூர்வீகமாகக்கொண்டு, புதுக்கோட்டையில் குடியேறிய ராமசாமி அய்யருக்கும், கங்கம்மாவுக்கும் 17-11-1920-ல் பிறந்து, கணபதிசுப்பிரமணிய சர்மா என பெயர் சூட்டப்பட்டவர் தான் பின்னாளில் சினிமாவுக்கு வந்த ஜெமினி.

இவருடைய தந்தை ராமசாமி அய்யர், புதுக்கோட்டை அரண்மனையில் வேலை செய்தார். ஜெமினி 10 வயது சிறுவனாக இருந்தபோதே தந்தை காலமாகிவிட்டார். இதனால் சித்தப்பா வீட்டில் வளர்ந்தார். ஜெமினியின் அத்தை பெயர் முத்துலட்சுமி. இவர் தடைகளை மீறி டாக்டருக்குப் படித்து, ரெட்டி என்பவரை திருமணம் செய்துகொண்டு முத்துலட்சுமி ரெட்டி என்று பிரபலமானார். தேவதாசி முறையை ஒழிக்க சட்டம் கொண்டுவர காரணமானவர் தான், இந்த முத்துலட்சுமிரெட்டி.

ஆரம்பகாலத்தில் ராமகிருஷ்ண மடத்தில் தங்கி படித்த ஜெமினி, பிறகு புதுக்கோட்டை மகாராஜா உயர்நிலைப் பள்ளியில் படித்தபின், தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரியில் படித்து பி.எஸ்சி. பட்டம் பெற்றார். தன் அத்தை முத்துலட்சுமி போல டாக்டர் ஆகவேண்டும் என்று நினைத்தார். ஆனால் அப்போது மருத்துவக்கல்லூரிகள் அதிகம் கிடையாது. இடம் கிடைப்பதும் மிகவும் கஷ்டம்.

அந்த நேரத்தில் திருச்சியைச்சேர்ந்த அலமேலு என்கிற பாப்ஜிக்கும், ஜெமினிக்கும் திருமணம் நடந்தது. ஜெமினியின் மாமனார், திருமணம் முடிந்தபின் டாக்டர் படிக்க சீட் வாங்கித்தருகிறேன் என்று உறுதி அளித்து இருந்தார். ஆனால், திருமணமான கொஞ்சகாலத்திலேயே மாமனார் காலமாகிவிட்டார். இதனால் டாக்டர் ஆகும் ஜெமினியின் கனவு தகர்ந்தது எனவே, வேறு வேலை தேடி, சென்னை கிறிஸ்டியன் கல்லூரி வேதியியல் பிரிவில் விரிவுரையாளராக சேர்ந்தார்.

### சிவாஜி கணேசனை மதிப்பீடு செய்த ஜெமினி கணேசன்

பின்பு அதை விட்டு, ஜெமினி ஸ்டுடியோவில் போய்ச்சேர்ந்தார். மனிதவள ஆற்றல் துறையில் (Human Resource Development) கேஸ்டிங் டைரக்டர் ஆகப் பணியாற்றினார். சினிமாவில் நடிக்க ஆசைப்பட்டு வரும் புதுமுகங்களின் திறமைகளை பரிசோதித்து, ஸ்டுடியோ உரிமையாளர் வாசனுக்கு குறிப்பு எழுதித்தரும் வேலை அது. அந்த வகையில் அவரிடம் பரிசோதனைக்கு வந்தவர் தான், வி.சி. கணேசனாக இருந்து பிறகு நடிப்பின் இமயமாக உயர்ந்த சிவாஜிகணேசன்.



அவருக்கு மேக்கப் டெஸ்ட் எடுத்துப்பார்த்துவிட்டு "இந்த பையனின் கண்ணும் முகமும் அபாரமாக இருக்கிறது. நிச்சயம் ஒரு நல்ல நடிகராக இவர் விளங்குவார்" என்று கம்பெனிக்கு குறிப்பு எழுதிவைத்தார், ஜெமினி. அவர் எழுதிவைத்தது போலவே, சிவாஜிகணேசன் நடிப்புலகின் உச்சம் தொட்டது தனிக்கதை.

பிறகு, 1947-ல் ஜெமினி மிஸ் மாலினி படத்தின் மூலம் அறிமுகமானார். ஜெமினி ஸ்டுடியோவில் பணியாற்றிய அடையாளமே, வெறும் கணேசனாக இருந்த அவருக்கு ஜெமினிகணேசன் என்ற பெயரைக் கொடுத்தது. மிஸ் மாலினியில் அவருக்கு சிறிய வேடம் தான். அடுத்து 1952-ல் வந்த தாயுள்ளம் படத்தில் ஜெமினி கவர்ச்சி வில்லனாக நடித்திருந்தார். (இதன் கதாநாயகன் ஆர். எஸ். மனோகர் பின்னாட்களில் நிரந்தர வில்லனாக நிலைபெற்றவர்).

ஜெமினி கணேசனுக்கு கதாநாயகன் அந்தஸ்து வழங்கிய முதல் படம் 1953-ல் வெளியான "பெண்". இதில் அவர் ஜோடியாக அஞ்சலி தேவி நடித்திருந்தார். அவரது திரைவாழ்க்கையில் அடுத்த படிக்கட்டாக அமைந்தது 1953-ல் வெளியான "மனம்போல மாங்கல்யம்". இதில் அவர் இரட்டை வேடம் ஏற்று நடித்தார். தொடர்ந்து, காதல் மற்றும் குடும்பக் கதைகளில் பெயர் பெற்றுவந்த ஜெமினி கணேசனை அதிரடி நாயகனாக அறிமுகம் செய்தது அவரது தாய் நிறுவனமான ஜெமினி. வஞ்சிக் கோட்டை வாலிபன் திரைப்படம் அவரை ஒரு சாகச நாயகனாக முன் நிறுத்தியது.

இயல்பான நடிப்பிற்குப் பெயர் பெற்ற அவர், புகழ்பெற்ற இயக்குனர்களான பீம்சிங், ஸ்ரீதர், கேஎஸ் கோபாலகிருஷ்ணன், கே. பாலசந்தர் ஆகியோரின் முதல் விருப்பத் தேர்வாக இடம் பெற்றார். கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் இயக்கிய "கற்பகம்", "சித்தி", "பணமா பாசமா", "சின்னஞ்சிறு உலகம்" ஆகிய படங்கள், ஜெமினி கணேசனுக்கு வெற்றிப்படங்களாக அமைந்தன. ஸ்ரீதரின் மாபெரும் காவியமான கல்யாணப் பரிசு படத்தின் நாயகன் ஜெமினி கணேசன்தான்.

கே.பாலச்சந்தர் மிகவும் விரும்பி இயக்கிய நடிகர்களில் ஜெமினி கணேசன் ஒருவர். "தாமரை நெஞ்சம்", "பூவா தலையா", "இரு கோடுகள்", "வெள்ளி விழா", "புன்னகை", "கண்ணா நலமா", "நான் அவனில்லை" எனப் பல படங்களில் இவர்களின் வெற்றிக் கூட்டணி தொடர்ந்தது. "நான் அவனில்லை" திரைப்படத்தை ஜெமினி கணேசனே தயாரித்து, பல வேடங்களில் நடித்திருந்தார். இந்தப்படம் வணிகரீதியில் தோல்வி அடைந்தாலும், பிலிம்பேர் விருதை வென்றது குறிப்பிடத்தக்கது.



நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் பல படங்களில் அவருக்கு ஈடு கொடுத்து நடிப்பாற்றலை வெளிப்படுத்திய பெருமை ஜெமினி கணேசனுக்கு உண்டு. "பாசமலர்", "பாவமன்னிப்பு", "வீரபாண்டிய கட்டபொம்மன்" ஆகியவை சிவாஜிக்கு மட்டுமின்றி ஜெமினிகணேசனுக்கும் வெள்ளிவிழாப் படங்களாக அமைந்தன. ஜெமினி நாயகனாக நடித்து வெள்ளிவிழா கொண்டாடிய படங்கள், பணமா பாசமா, கல்யாணப்பரிசு. எம்.ஜி.ஆருடன் ஜெமினி கணேசன் "முகராசி" என்ற ஒரே ஒரு படத்தில் மட்டுமே இணைந்து நடித்தார்.

### சாவித்திரியுடன் காதலும் கல்யாணமும்

எந்த ஒரு நடிகையுடனும் இயல்பாகப் பொருந்தி விடும் திறன் கொண்டமையாலேயே காதல் மன்னன் என்றும் அவர் அறியப்பட்டார். அவருடன் மிக அதிகமான படங்களில் நடித்தவர்களில் சாவித்திரி, பத்மினி, அஞ்சலிதேவி, சரோஜாதேவி, ஜெயந்தி ஆகியோரைக் குறிப்பிடலாம்.

சாவித்திரியுடன் அவர் நடித்த முதல் படம் "மனம்போல மாங்கல்யம்". இதன் படப்பிடிப்பு நடைபெற்ற வேளையில்தான் இருவரும் காதலித்து மணம் புரிந்து கொண்டனர். இதற்குமுன் இருவரும் இணைந்து நடித்த "மிஸ்ஸியம்மா"வும் மிகப் பெரும் புகழ் பெற்ற படமாகும். இன்று கூட தொலைக்காட்சிகளில் இந்தப்படத்தைப்பார்க்கும் பலரும், "இவ்வளவு நேர்த்தியாக கதை சொல்ல முடியுமா?" என வியந்து பாராட்டுவார்கள்.



பின்னணிப் பாடகர்களில் டி.எம். சவுந்தரராஜனின் குரல், சிவாஜிக்கும், எம்ஜிஆருக்கும் கச்சிதமாகப் பொருந்தும். அதேபோல் ஜெமினி கணேசனுக்கான திரைக்குரலாகவே அறியப்பட்டவர்கள் இருவர்: முதலாமவர், அவருடைய ஆரம்பகாலப் படங்களில் பின்னணி பாடிய ஏ. எம். ராஜா. இரண்டாமவர், பன்மொழி வித்தகரான பி. பி. சீனிவாஸ். இயல்பாகவே மென்மையான குரல் கொண்டிருந்த ஜெமினி கணேசனுக்கு இவர்கள் இருவரது குரலும் மிக அற்புதமாகப் பொருந்தி விட்டது.

ஏஎம் ராஜாவின் "பாட்டுப்பாட வா", பிபி சீனிவாசின் "காதல் நிலவே கண்மணிராதா", "இளமைக்கொலுவிருக்கும்", "துள்ளித்திரிந்த பெண்ணொன்று துயில் கொண்டதேனின்று", "மயக்கமா கலக்கமா" போன்ற பாடல்களை குறிப்பிட்டுச்சொல்லலாம்.

தமிழில் மட்டும் 97 படங்களில் நடித்துள்ள ஜெமினி, பிறமொழிப்படங்களையும் சேர்த்து 200 படங்கள் வரை நடித்துள்ளார். அவர் நாயகனாக நடித்த கடைசிப்படம் சுஜாதாவுடன் நடித்து வெளிவந்த "லலிதா". சிவாஜியின் நண்பனாக அவர் நடித்த "உனக்காக நான்" படமும் அதே காலகட்டத்தில் வந்தது. பிறகு குணச்சித்திர வேடங்களில் நடித்தார். அவற்றில், கமலஹாசனின் தந்தையாக அவர் நடித்த "உன்னால் முடியும் தம்பி" சிறப்பான இடம் பெற்றது. அவர் கடைசியாக நடித்த படம், "அவ்வை சண்முகி"யாக வந்த கமலை காதலிக்கும் காதல் மன்னன் வேடமாகவே அமைந்தது.

ஜெமினி கணேசன் இயக்கிய ஒரே படம் "இதய மலர்". இந்தப் படத்தில் "லவ் ஆல்" என்று தொடங்கும் ஒரு பாடலை ஜெமினி கணேசன் பாடியிருக்கிறார்.

### 70 வயதிலும் திருமணம்

ஜெமினி - பாப்ஜி தம்பதிக்கு ரேவதி, கமலா, நாராயணி, ஜெயலட்சுமி ஆகிய மகள்கள்; ஜெமினி ஸ்டுடியோ தயாரிப்புகளில் நடிக்கவந்த புஷ்பவல்லியை கணேசன் காதலித்து இரண்டாவது மனைவியாக திருமணம் செய்து கொண்டார். ஜெமினி - புஷ்பவல்லி தம்பதிக்கு ராதா, ரேகா ஆகிய 2 மகள்கள். இவர்களில் ரேகா, இந்தி சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வந்தவர்.

ஜெமினி - சாவித்திரி தம்பதிக்கு விஜய சாமுண்டீஸ்வரி என்ற மகளும், சதீஷ் என்ற மகனும் உண்டு. ஜெமினி தன் 70-வது வயதில் ஜூலியானா என்ற தன்னுடைய காரியதரிசியை திருமணம் செய்துகொண்டார்.

ஜெமினிகணேசனுக்கு அரசியல் ஆர்வம் கிடையாது. ராஜீவ்காந்தி பிரதமராக இருந்தபோது, ஜெமினிகணேசனுக்கு மாநிலங்களவை நியமன எம்பி பதவி அளிக்க முன்வந்ததாகவும், ஜெமினி வேண்டாம் என மறுத்து விட்டதாகவும் சொல்வார்கள். ஜெமினி கணேசன் பெற்ற விருதுகள்: பத்மஸ்ரீ, கலைமாமணி, பிலிம்பேர், எம்ஜிஆர் தங்கப் பதக்கம் ஆகியன.

சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப்பட்டு இருந்த ஜெமினிகணேசன், 22-03-2005 அன்று தனது 85-வது வயதில் சென்னையில் மரணம் அடைந்தார். இன்று (17-11-2020) அவருக்கு 100 வயது. ஜெமினியின் புகழ் இன்னும் நூறாண்டு நிலைத்திருக்க வாழ்த்துகள்!

உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவீதத்தில் அடைவு பிடிக்கப்படும்



PAWN BROKERING
பழைய பவுண்கள் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளப்படும்
Cash Point



துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.
Cash Point
3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000

Amma Brand

# இப்பொழுது கனடாவிலும் கிடைக்கின்றது!









# அன்பின் தொனி - 587

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**தேவனே, நீர் என் பொருத்தனைகளைக் கேட்டீர்,**

தேவனே, என் கூப்பிடுதலைக் கேட்டு, என் விண்ணப்பத்தைக் கவனியும். என் இருதயம் தொய்யும்போது பூமியின் கடையாந்தரத்திலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் என்னைக் கொண்டுபோய்விடும். நீர் எனக்கு அடைக்கலமும், சத்துருவுக்கு எதிரே பெலத்த துருகமுமாயிருந்தீர். நான் உம்முடைய கூடாரத்தில் சதாகாலமும் தங்குவேன், உமது செட்டைகளின் மறைவிலே வந்து அடைவேன். தேவனே, நீர் என் பொருத்தனைகளைக் கேட்டீர், உமது நாமத்திற்குப் பயப்படுகிறவர்களின் சுதந்தரத்தை எனக்குத் தந்தீர். ராஜாவின் நாட்களோடே நாட்களைக் கூட்டுவீர், அவர் வருஷங்கள் தலைமுறை தலைமுறையாக இருக்கும். அவர் தேவனுக்கு முன்பாக என்றென்றைக்கும் நிலைத்திருப்பார், தயையும் உண்மையும் அவரைக் காக்கக் கட்டளையிடும். இப்படியே தினமும் என் பொருத்தனைகளை நான் செலுத்தும்படியாக, உமது நாமத்தை என்றைக்கும் கீர்த்தனம் பண்ணுவேன். **- சங்கீதம் 61: 1-8**

**ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது**

தேவனே, நீர் என்னுடைய தேவன், அதிகாலமே உம்மைத் தேடுகிறேன், வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றது மான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது. இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப்பார்க்க ஆசையாயிருந்து, உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன். ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது, என் உதடுகள் உம்மைத் துதிக்கும். என் ஜீவனுள்ளமட்டும் நான் உம்மைத் துதித்து, உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன். நிணத்தையும் கொழுப்பையும் உண்டது போல என் ஆத்துமா திருப்தியாகும், என் வாய் ஆனந்தக்களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும். என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கும்போது, இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன். நீர் எனக்குத் துணையாயிருந்ததினால், உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன். என் ஆத்துமா உம்மைத் தொடர்ந்து பற்றிக்கொண்டிருக்கிறது, உமது வலதுகரம் என்னைத் தாங்குகிறது. என் பிராணனை அழிக்கத் தேடுகிறவர்களோ, பூமியின் தாழ்விடங்களில் இறங்குவார்கள். அவர்கள் பட்டயத்தால் விழுவார்கள், நரிகளுக்கு இரையாவார்கள். ராஜா வோ தேவனில் களிகூருவார், அவர்பேரில் சத்தியம்பண்ணுகிறவர்கள் யாவரும் மேன்மைபாராட்டுவார்கள், பொய் பேசுகிறவர்களின் வாய் அடைக்கப்படும்.
**- சங்கீதம் 63: 1-11**

**நீதிமான் கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவரை நம்புவான்.**

தேவனே, என் விண்ணப்பத்தில் என் சத்தத்தைக் கேட்டருளும், சத்துருவால் வரும் பயத்தை நீக்கி, என் பிராணனைக் காத்தருளும். துன்மார்க்கர் செய்யும் இரகசிய ஆலோசனைக்கும், அக்கிரமக்காரருடைய கலகத்துக்கும் என்னை விலக்கி மறைத்தருளும். அவர்கள் தங்கள் நாவைப் பட்டயத்தைப்போல் கூர்மையாக்கி, மறைவுகளில் உத்தமன்மேல் எய்யும்பொருட்டுக் கசப்பான வார்த்தைகளாகிய தங்கள் அம்புகளை நாணேற்றுகிறார்கள், சற்றும் பயமின்றிச் சடிதியில் அவன்மேல் எய்கிறார்கள். அவர்கள் பொல்லாத காரியத்தில் தங்களை உறுதிப்படுத்திக் கொண்டு, மறைவான கண்ணிகளை வைக்க ஆலோசனைபண்ணி, அவைகளைக் காண்பவன் யார் என்கிறார்கள். அவர்கள் நியாயக்கேடுகளை ஆய்ந்துதேடி, தந்திரமான யோசனை நிறைவேறும்படி பிரயத்தனம்பண்ணுகிறார்கள், அவர்களில் ஒவ்வொருவனுடைய உட்கருத்தும் இருதயமும் ஆழமாயிருக்கிறது. ஆனாலும் தேவன் அவர்கள்மேல் அம்புகளை எய்வார், சடிதியாய் அவர்கள் காயப்படுவார்கள். அவர்கள் தள்ளப்பட்டு, கீழேவிழும்படி அவர்கள் நாவுகளே அவர்களைக் கெடுக்கும், அவர்களைக் காண்கிற யாவரும் ஓடிப்போவார்கள். எல்லா மனுஷரும் பயந்து, தேவனுடைய செயலை அறிவித்து, அவர் கிரியையை உணர்ந்துகொள்வார்கள். நீதிமான் கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவரை நம்புவான், செம்மையான இருதயமுள்ளவர்கள் யாவரும் மேன்மைபாராட்டுவார்கள்.
**- சங்கீதம் 64: 1-10**

**தேவரீர் பூமியை விசாரித்து அதற்கு நீர்ப்பாய்ச்சுகிறீர்**

தேவனே, சீயோனில் உமக்காகத் துதியானது அமைந்து காத்திருக்கிறது, பொருத்தனை உமக்குச் செலுத்தப்படும். ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள். அக்கிரம விஷயங்கள் என்மேல்மிஞ்சி வல்லமைகொண்டது, தேவரீரோ எங்கள் மீறுதல்களை நிவிர்த்தியாக்குகிறீர். உம்முடைய பிராகாரங்களில் வாசமாயி ருக்கும்படி நீர் தெரிந்துகொண்டு சேர்த்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான், உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம். பூமியின் கடையாந்தரங்களிலும் தூரமான சமுத்திரங்களிலுமுள்ளவர்கள் எல்லாரும் நம்பும் நம்பிக்கையாயிருக்கிற எங்கள் இரட்சிப்பின் தேவனே, நீர் பயங்கரமான காரியங்களைச் செய்கிற தினால் எங்களுக்கு நீதியுள்ள உத்தரவு அருளுகிறீர். வல்லமையை இடைகட்டிக்கொண்டு, உம்முடைய பலத்தினால் பர்வதங்களை உறுதிப்படுத்தி, சமுத்திரங்களின் மும்முரத்தையும் அவைகளுடைய அலைகளின் இரைச்சலையும், ஜனங்களின் அமளியையும் அமர்த்துகிறீர். கடையாந்தர இடங்களில் குடியிருக்கிறவர்களும் உம்முடைய அடையாளங் களினிமித்தம் பயப்படுகிறார்கள், காலையையும் மாலையையும் களிகூரப்பண்ணுகிறீர். தேவரீர் பூமியை விசாரித்து அதற்கு நீர்ப்பாய்ச்சுகிறீர், தண்ணீர் நிறைந்த தேவநதியினால் அதை மிகவும் செழிப்பாக்குகிறீர், இப்படி நீர் அதைத் திருத்தி, அவர்களுக்குத் தானியத்தை விளைவிக்கிறீர். அதின் வரப்புகள் தணியத்தக்கதாய் அதின் படைச்சால் களுக்குத் தண்ணீர் இறைத்து, அதை மழைகளால் கரையப்பண்ணி, அதின் பயிரை ஆசீர்வதிக்கிறீர். வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர், உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது. வனாந்தர தாபரங்களிலும் பொழிகிறது, மேடுகள் சுற்றிலும் பூரிப்பாயிருக்கிறது. மேய்ச்சலுள்ள வெளிகளில் ஆடுகள் நிறைந்திருக்கிறது, பள்ளத்தாக்குகள் தானியத்தால் மூடியிருக்கிறது, அவைகள் கெம்பீரித்துப் பாடுகிறது. **- சங்கீதம் 65: 1-13**

*தொடரும்...*


கேரளா மூலிகை மருத்துவம்

வைத்திரயர் - சஞ்சீவ ராஜூ

பரம்பரை மூலிகை வைத்தியசாலை
பதினொரு பரம்பரையாக நாடி பார்த்து உங்களது உடம்பிலிருக்கும் நோய்களைக் கண்டறிந்து அதற்கேற்ற மருந்துகளை தருகின்ற வைத்தியர் பரம்பரையைச் சேர்ந்த சஞ்சீவ ராஜூ இந்தியா முதல் மலேசியா, சிங்கப்பூர், பிரான்ஸ், ஜேர்மன், லண்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்று மருத்துவம் செய்த பின் தற்போது கனடா வந்துள்ளார்.

பல இடங்களில் மருத்துவம் செய்து நம்பிக்கை இழந்து விட்டீர்களா? கவலைப் பட வேண்டாம். பக்க விளைவுகளற்ற தகுந்த மருந்துகளைப் பெற்று உங்கள் வருத்தங்கள் குணமாக ஒரு முறை நம்மிடம் வாருங்கள். நல்ல தீர்வு பெற்றுச் செல்லுங்கள். இலவச ஆலோசனை வழங்கப்படும்.





வேர், பச்சை இலைகள், பட்டைகள், கிழங்குகளில் இருந்து பெறப்பட்டு பொடியாக, கசாயமாக, குளிசைகளாக, லேகியமாக இந்த இயற்கை மருந்துகள் தரப்படும். எந்தவித பக்க விளைவுகளும் கிடையாது! நம்பி வாருங்கள்! நலமுடன் வாழுங்கள்!


ஆஸ்துமா, அலர்ஜி, மூச்சுத்திணறல், தும்மல், நெஞ்சுச்சளி, தோல் வியாதி சொறியாஸிஸ், முடக்குவாதம், மூட்டு வலி, வயிற்றுவலி, இடுப்பு வலி, முதுகு வலி, கை-கால் வலி, கழுத்துவலி, ஒற்றைத் தலைவலி, பக்க வாதம், நரம்புத் தளர்ச்சி, நீரழிவு (சர்க்கரை வியாதி), சிறுநீரகக்கற்கள், வாய்வுத் தொல்லைகள், குடற் புண், இரத்த பலம் அபிவிருத்தி, ஆண்களுக்கான பிரச்சனைகள், ஆண்மைக் குறைவு, உடல் பருமன்-குறைக்க, கூட்டுவதற்கு, முடி உதிர்தல், ஞாபக மறதி, உள்மூலம், வெளிமூலம், பகந்திரி மூலம், கால் வெடிப்பு, மஞ்சட்காமாலை, வெண்குஷ்டம், பெண்களுக்கான மாதவிடாய்ப் பிரச்சனை, நெஞ்செரிதல், மலச்சிக்கல், செக்ஸ் பிரச்சினை, மன அழுத்தம், காக்கா வலிப்பு, ஞாபக மறதி, சரவாங்கி போன்ற நோய்களை மூலிகை வைத்தியம் மூலம் குணப்படுத்த முடியும். அத்துடன் கர்ப்பப்பை கோளாறுகள், குழந்தையின்மைக்கான மருத்துவத்துடன், சகல நோய்களுக்கும் சிகிச்சை செய்யப்படும். அத்துடன் போதைப் பொருட்களை உட்கொள்ளும் பழக்கத்தை மறப்பதற்கான மருந்துகளும் தரப்படும்.

2900 MARKHAM ROAD, MajesticCity UNIT L 13 ,
OPP. VASANTHAM SUPER MARKET, MARKHAM RD,
SCARBOROUGH, ON, M1X 1E6

647-294-3189

# 18ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
16 - 02 - 1984



ஆண்டவன் அணைப்பில்
23 - 11 - 2002

மறையாத நினைவுகள்

## செல்வன் சந்திரபோஸ் நிர்மலன் (Shan)



எங்கு சென்றாலும் தொடரும் நிலவாய்
எங்களை எப்போதும் பின் தொடர்ந்து வரும்
உன் நினைவுகள்...

சொல்லாமல் பிரிந்தாயே திரும்பமுடியாத பாதையில்..
கண்ணீர் என்பது உடலால் மட்டுமல்ல
உணர்வாலும் வருவது
மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ
கலையாத நினைவுகளுடன் உதிரும்
கண்ணீர் பூக்களாய் அர்ச்சித்து

உன் ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்

என்றும் உன் நீங்காத நினைவுகளுடன்.
உன் உறவுகளாக நாங்கள்

**என்றும் உன் நீங்காத நினைவுகளுடன் உனது குடும்பம்**
**(905) 554-2433**

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
iNFORCE LIFe Financial Services Inc.
RESP Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் ஒலிக்கும் ஒரு வீச்சு வாரச் செய்தி இதழ்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
TORONTO, ON. M1R 1P7
PARK PLAZA (BETWEEN LAWRENCE & EGLINTON)
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1285 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 20, 2020

# கனடா கிறிஸ்த்தவக் கல்லூரியை பல்கலைக் கழகமாக தரம் உயர்த்துவதற்கு கனடிய தேசிய ஊடகங்கள் எதிர்ப்பு



ரொரன்ரோவில் இயங்கிவரும் கனடா கிறிஸ்த்தவக் கல்லூரியை பல்கலைக் கழகமாக தரம் உயர்த்துவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பல கனடிய தேசிய ஊடகங்கள் தாக்கமான விடயங்களை வெளியிட்டு வருகின்றன. இதேவேளை ஒன்றாரியோ என்டிபி கட்சியின் தலைவர் அன்றியா உட்பட பல எம்பிபிக்கள் முதல்வரின் இந்த எண்ணத்திற்கு தாங்கள் ஆதரவு தரப்போவதில்லை என்றும் ஒன்றாரியோ அரசின் அனுமதியை இந்த கல்லூரிக்கு வழங்குவதை தமது கட்சி எதிர்த்து நிற்கும் என்றும் ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கனடிய தேசிய ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில், கனடா கிறித்தவக் கல்லூரியின் நிறுவனர் Charles McVety என்பவர் பல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர் என்றும் தெரிவித்துள்ளன.

மேலும் Charles McVety இற்கு எதிரான குற்றச்சாட்டுகளில் அவர் ஒருபால் ஆண் மற்றும் பெண்களின் உறவு, திருநங்கைகள் , ஆகியவற்றுக்கு எதிரான கருத்துக்களை பரப்புகின்றவர் என்றும் மேலும், இஸ்லாமியர்களுக்கு எதிராகவும் தீவிரமான கருத்துக்களை பகிர்ந்து வருகின்றவர் என்று தேசிய ஊடகங்களும் ஒன்றாரியோ கட்சியும் குற்றஞ்சாட்டியுள்ளன.”

இந்த விடயம் தொடர்பாக கருத்துக்களைக் கூறிய ஒன்றாரியோ மாகாணத்தின் உயர் கல்வி மற்றும் பல்கலைக் கழகங்களுக்கான அமைச்சரான Ross Romano அவர்கள், ”கனடா கிறிஸ்த்தவக் கல்லூரியானது, பல்கலைக் கழகமாக தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற விண்ணப்பத்தை எனது அமைச்சின் அதிகாரிகள் பரிசீலனை செய்து அதன் பின்னர் அந்த அனுமதியை வழங்குவதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பார்கள். எனவே, இந்த அனுமதி வழங்களுக்கும், விண்ணப்பத்தை அனுப்பிய கல்லூரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கும் தொடர்பில்லை” என்று குறிப்பிட்டுள்ளார்.




# நியூசிலாந்து தேசத்தில் முஸ்லிம் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தங்கள் மதம் சார்ந்த சீருடையுடன் அறிமுகமாகின்றனர்

நியூசிலாந்து தேசத்தில் அதிகளவு முஸ்லிம் வாழ்ந்து வருகின்றார்கள். எனவே அங்கு புதிய அங்கு அதிக முஸ்லிம் பெண்கள் பொலிஸ் திணைக்களத்தில் இணைவதை ஊக்குவிப்பதற்காக நியூசிலாந்தில் ஹிஜாப்புடனான உத்தியோகபூர்வ பொலிஸ் சீருடை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரான ஸீனா அலி இந்த சீருடையை அணியும் முதல் பெண்ணாக பதிவாகியுள்ளார்.

நாட்டின் பன்முகச் சமூகங்களை பிரதிபலிக்கும் வகையில் பொலிஸ் சேவையை உருவாக்குவதற்கு திட்டமிடுவதாக பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். லண்டன் பெருநகர பொலிஸார் மற்றும் ஸ்கொட்லாண்ட் பொலிஸில் பெண்கள் ஹிஜாப் அணிவதற்கான அனுமதி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் மொத்தமாக 73 கொரோனா மரணங்கள் இதுவரை சம்பவித்துள்ளன. அரசாங்கம் கலக்கத்தில்...

இலங்கையில் 73 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளமை அரசாங்கத்தையும் சுகாதார அமைச்சரையும் கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார். மூன்று நாட்களுக்கு முன்னர் 51 ஆக இருந்த மரணங்கள் இவ்வளவு விரைவாக 73 ஆக உயர்ந்திருப்பது, மக்கள் மனங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

இலங்கையில் கொவிட்-19 தொற்று தொடர்பான மேலும் 4 மரணங்கள் பதிவாகியுள்ளதாக, தேசிய தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு அறிவித்துள்ளது. இலங்கையில் ஏற்கனவே 69 கொரோனா மரணங்கள் பதிவான நிலையில், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள 4 மரணங்களுடன், இதுவரை இலங்கையில் 73 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2 ஆண்களும், 2 பெண்களுமே இவ்வாறு மரணமடைந்துள்ளனர். கொழும்பு 10 ஐச் சேர்ந்த 70 வயது ஆண் ஒருவர், கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலும், கொழும்பு 15ஐச் சேர்ந்த 27 வயதான பெண் ஒருவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும், களுத்துறை மாவட்டம், பொகுணுவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த, 59 வயதான பெண் ஒருவர், வீட்டில் வைத்தும், களுத்துறை மாவட்டம், ஹல்தொட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 86 வயதான ஆண் ஒருவர் வீட்டில் வைத்தும் மரணமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை கொவிட்-19 தொடர்பான 3 மரணங்களும், செவ்வாய்கிழமை (17) 5 மரணங்களும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. நேற்று வியாழக்கிழமை19ம் திகதி, இதுவரை பேலியகொடை கொத்தணியை சேர்ந்த 437 பேரும், இந்திய கடல் பணியாளர்கள் 2 பேரும் என, மொத்தமாக 439 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

## ஒன்றாறியோவிலுள்ள வர்த்தக ஸ்தாபனங்களில்... *முன் பக்கத் தொடர்ச்சி*

கொறொனாத் தொற்றுக்கு எதிராக தமது மாகாண அரசின் புதிய நடவடிக்கைகள் பற்றிய அறிவிப்பில் அவர் தெரிவிக்கையில்

“எமது அரசாங்கம் மாகாணத்திலுள்ள வர்த்தக ஸ்தாபனங்களை கடுமையாக பரிசோதிக்கும் வண்ணம் பல பரிசோதகர்களை நியமித்துள்ளது. அவர்கள் தினமும் பல வர்த்தக ஸ்தாபனங்களுக்கு விஜயம் செய்து அங்கு தகுந்த சுகாதாரப் பாதுகாப்பு முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதை கவனிக்கின்றார்கள். அத்துடன் அங்கு பணியாற்றும் வேலையாட்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் சுகாதார கட்டுப்பாடுகளை கவனமாகக் கடைபிடிக்கின்றார்களா, மேலும் தகுந்து முறையில் அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதையெல்லாம் கவனித்து, அவ்வாறு சரியாகச் செய்யாதவர்களுக்கு எமது அதிகாரிகள் கற்பிக்கின்றார்கள். இ.த ஏற்பாடு பல நன்மைகளை ஏற்படுத்தும்” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.